
தர்மசக்கரம்









ரக்தாக்ஷி ௵ தை ௴ சக்கரம் 34 ஆரம் 1

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

வேண்டுகோள்

சேலத்தில் நடைபெற்று வருகின்ற ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியைப் பூர்த்தி பண்ணுவதற்காக 1974ஆம் ஆண்டு தர்ம சக்கரத்தின் மூலம் டிபாசிட் வேண்டுமென்று கோரினோம். அதற்காக அன்பர்களிடமிருந்து சுமார் 20 லக்ஷம் ரூபாய் டிபாஸிட்டாக வந்து சேர்ந்தது. அத்தொகையை வைத்துக்கொண்டு அதிவிரைவில் அந்த ஸ்தாபனத்தை பூர்த்திபண்ணினோம். டிபாஸிட்களும் குறித்த காலத்தில் திருப்பி செலுத்தப்பட்டுள்ளன.

இப்பொழுது திருநெல்வேலியில் இந்து மகளிர் கல்லூரி ஒன்றுக்கு தேவை ஏற்பட்டுள்ளது. அதன் அவசியத்தை உணர்ந்த தபோவனம் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலிக்கு அருகில் சுமார் 5 மைல் தூரத்தில் தூத்துக்குடி போகும் பாதையை ஒட்டி உள்ள தளவாய் முதலியார் தர்ம டிரஸ்டை சேர்ந்த பூமியில் இக் கல்லூரி கட்டுவதற்காக என்று 75 ஏக்கர் நிலத்தை நிரந்தர குத்தகைக்கு எடுத்து ரிஜிஸ்டர் செய்துள்ளோம். 1985ஆம் ஆண்டு ஜூலையில் இக்கல்லூரி திறப்பதற்கு அரசாங்கத்திடம் விண்ணப்பம் போட்டுள்ளோம்.

இதில் அபிமானம் கொண்டுள்ள அன்பர்கள் சேலத்துக்கு உதவியது போன்று இதற்கும் டிபாசிட் மூலம் உதவிசெய்ய முன் வரவேண்டுமென்று வேண்டுகிறோம்.

டிபாஸிட்களுக்கு முறையே டிபாஸிட் ரசீது வழங்கப்பெறும். ஒரு ஆண்டு கெடுவிற்கு 9% வீதமும் இரண்டு ஆண்டு கெடுவிற்கு 10% வீதமும் மூன்று ஆண்டும் அதற்கு மேலும் உள்ள கெடுவிற்கு 11% வீதமும் வட்டி தரப்படும். எப்பொழுது வேண்டுமானாலும் முதலை திரும்பி பெற்றுக்கொள்ளலாம். அதற்கு மேலே குறித்துள்ள படி கெடுவிற்கு ஏற்ற வட்டி விகிதம் வட்டி கணக்கிட்டு திருப்பித்தரப்படும். இங்ஙனம் டிபாஸிட் செய்யும் தொகை ரூபாய் ஒரு ஆயிரத்துக்கு கீழ் போகக்கூடாது. வட்டி ஆண்டிற்கு ஒரு முறை செலுத்தப் பெறும்.

பணம் அனுப்பும் முறை: ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் என்ற பெயரில் தாங்கள் அனுப்புகிற தொகைக்கு திருச்சியில் உள்ள பேங்குகளில் மாற்றத் தக்கதாக டிராப்ட் எடுத்து A/c Payee என்று கிராஸ் செய்து தபாலில் தபோவனத்துக்கு அனுப்பிவைக்கலாம். யார் பெயருக்கு ரசீது போடவேண்டுமோ அவரது தபால் விலாசத்தை தெளிவாக எழுதி அனுப்பவேண்டுகிறோம்.

ஏற்கனவே தபோவனத்தில் டிபாஸிட் செய்துள்ள தொகைகளுக்கு 1-1-85ஆம் தேதி முதல் மேற்படி வட்டி விகிதப்படியே வட்டி தரப்படும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சிராப்பள்ளி ஜில்லா
24—12—84

சுவாமி சித்பவானந்த
தலைவர்

83-2

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	ரக்தாக்ஷி ஹூ தை மீ	ஆரம் 1

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகைவேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

இராமநாதபுரம் ஜில்லா—இராஜபாளையத்தில் 20—1—85 ஞாயிறு

இடம்: பழையபாளையம் பாரதி கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: மதிய உணவுக்கு ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 20—1—85 ஞாயிறு

இடம்: திருமுருகன் பப்ளிக்ஸ்கூல், கடலையூர் ரோடு, கோவில்பட்டி.
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—முக்கூடலில் 20—1—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சொக்கலால் சரஸ்வதி வித்யாசாலை ஆரம்பப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை மாவட்டம்—கம்பத்தில் 20—1—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ முத்தையாபிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்
உணவு வசதி: பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 27—1—85 ஞாயிறு

இடம்: அருள்மிகு அகஸ்தியர் திருக்கோவில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருச்சி ஜில்லா—கைலாசபுரத்தில் 3—2—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாய்லர் பிளாண்ட் நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் நண்பகல் 1-00 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 3—2—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: இராமகிருஷ்ண சத்சங்க பிரார்த்தனை மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

வடஆற்காடு ஜில்லா—ஆரணியில் 10—2—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: குசப்பாளையம், தர்மராஜா கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கரூரில்—10—2—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதீஸ்வரர் கோயில்
நேரம்: மாலை 6-00 மணிமுதல் இரவு 8-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

ज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34 | ரக்தாக்ஷி ஹு தை மீ | ஆரம் 1

பிரார்த்தனை

तं देशिकेन्द्रं परमं पवित्रम् विश्वस्य पालं मधुरं यतीन्द्रम् ।
हिताय नृणां नरमूर्तिमन्तम् विवेक आनन्द महं नमामि ॥

— रामकृषणानन्द स्वामिजी

தம் தேசி கேந்த்ரம் பரமம் பவித்ரம் விஸ்வஸ்ய பாலம் மதுரம் யதீந்த்ரம்
ஹிதாய ந்ருணும் நரமூர்த்திமந்தம் விவேக ஆனந்த மஹம் நமாமி

— ராமகிருஷ்ணனந்த சுவாமிகள்

குருவுக்கும் மேலான குருவே, பரிபூர்ண தூய்மையின் இருப்பிடமே, உலகைக் காக்க வந்த காவலனே, இனிமையின் உறைவிடமே, யோகராஜனே, மனித குலத்தை உய்விக்க மானுட வடிவம் எடுத்த எம் விவேகானந்தப் பெருந்தகையே, உம்மை நமஸ்கரிக்கிறேன்.

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றை சிவனே எம்பெருமான் எம்
மானே உன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

— மாணிக்கவாசகர்

அருள் விருந்து

நலனுக்காகப் போராடாதவர்கள் அடிமைகளாம்.

இறைவா! என்னை உனக்கு உரியவனாக்கிக்கொள்.

அடக்கத்தில் மேன்மையிருப்பதை விவேகி அறிகிறான்.

நெறி பிறழ்கின்ற ஒருவன் துன்பத்துக்கு ஆளாகிறான்.

பாதுகாப்புடன் செய்யப்படும் கடவுள் வழிபாடு வழிபாடு ஆகாது.

பயங்கொள்ளியைவிடப் பலாத்காரத்தில் ஈடுபடுகிறவன் மேலானவன்.

ஸத்தியத்தில் நிலைத்து நில்; வெற்றியையும், தோல்வியையும் பொருள்படுத்தாதே.

கசிந்து பிரார்த்தனை பண்ணுகிறவன் கடவுள் அருளுக்குப் பாத்திரமாகின்றான்.

அகங்காரம் ஒடுங்கினாலொழிய ஆத்ம சாதகன் பரமனை அறிந்துகொள்ள மாட்டான்.

ஆத்ம ஞானம் அந்தக்கரண பரிபாகத்துக்குரியது. ஏட்டுக்கல்வி அதற்கு உதவமாட்டாது.

மனிதனுடைய உள்ளத்தில் கலைஞானமும், சிருஷ்டிக்கும் வன்மையும் புதைந்திருக்கின்றன.

இறைவனுடைய திட்டத்துக்கு உட்பட்டு நடப்பது அறநெறி. அதற்கு மாறாக நடப்பது தீயசெயல்.

விருப்பும், வெறுப்பும் மனிதனுக்கு உதவமாட்டா. அன்பைச் சார்ந்திருப்பவன் பரத்திற்கு உரியவனாகின்றான்.

சந்தைக் கடையில் சரீரத்தைக் கொண்டு காரியங்கள் செய்வதற்கிடையில் மனதை ஏகாந்தத்தில் வைத்திருப்பது சாத்தியம்.

திட்டம் போடுகிறவன் தோல்வியடைகிறான். கடவுளைச் சார்ந்திருந்து அவர் ஆணைப்படி நடக்கின்றவன் வெற்றியடைகிறான்.

தீமையை எதிர்த்துப் போராடுகிறவன் தீமையை வளர்க்கிறான். மற்று, தெய்வத்தைச் சார்ந்திருந்து நலன் புரிகிறவன் நலனை வளர்க்கிறான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் மகேந்திரருடன் தொடர்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார்.

பரமஹம்சதேவர்: "உலகத்தவர்களுக்கிடையிலும் உலக ஆசைகளில் ஈடுபடாத இளைஞர்களுக்கிடையிலும் வித்தியாசம் இருப்பதைக் காண்பாய். சிறிது நேரத்துக்கு முன்பு நம்மோடு உரையாடிக்கொண்டிருந்த பண்டிதர் பணம் சம்பாதிப்பதைக் குறித்துக் கவலைமிகக் கொண்டுள்ளார். தம் ஊரைவிட்டு அவர் கல்கத்தாவுக்கு வந்திருப்பது பணம் சம்பாதித்தல் பொருட்டேயாம். இவர் ஏதாவது பொருள் தேடாவிட்டால் இவர் வீட்டிலிருக்கின்றவர்கள் பட்டினி கிடக்கவேண்டியதாகும். எனவே ஏதாவது பொருள் சேகரித்தல் பொருட்டு அவர் இங்குமங்கும் அலைந்து திரிந்தாக வேண்டும். இங்ஙனம் பணப்பித்துப் பிடித்தவராகத் திண்டாடிக் கொண்டிருக்கும் இவர் பரம்பொருளைக் குறித்துத் தியானம் பண்ண முடியுமா? ஆனால் உலக ஆசைகளில் ஈடுபடாதிருக்கும் தூய மனம் படைத்துள்ள இளைஞர்கள் போக்கு அலாதியானது. காமத்திலோ காசு ஆசையிலோ பாழடைந்து போகாத மனம் படைத்துள்ள இளைஞர்கள் விரும்புகிறபொழுதெல்லாம் கடவுளைக் குறித்து தியானம் பண்ண வல்லவராயிருக்கின்றனர்."

"இளைஞர்களிடம் மற்றொரு சிறப்பு இயல்பு உண்டு. உலகத்தவர்களோடு ஒட்டி உறவாட அவர்கள் ஒருப்படுவதில்லை. 'உலக ஆசையிலேயே உழன்றுகொண்டிருப்பவர்களுடைய காட்சி என் கண்ணில் படுமானால் நான் திகில் மிக அடைகிறேன்' என்று ராக்கால் என்னிடம் இயம்புவதுண்டு. முதன் முதலில் நான் ஆத்ம சாதனத்தில் ஈடுபட்டபொழுது அதன் விளைவாக அமைதியையும், ஆனந்தத்தையும் பெறலானேன். அங்ஙனம் சாதனத்தில் நான் முன்னேற்றம் அடைந்து வந்தபொழுது உலகத்தவர்கள் என்னை அணுகுவார்களானால் உடனே நான் என் அறையின் வாயிலை மூடிக்கொள்வேன்.

"நான் பிறந்த கிராமமாகிய கமார்ப்புகூரில் இளைஞனாக வாழ்ந்திருந்தபொழுது ராம் மல்லிக் என்பவரோடு நான் ஒட்டி உறவாடி வந்தேன். எங்கள் இளமைப் பருவத்தில் நாங்கள் இருவரும் மிக நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்திருந்தோம். அல்லும் பகலும் நாங்கள் ஒன்றுகூடியிருப்பது எங்களுடைய வழக்கமாக இருந்து வந்தது. நாங்கள் உறங்கியது ஓர் இடத்திலேயாம். அப்பொழுது எனக்கு வயது சுமார் பதினாறு அல்லது பதினேழு இருக்கலாம். நாங்களிருவரும் கொண்டிருந்த நெருங்கிய இணக்கத்தைக் காணலுற்றவர்கள் இங்ஙனம் இயம்பினார்கள்: 'இந்த இரண்டு இளைஞர்களுள் ஒருவன் யுவனாகவும் மற்றவன் யுவதியாகவும் அமைந்திருப்பார்களானால் நிச்சயமாக இவர்கள் தங்களுள் காதல் மணம் பூண்டு கொள்ளுவார்கள்.' நாங்கள் இருவரும் எங்கள் தோழன் வீட்டில் விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம். அந்நாட்களைப்பற்றிய ஞாபகம் தெளிவாக என் உள்ளத்தின் உள்ளே இப்பொழுதும் இருந்து வருகிறது. அவனுடைய சுற்றத்தார் பல்லக்கில் ஊர்ந்து அவனுடைய வீட்டிற்கு வருவதுண்டு.

"இப்பொழுது கல்கத்தாவிலே சரணக் என்னும் பகுதியில் அந்த ராம்மல்லிக் கடை ஒன்று வைத்திருக்கிறார். அவரைச் காண விரும்பிய நான் இரண்டு மூன்று தடவை அவருக்குச் சொல்லியனுப்பினேன். சில நாட்களுக்கு முன்பு அன்னவர் இங்குத் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். தமக்கு மகப்பேறு எதுவும் வாய்க்கவில்லை என்றும் அதற்கு ஈடாகத் தம் தமையன் மகனைத் தாம் தத்து எடுத்து வளர்த்து வந்ததாகவும் சொன்னார். ஆனால் துரதிருஷ்டவசத்தால் அந்த இளைஞன் மாண்டு போனான். இச்செய்தியை அவர் இயம்பிய பொழுது அவருடைய கண்கள் இரண்டிலும் கண்ணீர் ததும்பியதை நான் பார்த்தேன். சொந்த மகப்பேறு இல்லாததை முன்னிட்டு அவருடைய மனைவி தன் அன்பு முழுவதையும் வளர்ப்புச் செல்வன் மீது செலுத்தினாள். அவள் இப்பொழுது

ஆராத்துயரத்தில் மூழ்கினள். "நீ மனக் கிலேசம் மிகக்கொண்டுள்ளாய். எவ்வளவுதான் மனம் வருந்தினலும் மாண்டவன் வரப்போவதில்லை. துயரத்தைத் துடைத்தல் பொருட்டு நீ காசிக்குப் போக விரும்புகின்ருயா?" என்று ராம் மல்லிக் தம் மனைவிக்கு ஆறுதல் கூறினர். தம் மனைவியை அவர் பைத்தியக்காரி என்று இயம்பினர். இங்ஙனம் பொருந்தாத பற்றுதல் மிகக் கொண்டிருந்ததன் விளைவாக அவருடைய சொருபமே மாறிப்போயிருந்தது. பாராட்டுதற்குரிய சிறப்பு எதையும் நான் அவரிடத்தில் காணவில்லை. பொருளற்ற உலகப்பற்றில் உழன்று கொண்டிருந்தது ஒன்றுதான் அவரிடத்திருந்த பாங்கு என்று சொல்லலாம். நாங்கள் இளைஞர்களாயிருந்தபொழுது நான் அவரோடு அன்னியோன்னியமாகப் பழகி வந்திருந்தேன். இப்பொழுதோ அவரைத் தீண்டுவதற்குக் கூட என்னல் இயலவில்லை."

பரமஹம்சதேவரைத் தரிசிக்க வந்திருந்த பிராம்மண மாது ஒருத்தி தொடர்ந்து வாசல் அருகே நின்றுகொண்டிருந்தாள். அவள் ஒரு விதவை. அவளுடைய ஏக புதல்வி கல்கத்தாவில் வசித்துவந்த செல்வந்தன் ஒருவனை மணந்துகொண்டிருந்தாள். அச்செல்வந்தனே படாடோபம் மிக வாய்க்கப் பெற்றவனயிருந்தான். அவனுக்கு ராஜா என்னும் பட்டம் அமைந்திருந்தது. இந்தப் பிராம்மண மாதுவை அந்தப் புதல்வி பார்க்க வந்தபொழுதெல்லாம் அவளை அழைத்து வந்த ஏவலாளர்கள் ஆடம்பரமாக உடையணிந்திருந்தார்கள். அப்படித் தன் மகள் பாராட்டுதற்குரிய பாங்கில் தன்னைப் பார்க்க வந்த பொழுதெல்லாம், இந்த மாதின் உள்ளம் உவகையிலும், தற்பெருமையிலும் ஊறியிருந்தது. இவளுடைய புதல்வி சில நாட்களுக்கு முன்புதான் மறைந்துபட்டுப் போனள். அதைக் குறித்து இந்தத் தாய் ஆராத்துயரத்தில் மூழ்கியிருந்தாள்.

தன் தமையன் மகன் இறந்துபட்டுப் போனதைக் குறித்து ராம் மல்லிக் முறையிட்ட வரலாறு முழுதையும் இந்தப் பிராம்மண மாது கூர்ந்து கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏனென்ருல் தானும் ராம் மல்லிக் என்பாரும் அடைந்திருந்த துயரமானது ஒரே பாங்குடையதாக இருந்தது. கடந்த சில நாட்களாகத் திரும்பத் திரும்ப இவள் கல்கத்தாவினின்று தக்ஷிணேசுவரத்துக்குப் பித்துப் பிடித்தவள் போன்று ஓடிவந்துகொண்டிருந்தாள். தனக்கு வந்து வாய்த்திருந்த ஆராத்துயரத்தை ஆற்றுதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஏதாவது உபாயத்தை எடுத்துப் பகர்ந்தருள்வாரா என்ற ஏக்கத்தில் அவள் மூழ்கி இருந்தாள். ஆகவே அவள் தொடர்ந்து பரமஹம்சரின் பேச்சைக் கேட்கலானள்.

பரமஹம்சதேவர்: "பிரமுகன் ஒருவன் அன்ருெரு நாள் இங்கு வரலாயினன். சிறிது நேரம் இங்கு அமர்ந்திருந்து விட்டு அவன் திரும்பிப் போகப் புறப்பட்டான். "ஏன் வந்தவுடனே இங்கிருந்து புறப்பட்டுப்போகின்ருய்?" என்று நான் கேட்டேன். அதற்கு அவன் கொடுத்த விடையாவது: "என் அருமைச் செல்வனுடைய நிறைநிலா போன்ற இனிய முகத்தை நான் கண்டு களிக்க உடனே போயாக வேண்டும்." அதற்கு நான் கொடுத்த விடையாவது: "அடே மடையா! இறைவனுடைய நிறைநிலா போன்ற முகத்தைக் கண்டு இன்புற்றிருக்க வேண்டிய நீ இன்றிருந்து நாளை அழிந்து போகும் உன் மகனுடைய முகத்தைப் பார்த்து மகிழ்வுறுவதற்காக விரைகின்ருய்."

இப்பொழுது மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "பரமன் ஒருவனே மெய்ப்பொருள். ஏனைய யாவும் வெறும் தோற்றங்களாம். மக்கள், வீடு, வாசல், உலகம், உற்ருர் ஆகிய யாவும் ஜால வித்தைக்காரனுடைய வித்தைக்கு நிகராம். மாந்திரீகன் தன்னுடைய மந்திரக்கோலை எடுத்துத் தரையில் தட்டுகிருன். "என்னுடைய உருட்டுக்கும் புரட்டுக்கும் ஓடிவா" என்று கூப்பாடு போடுகிருன். பிறகு வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்திடம் அவன் "இதோ! இந்த மட்பாண்டத்தின் மூடியைத் திறக்கின்றேன். நிகழ்வது யாது என்று பாருங்கள்" என்று கத்துகிருன். அவன் சொன்னபடி மட்பாண்டத்தைத் திறக்கின்ருன். அதினின்று பறவைகள் சில கிளம்பிப் பறந்து மேலே போகின்றன. இந்த மாந்திரீகனுடைய செயலைப் பற்றிய உண்மைதான் யாது? இவர்கள் காட்சியில் தென்பட்ட மந்திரவாதி தான் உண்மையில் இருந்தான். அவன் காட்டிய

காட்சிகளெல்லாம் வெறும் கண்கட்டி வித்தைகளாம். அநித்தியப்பொருள் சில காலம் இருக்கிறது. பிறகு மறைந்துபட்டுப் போகிறது.''

"சிவபெருமான் கைலாசத்தில் வீற்றிருந்தார். திடீரென்று ஓசை ஒன்று கேட்டது. நந்திதேவன் "இந்த ஓசை எங்கிருந்து எதற்காக எழும்பியது?" என்று சிவபெருமானிடம் விண்ணப்பித்தான். அதற்கு அண்ணல் கொடுத்த விடையாவது: "ராவணன் என்னும் ஓர் அரக்கன் பிறந்துள்ளான். அதை முன்னிட்டுக் கிளம்பியதாகும் அவ்வோசை.'' சிறிது நேரத்திற்குள் திடீரென்று முன் கிளம்பியது போன்றே மற்றோர் ஓசை கிளம்பியது. "இரண்டாவதாகக் கிளம்பிய ஓசையின் உட்பொருள் யாதோ?" என்று நந்திதேவன் மீண்டும் விண்ணப்பித்தான். அதற்கு சிவபெருமான் கொடுத்த விடையாவது: ''இப்பொழுது ராவணன் மடிந்துபட்டுப் போனான்." காலம் என்பது மனதின் கற்பனையாம். பரம்பொருளோடு சீர்தூக்கிக் காலத்தை ஆராயுங்கால் கணப்பொழுதும், கல்பகாலமும் ஒன்றே என்பது தெரியவரும். ஜனன மரணம் என்பன வெறும் ஜால வித்தையாம். ஜாலவித்தையில் தென்படுபவைகள் சற்று நேரம் இருந்துவிட்டு மறைந்து பட்டுப்போகின்றன. உருண்டோடுகிற நீரில் குமிழிகளும் பால் போன்ற வெண்மை நிறமும் தென்படுகின்றன. இந்தக் குமிழியும், நீரில் தென்படுகின்ற வெண்மையும் நித்தியமானவைகள் ஆகமாட்டா. அவை போன்ற காட்சிகள் நீரில் தோன்றி, நீரில் நிலைத்திருந்து, மீண்டும் நீரினுள் மறைந்து பட்டுப் போகின்றன. அதேபாங்கில் பரம்பொருள் ஒன்றே மெய்ப்பொருள். அந்த மெய்ப்பொருளிடத்திருந்து பிரபஞ்சம் தோற்றத்திற்கு வந்து சிறிதுகாலம் இருந்துவிட்டு மீண்டும் மறைந்துபட்டுப் போகிறது. மனிதனுக்கு வாய்க்கின்ற உற்றார் உறவினர் அனைவரும் நீர்க்குமிழிக்கு ஒப்பானவர்களேயாம். இத்தோற்றங்களனைத்திற்கும் ஆதாரமாயுள்ள பரமன் ஒருவனே மெய்ப்பொருள்.''

"கடவுள் ஒருவரே மெய்ப்பொருள். அநித்தியப் பொருள்களை நாடி வீண் பொழுது போக்காதே. மெய்ப்பொருளாகிய கடவுளை அடைவதற்கான உபாயங்களைக் கடைப்பிடிப்பாயாக. அவரை அடைவதற்கான உபாயங்கள் சாந்தத்திலும், சிரத்தையிலும் அடங்கியுள்ளன. இதை மறந்துவிட்டு அல்லது புறக்கணித்துவிட்டு வெறுமனே கூப்பாடு போடுவதிலும் வருந்துவதிலும் பயன் யாது உளது?"

பொருள் நிறைந்துள்ள இக்கருத்துக்களைச் செவிமடுத்துக்கொண்டு பக்தர்கள் அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்தனர். "நான் இப்பொழுது என் வீட்டுக்குத் திரும்பிப் போகலாமா?" என்று நெடுநேரம் அங்கு நின்றுகொண்டிருந்த பிராமணப் பெண் பணிவுடன் வினவினாள். "நீ இப்பொழுதே போகவேண்டுமா? வெயில் கடுமையாக அடித்துக்கொண்டிருக்கிறதே! அது தணிந்தபின் ஏனைய பக்தர்களோடு நீ ஒரு வண்டியில் செல்லலாமே" என்று பரமஹம்சதேவர் அன்புடனும் ஆதரவுடனும் அவளுக்குத் தெரிவித்தார்.

கோடையின் வெப்பம் கொடியதாயிருந்தது. ஆதலால் பக்தர் ஒருவர் சந்தனமரத்தில் செய்த விசிறியொன்றைப் பரமஹம்சரின் முன்னிலையில் வைத்து அதை ஏற்றுக்கொள்ளும்படி அவரைப் பணிவுடன் வேண்டினார். பரமஹம்சரும் அவருடைய வேண்டுதலுக்கு இணங்கி அந்த விசிறியை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது அவர் '' மிக நன்று! மிக நன்று! ஓம் தத் ஸத்'' என இயம்பினர். அதைத் தொடர்ந்து 'ஜெய் மா காளி' என்று அடங்கிய குரலில் இயம்பினர். அவ்விசிறியைக்கொண்டு அவருடைய அறையில் மாட்டப்பெற்றிருந்த தெய்வங்களின் படங்களுக்கு முதலில் வீசினர். பிறகு தமக்குத் தாமே வீசிக்கொண்டார். "இதன் காற்று எவ்வளவு மெல்லியதாயிருக்கின்றது என்பதைப் பார்'' என்று மகேந்திரரிடம் அவர் மொழிந்தார். மகேந்திரரும் பரம திருப்தியடைந்தவராகத் தென்பட்டார்.

நேப்பாள் ராஜ்யத்தின் பிரதிநிதியாகிய காப்டன் விசுவநாதர் என்பார் தம் குழந்தைகளுடன் பரமஹம்சதேவரைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார். பரமஹம்சரும் அவரை அன்போடு வரவேற்று தம் எதிரே இருந்தகட்டிலின் மீது அமரும்படி இயம்பினர். அவருடைய குழந்தைகளுக்குக் கோயிலின் வெவ்வேறு பகுதிகளைக் காட்டித்தரும்படி பரமஹம்சதேவர் கிஷோரிடம் தெரிவித்தார்.

தாமரை மலரும் தேனீயும்

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக் கட்டுரையை யதீஸ்வரி கிருஷ்ணப்ரியா மொழிபெயர்த்தது)

"உன் மனமென்னும் தாமரையை மலரச் செய். தேனீக்கள் தாமே வரும்." விழித்தெழுந்து தன்னைச் சீரமைத்துக் கொண்டிருக்கும் நவ பாரதத்திற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இந்த உபதேசத்தைவிட முக்கியமானது வேறு இருக்க முடியாது. தேசமெங்கும் மக்கள் பல்வேறு துறைகளில் புதுமுயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இங்கு ஒருவர் பத்திரிகை ஆரம்பிக்கிறார். அங்கு ஒருவர் வியாபாரத்தைத் துவக்குகிறார். இன்னொரு இடத்தில் தொழிற்சாலை நிறுவ முயற்சி. ஆனால் எடுத்துக்கொள்ளும் முயற்சி வெவ்வேறாய் இருந்தாலும் எல்லாருக்கும் ஒரு சில சூழ்நிலைகள் பொதுவானதாக இருக்கின்றன. தீர்க்க முடியாத பிரச்சினைகள்; திகைக்கச் செய்யும் சங்கடங்கள்; வெற்றி கிடைக்கும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாத, நம்பிக்கை அளிக்காத நிலை; போதுமான ஒத்துழைப்பு இல்லாமையைச் சமாளிக்க வேண்டிய கஷ்டம். இப்படி, எல்லாரும் வெற்றியை விரும்புகிறார்கள்; ஆனால் வெற்றிக்கான கருவிகளோ பொருட்களோ அகப்படாத பரிதாபமான சூழ்நிலை.

இப்படிப்பட்ட நிலையில் உள்ள அனைவருக்கும் நாம் சொல்வது இதுதான்: "அஞ்சவேண்டாம். முன்னே பரவியிருக்கும் பனி மூட்டத்தினிடையே பாதையில் ஓர் அடிதான் தெரிகிறதா? இருக்கட்டும். அந்த ஓர் அடியை எடுத்து வையுங்கள்; உறுதியாக வையுங்கள். செய்யவேண்டியதை எல்லாம் செய்து விட்டீர்கள்; ஆனாலும் காத்திருப்பது தோல்விதான் என்று தெரிகிறதா? தோல்வியைப் பொருட்படுத்தாதீர்கள். வேண்டுமானால், தோல்விதான் கிடைக்கும் என்று எதிர்பார்த்தே செயல்படுங்கள். ஆனால் நாளை வரப்போகும் அந்தத் தோல்வியை நினைத்துக் கொண்டு இன்று முயற்சி செய்யத் தவறிவிடாதீர்கள். இன்று நீங்கள் செய்யும் முயற்சியை வெற்றி மட்டுமே கிடைக்கப்போவதாகக் கருதிக்கொண்டு செய்யுங்கள். உயிரே போவதானாலும் முயற்சியை மட்டும் கைவிடாதீர்கள். மேற்கொண்ட லட்சியத்திற்கு உண்மையாய் இருங்கள்."

ஒரு சாதனையைப் புரிவதற்குத் தேவையான பொருட்களும் வசதிகளும் முன்னேற்பாடாக எல்லாருக்கும் அமைந்து விடுவதில்லை. பிரெஞ்சு அரசன் நெப்போலியனுக்கு அமைந்தது போல வசதிகள் யாரோ ஒரு சிலருக்குத்தான் தேவையானபொழுது கிடைக்கும். அப்படிக் கிடைப்பதும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் செய்த கடின முயற்சியின் விளைவாகத்தான் இருக்கும். நம்மால் செய்யக்கூடியது, நம் கையில் இருப்பது எல்லாம் நம் முயற்சிதான். "உன் மனத் தாமரையை விரியச் செய்" என்று குரு மஹராஜ் சொன்னதின் கருத்து இதுவே. நமக்கு, நம்முடைய மனச்சாட்சிக்கு, நம் அமைப்பில் உள்ள மிக மேலான பகுதிக்கு —நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால், இந்தக் காட்சிக்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது. "முயற்சி செய்துகொண்டே இருக்கவேண்டும். வசதியோ வெற்றியோ மட்டும் கிடைக்காமலே போய்விடுமா? வேறு கதியே இல்லையா?" என்று யாரும் மனம் தளரவேண்டாம். மலர் விரிந்தால் வண்டு தானே வரத்தான் செய்யும். யாரும் அதைத் தடுக்க முடியாது. தாமரையோ வண்டுகளைக் கவர்வதற்காக மலரவில்லை. நேற்றைப் போலவே இன்றும் அது தன்னியல்பாய் மலர்ந்தது. தான் விரிந்து மணம் பரப்பிக்கொண்டு இருப்பதைக்கூட அறியாது அது இருக்கிறது. வண்டுகளின் வரவுதான் மொட்டு மலர்ந்ததை அறிவிக்கின்றது. போட்டியில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரனொருவன் நாள்தோறும் பயிற்சி செய்கிறான். அவன் திறமையில் நேற்று இருந்ததற்கும் இன்று இருப்பதற்கும் உள்ள வேறுபாடு அவனுக்கே தெரியாது. ஆனால் விளையாட்டில் கவனம், நிலைமையைக் கட்டுக்குள் வைத்திருக்கும் திறமை, எதிர்பாராமல் சூழ்நிலை மாறினால் அதைச் சந்திக்கும் வல்லமை ஆகியவை நேற்றைவிட இன்று அதிகரிக்கின்றன என்பதை முன்புகைவராமல் இப்போது கிடைத்திருக்கும் வெற்றி அவனுக்கு

உணர்த்துகிறது. வெற்றி நமக்கு எப்போது வரும் என்று சொல்ல முடியாது. எப்போது வேண்டுமானாலும் வரலாம். இப்போதும்கூட "வெற்றியே நமக்குக் கிடைக்காதோ" என்று நம்பிக்கையை இழக்கும் தறுவாயில் கூட வெற்றி நமக்கு மிக அருகிலேயே இருக்கலாம். எப்படியானாலும், நாம் நன்கு உழைக்கவேண்டும். இயல்வது கரவாமல் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாகவோ, காலதாமதமாகவோ வெற்றி எப்போது வந்தாலும் வரட்டும் என்று நாம் களத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கவேண்டும். அச்சத்தினாலோ, சலிப்பினாலோ முயற்சியை இடையில் நிறுத்திவிடக் கூடாது.

"லாபநஷ்டத்தைச் சமனாகக் கருது" என்பது ஆத்ம சாதகர்களுக்கு மட்டும் உரியது அன்று. எந்தச் செயலைச் செய்பவரும் பின்பற்றவேண்டிய விதி ஆகும். அப்படி லாபநஷ்டத்தைச் சமனாகக் கருதுபவனால் மட்டுமே வெற்றி பெற முடியும். அவன் நிச்சயமாக வெற்றிபெறுவான். அதில் சந்தேகமில்லை. தனக்கு ஆதார ஸ்தானமாக இருக்கும் தன்னடக்கத்தில் மனது நிலைபெற்று முயற்சி செய்ய வேண்டியதுதான் தாமதம். உரிய பலன்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்து குவியும். இதுகாறும் வெற்றி நம்மிடம் வராதவண்ணம் நம்மைத் திகைக்கச் செய்ததெல்லாம் நம் லட்சியத்தைப் பற்றிய தெளிவின்மையும், அதில் போதிய கவனமின்மையும்தான். லட்சியத்தை நோக்கிச் சரியாகக் குறிவை. அம்பு குறியை அடித்தே தீரும். உரிய காலத்தில் காண்டீபம் அர்ஜுனன் கைக்கு வந்தது போல, முறையாக முயற்சி செய்பவரிடம் தேவையான வசதிகளும், முடிவில் வெற்றியும் வழி கேட்டுக் கொண்டு வந்து சேரும்.

"வினையாற்றக் கடமைப்பட்டுள்ளாய். வினைப்பயனை விரும்பாதே" என்பதுதான் விதி என்றால், எத்தகைய வினையை அதாவது முயற்சியை, செய்யவேண்டும் என்பதைக் குறித்து நாம் தெளிவாகச் சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும். ஸங்கல்ப மயமாய் இருக்கும் நம் மனம் ஒரு பெரிய பாம்பு போன்றது. சுருண்டு படுத்திருக்கும் அப்பாம்பின் சக்தி திரண்டிருப்பது அதன் உடலின் மேற்புறத்தில் அன்று. அடுத்து இருப்பவைகளில் அன்று; அதன்சுற்றுச் சூழ்நிலைகளிலும் அன்று; பாம்பின் கொடிய விஷம் அதன் வாயின் உள்ளே, மையத்திலேதான் இருக்கிறது. கோட்டைகளுக்கு உள்ளே இருப்பது போன்ற அந்த மையப்புள்ளியிலிருந்து தன் தலையைத் தூக்கித் தன் குறியின்மீது ஓங்கிக் கொத்துகிறது நல்ல பாம்பு. நம் செயல் முறையும் அப்படித்தான் இருக்கவேண்டும். மனத்தெளிவை, சமநோக்கை, நடுவுநிலைமையை எய்த நாமும் நம்மைச் சரியான இடத்தில் வைக்கவேண்டும்.

ஆற்றுவது பள்ளி ஆசிரியர் பணி; ஆசை இருப்பதோ நாட்டையே விடுவிக்க; கையில் கிடைத்திருப்பவர்களோ வீரர்களாவதற்குரிய அம்சம் சிறிதும் இல்லாத மாணவர்கள்—இதுதான் ஒருவனுடைய நிலை என்றால், அவன்கூட நம்பிக்கையைக் கைவிட வேண்டாம். தன் முன்னே அமர்ந்திருக்கும் சாமானிய சிறுவர்களை வீரர்களாகவே பாவித்துக்கொண்டு அவன் பாடம் நடத்தட்டும். தான் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி அவன் தெளிவாகச் சிந்தித்து உறுதியான முடிவுக்கு வரட்டும். அந்தத் தெளிவிலிருந்தும் உறுதியிலிருந்தும் பிறக்கும் சக்தி அனைத்தையும் திரட்டி, வெற்றி தோல்வியைச் சமனாகக் கருதி, கல்வி கற்பிப்பதில் செலவிடட்டும். இதைச் செய்ய யாருக்கு இயலுகிறதோ, அவன் நிச்சயமாகவே, வெறும் விளையாட்டுப் பிள்ளைகளிடத்திருந்து வீரர்களை உருவாக்கிவிடுவான். தன் மனத் தாமரையை அவன் மலரச் செய்கிறான். வண்டுகள் தாமே வருகின்றன.

குயவன் ஒருவன் கொண்டுள்ள லட்சியம் குவலயத்தையே உய்விப்பது என்னும் பெரிய பொருளா? அவனும் அஞ்சவேண்டாம். நல்ல பானைகளை அவன் செய்து முடிக்கட்டும். அந்தக் கடமையில் அவன் காட்டும் ஊக்கம் சூளையில் நெருப்பைக் கிளறும் வேலைக்காரனைக் கூட வீரனாக்கிவிடும். பானைகளையும் பாத்திரங்களையும் வனைவதாக அவன் நினைக்கிறான். உண்மையில் மனித மனம் என்னும் களிமண்ணிலிருந்து மக்களை வனைந்து கொண்டிருக்கிறான்.

என்ன வியப்பு! அரவிந்த மலர் தான் அலர்ந்திருக்கும் செய்தியை வண்டுகளின்

ரீங்காரத்திலிருந்துதான் தெரிந்துகொள்கிறது! ஆன்மீக முன்னேற்றமும் அப்படி அமைதியாகத் தான் நிகழ்கிறது. ஆனல் பிறர் அறியா வண்ணம் நிகழ்ந்து கொண்டிருக்கும் அந்த முன்னேற்றமே உண்மையில் எல்லாரையும், எல்லாவற்றையும் ஆளவல்லதாய் இருக்கும். அந்த ஆத்ம சக்தியைப் பின் தொடர்ந்து உரிய பலன்கள் செல்கின்றன. அது எந்தப் பலனையும் தேடிச் செல்ல வேண்டியதில்லை. எந்தச் சூழலும் ஆத்ம சக்திக்கு அடிபணியும்; அது எதற்கும் தலைவணங்க வேண்டியதில்லை. பயன்படுத்தத் தெரிபவனுக்கு வசதிகள் கட்டாயம் வந்து சேரும்; எல்லாக் காலத்தும் வந்து சேரும். இந்த விதிக்கு விலக்கு என்பது இல்லவே இல்லை. வெற்றி, தோல்வியைப் பற்றிச் சிந்திப்பாயானல் நீ அறிவிலி ஆகின்ருய். வெற்றியன்று, தோல்வியன்று, போராட்டமே உனது பணி.

நம் கடமை உயர்ந்ததாகவும், பொறுப்பு மிக்கதாயும் ஆகுமளவு அதை அடைய நாம் எடுத்துக் கொள்ளும் காலமும் நீண்டதாகும். வழியில் அங்குலம் அங்குலமாகப் போராடிச் சென்றுதான் குறியை அடைய வேண்டும். எதற்காக இவ்வளவு கஷ்டப்படுகிருேமோ அந்தச்செயல் மிகச் சிறியது போலத் தோன்றலாம். ஆனல் அதற்கு ஆயத்தமாவதற்கு நீண்டகாலம் கடுமையாக உழைத்தாக வேண்டும். உதாரணமாக, போர் வீரனெருவன் துப்பாக்கியால் எவ்வளவு விரைவில் சுட்டு விடலாம்! விரலைக்கொண்டு விசையை முடுக்க எவ்வளவு நேரம் ஆகும்! ஆனல் செய்யும் சூழ்நிலை, இடம், காலம் முதலியனவற்றைப் பொறுத்து பல வீரர்களின் உயிரை விலையாகக் கொடுத்துத் தான் சிறிது நேரமே எடுக்கும் இந்தச் செயல்களைச் செய்ய முடிந்திருக்கிறது. செய்ய வேண்டிய தருணத்தைத் தவற விட்டு விடாமல் அந்தக் கணத்தில் உரிய இடத்தில் இருப்பதற்கு வீரர்கள் அதுவரையில் பெற்ற பயிற்சி அனைத்தும் தேவையாகிறது. பௌதிக விஞ்ஞானத்தில் சாதனைகள் புரிந்த ஜகதீச சந்திர போஸ் உலக விஞ்ஞானிகளின் அங்கீகாரம் பெறுமுன் எவ்வளவு கஷ்டப்பட்டார்! சர்வ மத மஹாசபையிலே வேதாந்த முழக்கம் செய்த சுவாமி விவேகானந்தர் உலகப் புகழ் பெறு முன்னும், பெற்ற பிறகும் கூட எத்தனை எதிர்ப்புகளுக்கும் தடைகளுக்கும் ஆளானர்! இப்படித் தம் வாழ்வின் பிற்பகுதியில் பெருந் தலைவர்களாக ஆனவர்களெல்லாரும் சிறு வயதில் அசாதாரண திறமை உடையவர்களாகவோ, எல்லாவசதிகளையும் பெற்றவர்களாகவோ இருக்கவில்லை. ஆனல் பள்ளியிலோ கல்லூரியிலோ தமக்கு ஏற்பட்ட கடமைகளினின்றும் பிசகாது, அவற்றை ஒழுங்காகச் செய்திருப்பார்கள். போர்க்களத்தில் வீரச் செயல் புரியத் தினந்தோறும் பயிற்சி பெறும் வீரனைப் போல, இவர்களும் தம் தினசரி வாழ்க்கையைப் பயிற்சிக்களம் ஆக்கியிருக்கிருர்கள். தாம் பின்னல் பெருநிலை எய்தப் போவது இவர்களுக்குத் தெரிந்திருக்கலாம்; தெரியாமலும் போயிருக்கலாம். ஆனல் அவர்கள் உழைக்கத் தவறவில்லை.

உழைப்பு—போராட்டம்—முயற்சி—இவைதான் நாம் செய்யக் கிடப்பன; செய்து வருவன. எனவே அவற்றின் தரத்தை உயர்த்துவது நம் கடமை ஆகிறது. ஆழ்கடலில் முத்தெடுக்க விரும்பி, முத்துக் குளிப்பவன் கடுமுயற்சி செய்கிருன். லோபி ஒருவன் இன்னும் அதிகமாகப் பணம் சேர்க்கப் போராடுகிருன். காதலன் தன் அன்புக்குரியாளின் புன்னகையைப் பெறப்போராடுகிருன். யாராய் இருந்தாலும், நிர்ணயித்துக்கொண்ட லட்சியத்தின்மீது முழு மனதையும் திருப்புகிருர்கள்; அப்போது தான் வெற்றி பெறுகிருர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன இரண்டு குடியானவர்களைப்பற்றிய கதையும் இங்குப் பொருத்தமானது. நெசவுத்தொழிலில் நஷ்டம் வந்தது என்பதால் பயிர்த்தொழிலுக்கு வருபவன் ஒன்றிரண்டு முறை மழை தவறியவுடன் பயிர்த்தொழிலையும் விட்டு விடுவான். பரம்பரைக் குடியானவனே விளைச்சல் எப்படி இருந்தாலும் பயிரிடுவதை நிறுத்துவதில்லை; விதைக்கும் பருவத்தில் விதைக்கத் தவறுவதில்லை. நம்முடைய பணி எவ்வளவு எளியதாக இருந்தாலும் நம் மனப்பான்மையும் இத்தகையதாகத்தான் இருக்க வேண்டும். சலிப்பில்லாத முயற்சியை மீண்டும் மீண்டும் செய்யவேண்டும். உடலில் உயிர் இருக்கும்வரை போராட்டத்தை நிறுத்தாது நடத்தவேண்டும்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

12-9. வீறியவே தாந்தமுதல் மிக்கக லாந்தம்வரை
ஆறும்உணர்ந் தோர்உணர்வுக்கு அன்புவைப்
[பது எந்நாளோ

வீறுதல்-கர்ஜித்தல், ஆண்மையுடன் ஓலமிடுதல். கலாந்தம்-கலையின் முடிவு. ஆறும்-ஆறு சாஸ்திரங்களாகிய வைசேஷிகம், நியாயம், பூர்வமீமாம்சம், சாங்க்யம், யோகம், வேதாந்தம் என்பனவாம்.

வீறிய வேதாந்தம் என்பது ஆண்மை புகட்டுகின்ற வேதாந்தம் அல்லது வேதத்தின் முடிவு. Even as an intellectual study Vedanta is the healthiest of all—வெறும் ஏட்டுக் கல்வி என்றாலும் வேதாந்த ஆராய்ச்சியே ஆராய்ச்சிகள் அனைத்திலும் திட்பம் மிக வாய்க்கப் பெற்றதாம் என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார். மனிதனுடைய அறிவு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது வேதாந்த விசாரம். ஆறு சாஸ்திரங்களுள் வைசேஷிகம் என்னும் சாஸ்திரத்தின் ஆராய்ச்சியின் வாயிலாக மனிதன் தெளிந்த மனம் உடையவன் ஆகின்றான். தெளிந்த மனம் படைத்திருப்பவனே தத்துவ விசாரத்தில் உண்மையாகப் பிரவேசிக்க வல்லவனாகின்றான். தான் கற்றறிந்துள்ள கோட்பாடுகளை ஐயம் திரிபு அற மற்றவர்களுக்கு எடுத்து விளக்க வல்லவன் நியாய சாஸ்திரத்தில் நிபுணன் ஆகிறான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்னும் கோட்பாட்டுக்கு இணங்க வாழ்க்கைத் தத்துவத்தை முறையாக அறிந்துகொண்டவன் அதைச் செயலுக்குக் கொண்டுவருகிறான். இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் மானுடன் ஒருவன் தன் முயற்சியால் அடையப்பெறலாம் என்பது சாஸ்திரங்களுள் மூன்றாவது இடம் பெறுகிற பூர்வமீமாம்சத்தின் துணிவாம். தன் முயற்சியால் பெறக்கூடிய ஒன்றைப் பிறரிடமிருந்து யாசகமாக ஏற்றுக்கொள்வது என்பது முறையன்று.

''என்னுடைய முயற்சியால் பெறக்கூடிய இம்மை மறுமைக்குரிய எதையேனும் யாசகமாக நான் வழிபடு தெய்வத்திடத்திலிருந்தும் பெறமாட்டேன்'' என்று ரிஷிபுத்திரன் நசிகேதன் யமதர்ம ராஜாவிடம் திட்டவட்டத்துடன் இயம்பினான். இது வேதாந்தம் கற்றவனிடத்துள்ள சிறப்பாம். நான்காவது சாஸ்திரமாக வருவது சாங்க்யதர்சனம். இயற்கையின் அமைப்பு எத்தகையது என்பதை இந்தத் தர்சனம் தெளிவுறுத்துகிறது. ஐந்தாவது தர்சனமாக வருவது யோகம். யோக சாஸ்திரத்தில் சொல்லுகிற கோட்பாடுகளை முறையாக அனுஷ்டிக்கிறவன் பண்பாட்டில் உச்சநிலையை அடைகிறான். அத்தகையவனே ஆறாவது தர்சனமாகவிருக்கின்ற வேதாந்தத்தை அனுஷ்டிக்க வல்லவனாகின்றான். பரம்பொருள் ஒருவரே மெய்ப்பொருள். அவர் தம்முடைய மாயாசக்தியால் இப்பிரபஞ்சமாகவும், இதில் வாழ்ந்திருந்து முன்னேற்றமடைந்து வரும் ஜீவர்களாகவும் வடிவெடுத்து விளையாடுகிறார் என்பது வேதாந்தக் கோட்பாடு.

இக்கோட்பாடுகளை முறையாக அறிந்துகொள்ளவும், தன் வாழ்க்கையில் இவைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வரவும் வல்லவனே மக்களுள் மேலோன் ஆகிறான். அத்தகைய மேலோன் ஒருவனிடம் அன்பு வைப்பதற்கேற்ப ஆத்ம சாதகன் முன்னேற்றம் அடைகிறான். அத்தகைய ஞானமும் பக்தியும் தமக்கு வந்து அமையவேண்டும் என்று தாயுமானவர் இக்கண்ணியின் வாயிலாக வெளியிடுகின்றார்.

12-10. கண்டஇடம் எல்லாம் கடவுள்மயம் என்று
[அறிந்து
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சில் கொண்டு
[இருப்பது எந்நாளோ.

பரம்பொருளுக்குப் புறம்பாகப் பிரபஞ்சம் என்பது ஒரு தனிப்பொருள் ஆகாது. பரமனே பிரபஞ்சத்திலுள்ள யாவுமாக வடிவெடுத்து விளையாடுகிறார். இப்பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற நல்ல உயிர்களும் கெட்ட உயிர்களும் பரம்பொருளுக்குப் புறம்பாகமாட்டா. இதுவே இம்மாயப் பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மையாம்.

அத்வைத ஞானத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவது மிகக் கடினம். ஆயினும் சில தீரர்கள் துணிந்து இதைப் பழக்கத்

தில் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்ளுவோம். சில ஆண்டுகளுக்கு முன்பு ஹிமாசலப் பிரதேசத்தில் வனாந்தரமாக இருந்த பகுதியில் துறவியர்கள் சிலர் வசித்து வந்தார்கள். ஒரு நாள் திடீரென்று புலி ஒன்று அக்கூட்டத்தின் மீது பாய்ந்து ஒரு மூர்த்தியைக் கடித்துத் தூக்கிக்கொண்டு போனது. அம்மூர்த்தியோ 'சிவோஹம், சிவோஹம்' என்று சொல்லிக் கொண்டு போனார். புலி என்கின்ற எண்ணமும், தாம் ஓர் உடல் என்கின்ற எண்ணமும் அவருடைய உள்ளத்தில் இடம் பெறவில்லை. கடலில் தாண்டவமாடுகின்ற ஓர் அலையை மற்றோர் அலை வந்து தன்மயமாக்குகிறது. இது கடலில் நாம் காணுகின்ற காட்சியாகிறது. இக்காட்சியின் விளைவாகக் கடலுக்கு லாபமுமில்லை, நஷ்டமும் இல்லை. அதே பாங்கில் பிரகிருதியில் உள்ள உயிர்களுள் ஓர் உயிர் மற்றோர் உயிரின் உடலைத் தாக்கியெடுத்துப் புசித்துத் தன்மயமாக்குகிறது. பிரகிருதித் தாய்க்கு இதனால் லாபமுமில்லை, நஷ்டமுமில்லை. அத்தகைய பிரகிருதித் தாய்க்கு ஆதாரமாயிருப்பது மெய்ப்பொருளாகிய பரமசிவன். சிவத்துக்குப் புறம்பாகப் பராசக்தியோ, அவளிடத்திருந்து தோன்றி வந்துள்ள உயிர்களோ இல்லவே இல்லை. மக்களுள் தன்னை உடல் என்று கருதுபவன் அஞ்ஞானி. சிவமே தன் நிஜ சொரூபம் என்று அறிகிறவன் ஞானி. அவன் காட்சியில் சொல்லுபவனும், சொல்லப்படுபவனும் இல்லவே இல்லை. தான் சரீரம் தாங்கி இருப்பது வெறும் தோற்றம். தன் நிஜ சொரூபம் சிவம். இப்பேருண்மையைப் புலி வாயிலகப்பட்ட துறவி முற்றிலும் உணர்ந்தவர். உணர்ந்ததற்கு ஏற்ற பிரகாரம் அவர் நடந்துகொண்டார். இத்தகைய திடஞானிகளின் மீது அன்பு வைத்து அவர்களை ஆராதிப்பதன் மூலம் ஆத்ம சாதகன் பண்பாட்டில் முன்னேற்றமடைகிறான் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

12-11. பாக்கியங்கள் எல்லாம் பழுத்து மனம் [பழுத்தோர்
நோக்கும் திருக்கூத்தை நோக்குநாள் எந்நாளோ

இவ்வுலகைப் பொருள்படுத்துதலில் பாங்குகள் பல உள. எத்தனை மனிதர்களோ அத்தனை விதக் காட்சிகளை இவ்வுலகம் தந்து கொண்டிருக்கிறது என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவர். மற்று இவ்வுலகோ நல்லதுமன்று, கெட்டதுமன்று. நலம் கேடு இரண்டும் சேர்ந்தே அமைந்துள்ளது இவ்வுலகம். இதில் அடங்கியிருக்கும் உயிர்களிடத்தும் பொருள்களிடத்தும் நலனையும் காணலாம்; கேட்டையும் காணலாம். இனி இவ்வுலகம் வேறு, இறைவன் வேறு அல்ல. இறைவனே உலகாகக் காட்சிகொடுத்துக்கொண்டிருக்கிறார். இறைவனோ நலமுடையான், கேடு இல்லான். அப்படியானால் இவ்வுலகும் உண்மையில் நலனாக வடிவெடுத்திருக்கிறது. இதில் கேடு காண்பது கேடுடைய மனதின் செயலாம். பண்பட்ட மனம் உடையவர்களுக்குக் கேடும் நலனாகவே காட்சி கொடுக்கிறது. அன்னவர்களே பாக்கியம் வாய்க்கப்பெற்றவர்களாம்.

மகாபாரதத்தில் கேடுகளெல்லாம் வடிவெடுத்தவனாகத் துரியோதனனும், பண்பாட்டின் சிகரமாக யுதிஷ்டிரனும் காட்சி தருகிறார்கள். துரியோதனன் ஆயுள்பரியந்தம் மனக்குழப்பத்தில் மூழ்கி இருந்தான். தருமனோ தனக்கு நேர்ந்த கொடுமைகளைப் பொருட்படுத்தவே இல்லை. தான் அனுபவிப்பது அனைத்தும் பரம்பொருளின் லீலையே என்று அவன் உணர்ந்திருந்ததால் எதிலும் கேட்டையோ, கொடுமையையோ அவன் காணவில்லை,

தில்லையில் நடராஜன் திருக்கூத்து ஆடுகின்றான். உண்மையில் இப்பிரபஞ்சம் முழுதுமே தில்லையாம். அதில் நிகழ்கிற செயல்கள் அனைத்தும் தில்லைக் கூத்தனுடைய திருவிளையாடலாம். மனதைப் பண்படுத்தியவனுக்கு மட்டும் தில்லைத் திருநடனம் இங்ஙனம் உள்ளபடி காட்சிதருகிறது. இப்புனிதமான காட்சியை அகத்தில் காண்பதுதான் மெய்ப்பொருள் காட்சியாகிறது. இதற்கு உற்ற உபாயம் மனதைப் பண்படுத்துதலேயாம். மனம் பழுத்துப் பண்பாடடைந்து பிரபஞ்சம் முழுதையும் இறைவனுடைய திருவிளையாடல்களாகக் காண்பது பெறுதற்கரிய பேறு ஆகும். அவன் பொருட்டு மனதைப் பண்படுத்தியவனே பாக்கியவானாகிறான் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

118. शुचिश्रवा: சுசிஸ்ரவா: கேட்பதற்கு இனியதும் நலந்தருவதுமான நாமங்களை உடையவன்.

அன்புடைத்திருப்பதும் இல்லாதிருப்பதும் ஒருவன் பேசும் மொழியினின்று வெளியாகிறது. அன்பே வடிவெடுத்துள்ள பக்தனொருவனுடைய நாவினின்று கடுஞ்சொல் எதுவும் வெளிவராது. யாண்டும் இன்சொல்லே வடிவெடுத்தவனாக அவன் இருக்கிறான். அத்தகைய இனிய சொல்லைக் கேட்பதில் பகவானே மகிழ்வுற்று இருக்கிறார். அவரிடமிருந்து தோன்றி வந்துள்ள உயிர்கள் இன்சொல் கேட்டு இன்புறுதலில் வியப்பு யாது உள்ளது! இனி, இறைவனுடைய நாமங்களை உச்சரிக்கின்றவர்கள் தாமே பரிசுத்தவான்களாகின்றார்கள். ஒருவன் விளையாட்டுக்காக கங்கா ஜலத்தில் குதித்து வெளியே வருவானாகில் அது கங்கா ஸ்நானத்திற்கு நிகராகிறது. அப்படி நீராடுகிறவன் அறிந்தோ அறியாமலோ தூயவனாகத் திருந்தியமைகிறான். அதே பாங்கில் இறைவனுடைய திருநாமங்களைச் சொல்லுகின்றவர்களும் சொல்லக் கேட்கின்றவர்களும் புனிதவான்கள் ஆகின்றார்கள்.

119. अमृत: அம்ருத: சாவு என்பதை இன்னதென்று அறியாதவர்.

எங்குச் சென்றாலும் சூரிய பகவான் இருளைக் காணமாட்டார். அதே விதத்தில் பகவானுடைய சந்நிதியில் மரணத்துக்கு இடமில்லை. "ஓ, நரேந்திரா! பகவான் என்னும் அமிர்தம் அகன்ற பாண்டம் ஒன்றில் விளிம்பு நிறைய வைக்கப்பட்டிருக்கிறது. உன்னை ஒரு தேனீயாக வைத்துக்கொள். அமிர்தமாகிய தேனை நீ எங்கிருந்து எவ்வாறு அருந்துவாய்?'' என்று பரமஹம்சர் கேட்டார். அதற்கு நரேந்திரன் கொடுத்த விடையாவது: "நான்விளிம்பில் எட்ட இருந்துகொண்டு ஜாக்கிரதையாக அமிர்தம் என்னும் தேனை உறிஞ்சி அருந்துவேன்.'' ''ஏன் உள்ளேயே மூழ்கினால் என்ன?'' என்று பரமஹம்சர் கேட்டார். அதற்கு நரேந்திரன் கொடுத்த விடையாவது: ''தேனைத் தேடிச் சம்பாதிக்கிற தேனீ அப்படிச் செய்தால் தேனினுள் மூழ்கிமடிந்துபோம். அத்தகைய விபத்து நேராத வண்ணம் நான் எச்சரிக்கையாக இருப்பேன்". சாகா மருந்தை மிகைபடப் புசித்ததன் விளைவாக ஒருவன் செத்துப்போவானாகில் அது சாகா மருந்து ஆகாது. பகவானே அமிர்த சாகரம். அதனுள் மூழ்குபவனுக்கு ஒரு பொழுதும் மரணமோ தேய்வோ அல்லது வேறு எந்தக் கஷ்டமோ நிகழாது. பகவத் விஷயத்தில் மிகைபட்டு மூழ்கிக் கேட்டை யாரும் வருவித்துக் கொள்வது இல்லை என்று பரமஹம்சதேவர் உறுதி கூறினர்.

பகவானை அணுகுவதற்கு ஏற்ப பக்தன் ஒருவன் பரமானந்தமும் மரணமிலாப் பெருவாழ்வும் அடையப் பெறுகிறான்.

120. शाश्वतस्थाणु: சாச்வதஸ்தாணு: — யாண்டும் இருந்தபடி நிலைத்திருப்பவன்.

உணவு மரணத்தை ஒத்திவைக்கும் பாங்குடையதாயிருப்பதால் அத்தகைய உணவை உபசாரத்திற்காக அமிர்தம் என்று கூறுகிறோம். ஓர் உயிருக்கு உரிய உணவை மற்றோர் உயிர் அபகரிப்பது சாத்தியம். ஆனால் பகவானுடைய சொரூபம் அத்தகையதன்று. அழிந்து பட்டுப் போகும் உடலை உடைத்துள்ள உயிர்களின் உள்ளத்துள்ளே யாண்டும் அழியாப் பொருளாக இறைவன் வீற்றிருக்கின்றான்.

121. वरारोह: வராரோஹ: — தன்னை அடைந்தவரைத் தன்மயமாக்கிக் கொள்ளும் சிறப்புடையவன்.

போக்கும் வரவும் புணர்வும் பிரபஞ்சப் பொருள்களிடத்து உண்டு. பிரபஞ்சப்பொருள் அடையும் வரையில் கவர்ச்சி உடையதாகக் காணப்படுகிறது. மற்று அதை அடைந்த பின் ஜீவன் ஒருவன் அதனிடத்துக் கொண்டிருந்த மோகத்தை இழக்கிறான். இதற்கு நேர்மாறாகப் பரம்பொருளை அணுகுதற்கேற்ப பக்தன் பரமானந்தமடைகிறான். பரமனை அடைந்த பிறகு அவன் பரத்தில் மங்களகரமாக லயமாகிறான்.

122. महातपा: மஹாதபா: பெரும் தபஸ் உடையவன்.

பிரபஞ்சத்திலே பிரத்யட்சமாகத் தென்படுகின்ற மூர்த்திகளுள் சூரியன் முன்னணியில் இருக்கிறது. சூரிய உதயம் ஆனதும் சிருஷ்டியின் மகிமைகள் யாவும் உள்ளபடி காட்சிக்கு

வருகின்றன. அதே பாங்கில் மகாதபஸ்வியாக இருக்கின்ற மஹாவிஷ்ணுவின் சுயப்பிரகாசத்தின் வாயிலாக அகிலாண்டங்களும் உள்ளபடி தோற்றத்துக்கு வருகின்றன. அத்தகைய பரமனுடைய சந்நிதான விசேஷத்தால் பரமனைப்பற்றியதும் அவனைச் சார்ந்துள்ள பிரபஞ்சத்தைப் பற்றியதுமான ஞானம் தானாக ஓங்குகிறது.

123. सर्वगः ஸர்வக: எங்குமாய் யாவுமாய் இருப்பவன்.

பரமனுக்குப் புறம்பாகப் பிரபஞ்சத்தில் எதையாவது பொருள்படுத்துகிறவன் அக்ஞானத்தில் உழல்கின்றான். இகபரம் இரண்டையும் அவன் மயமாகக் காண்பவன் சாதனத்தில் முன்னேற்றமடைகிறான்.

124. सर्वविद्भानुः ஸர்வவித்பானு: — அனைத்தையும் அறிந்து ஒளிர்பவன்.

கணக்கு ஒன்றைச் சரியாகப் போடத் தெரியாத மாணாக்கன் திண்டாடவும் மனம் வாடியிருக்கவும் செய்கிறான். ஆனால் முயற்சி எடுத்து கணக்கைச் சரியாகப் போடத் தெரிந்தவுடனே முகமலர்ச்சியும் ஊக்கமும் அந்த மாணாக்கனிடத்து வடிவெடுக்கின்றன. அத்தகைய நிறைவும் ஞான ஒளியும் யாண்டும் உடையவனாகப் பரமன் இருக்கிறான்.

125. विष्वक्सेनः விஷ்வக்ஸேன: — அக்ஞான இருளை விரட்டியோட்டுபவன்.

அதிகாலையில் பிரம்ம முகூர்த்தத்தில் யாண்டும் காரிருள் சூழ்ந்திருக்கிறது. மற்று கிழக்குத் திசையில் கொஞ்சம் வெளிச்சம் தோனறியதும் இருளின் கொடுமை கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்குகிறது. சூரியோதயமானதும் இருக்குமிடந் தெரியாது இருள் மறைந்து பட்டுப் போகிறது. அதே பாங்கில் பக்தனுடைய உள்ளத்தில் நெடுங்காலம் இருந்து வந்த அக்ஞான இருள் பக்தியின் வலிவால் படிப்படியாக மறைந்துபட்டுப்போகிறது. பகவானுடைய அனுக்ரஹம் வாய்க்கப் பெற்றதும் கீழ்மையில் உழன்றுகிடந்த பக்தன் திடீரென்று மேன்மையுறுகிறான்.

126. जनार्दनः ஜனார்தன: — நலனை நாடும் பக்தர்களுக்கு மகிழ்வூட்டுபவன்.

மானுடன் ஒருவன கேட்டைத் தவிர்த்தால் மட்டும் போதாது. நலனில் அவன் ஆர்வம் மிகப் பூண்டவனாயிருத்தல் வேண்டும். உயிர்களுக்குக் கேடு செய்கின்றவன் தாற்காலிகமாக அச்செயலினின்று ஒருவகை இன்பம் அடைகின்றான். ஆனால் அதைப் பெறுகின்ற பொழுதே தன் போக்குச் சரியில்லையென்று அவனுக்கு உள்ளத்தினின்று எச்சரிக்கை வருகிறது. அந்த எச்சரிக்கை மாதவன் செயல். அதற்கு நேர்மாறாகத் தனக்கு வருகிற துன்பத்தையும் பொருள் படுத்தாது உலகுக்கு நலன் செய்ய வேண்டுமென்று மற்றொருவன் முயலுகின்றான். சகிக்க முடியாத கஷ்டத்துக்கிடையிலும் அச்செயலில் ஈடுபடும்படி உள்ளத்துக்குள்ளே ஒளிரும் பேரின்பப் பொருள் அவனைத் தூண்டுகிறது. அதுவே இறைவனின் திருவருட் செயல்.

127. वेदः வேத: வேத வடிவில் இருப்பவன்.

வேதம் என்னும் சொல்லுக்கு மேலாம் நூல் என்பது ஒருபொருள். வேதத்தை உண்டுபண்ணியவன் பரமன். வேதம் அழியாதது என்பது ஒரு கோட்பாடு. வேதமாகிய நூல் என்னும் அர்த்தத்தில் ஆராயுமிடத்து அதில் ஒரு குறை வந்து அமைகிறது. இறைவன் உண்டுபண்ணிய நான்கு வேதங்களுள் பெரும்பகுதி மறைந்து பட்டுப் போயுள்ளன. ஆதலால் வேதம் அழியாதது என்னும் கோட்பாடு பொருந்தவில்லை. ஆனால் இயற்கையை யாரும் அழிக்கவில்லை. ஒருவராலும் அழிக்கவும் முடியாது. ஆகவே வேதம் என்னும் சொல்லுக்கு இயற்கை என்ற அர்த்தம் முற்றிலும் பொருந்துகிறது. இயற்கையை உள்ளபடி அறிவதே வேதம் கற்பதாம். இயற்கையின் நடைமுறையில் பிசகு ஏதும் உண்டாவதில்லை. எனவே இயற்கை வேறு, வேத நாயகனாகிய பரம்பொருள் வேறு அல்ல. இயற்கையை ஆராய்ச்சி பண்ண உயிர்கள் அனைத்திற்கும் உரிமையுண்டு. அதில் தனி உரிமை பாராட்டுகிறவன் பிழை பண்ணுகிறான். எழுதி வைத்துள்ள நூல் இயற்கையின் நடைமுறைக்கு ஒத்ததாக இருக்குமாகில் அப்பொழுது அது மெய் ஆகிறது. நான்கு வேதங்களும் மெய்ந்நூல்களாம். ஏனென்றால் அவைகளை உருவாக்கியவர்கள் அருளாளர்களாகிய ரிஷிகள். அவர்கள் இயற்கையின் ரகசியங்களையே நமக்கு நூல் வடிவில் தந்துள்ளார்கள்.

ஞான வெட்டியான் - 13

புத்தர் பெம்மான் தீர்க்காயுளுடன் வாழ்ந் திருந்தார். அவர் வாழ்ந்திருந்த காலமெல்லாம் தர்ம மார்க்கத்தை மக்களுக்கிடையில் புகட்டி வந்தார். அவரைப் பின்பற்றிய துறவியர்கள் பிக்ஷுக்கள் என அழைக்கப்பட்டனர். அத்த கைய பிக்ஷு ஒருவர் புத்தர் பிரானிடம் வந்து முறையிட்டதாவது: "இறைவா! நான் பரம பிக்ஷுவாக வழியில் நடந்து போகிறேன். அப் பொழுது சிற்றியல்பு படைத்துள்ள சிலர் வந்து என்னை "அடே! மடையா, திண்ணைத் தூங்கிச்சோம்பேறி, ஏனடா சமுதாயத்திற்குத் தலைச் சுமையாய்ப் பிறந்தாய்? என்று இப்படி யெல்லாம் வசைமொழி கூறுகிறார்கள். தடுக்க முடியாத இப்புன்மொழிகளைக் கேட்கக் கேட்க எனக்கு வருத்தம் மிக உண்டாகிறது. அண் ணலே! இக்கொடுமையை நான் தவிர்ப்பது எங்ஙனம்?''

புத்தர் பெம்மான்: ''இதோ இது என்ன?"

பிக்ஷு: ''எலுமிச்சம்பழம்.''

புத்தர் பெம்மான்: ''இது யாரிடம் இருக் கிறது?"

பிக்ஷு: ''பிரபோ! அது தங்கள் கையில் இருக்கிறது.''

புத்தர் பெம்மான்: ''இதை உனக்குத் தரு கிறேன், ஏற்றுக்கொள்.''

பிக்ஷுவும் பக்தி பூர்வமாக அவர் தந்த எலு மிச்சம்பழத்தை ஏற்றுக்கொண்டார்.

புத்தர் பெம்மான்: ''இப்போது இந்த எலுமிச்சம்பழம் யாருக்குச் சொந்தம்?"

பிக்ஷு: "அண்ணலே! தாங்கள் இதை எனக் குச் சொந்தமாக்கியிருக்கின்றீர்கள்."

புத்தர் கை நீட்டிக்கொண்டு "அதைத் திருப்பி என்னிடம் கொடுத்து விடு'' என்று சொன்னார். பிக்ஷுவும் பணிவுடன் அப்பழத் தைத் திருப்பி அப் பெம்மானிடம் சமர்ப்பித் தார்.

புத்தர்: "இப்பொழுது இது யாரிடம் இருக் கிறது?"

பிக்ஷு: "பிரபோ, அது மீண்டும் தங்கள் கைக்கு வந்துள்ளது."

புத்தர்: "சரி. இப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச் சியை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள். நீ வழியில் போகின்றாய். மானுடன் ஒருவன் 'அடேமுட்டாள்'என்று உன்னைக் கூவி அழைக் கின்றான். அவன் கொடுத்த முட்டாள் பட் டத்தை ஏற்றுக் கொண்டு நீ வருந்துகின்றாய். நான் கொடுத்த பழத்தை நீ ஏற்க மறுத்த பொழுது அது எனக்குச் சொந்தமாக இருந்தது. அதே பாங்கில் வேற்றான் ஒருவன் உன்னிடம் வசைமொழிகளை வழங்குகின்றான். அவைகளை ஏற்றுக்கொண்டு நீ படாதபாடு படுகின்றாய். அவைகளை ஏற்க நீ மறுத்துவிட்டால் அவை கள் யாருக்குச் சொந்தம்?"

பிக்ஷு: "அவை யாவும் வழங்கியவனுக்கே சொந்தமாகின்றன."

புத்தர்: "இப்பொழுது எண்ணிப் பார். ஏற் பது இகழ்ச்சி என்னும் கூற்றின் உட்பொருள் எண்ணிப் பார்ப்பதற்கேற்ப உனக்கு நன்கு விளங்குகிறது. ஊரார் தருவது எதுவானு லும் நாம் ஏற்றுப் பழகலாகாது. எதை ஏற்க மறுக்கிறோமோ அது கொடுப்பவனுக்கே சொந்தமாகிறது. பிறகு, அவனுக்கு ஆசி கூறு கிற மனப்பான்மையுடன் நீ இருந்து பழக வேண்டும். பிறர் தருகிற சிறுமைகளை நாம் ஏற்க மறுத்தால் மட்டும் போதாது. அன்ன வர்கள் உய்வு அடைவதற்கேற்ற நல்ல எண் ணங்களையே நாம் அவர்களுக்கு எடுத்து வழங்கவேண்டும்."

தீமையைக்கொண்டு உலகத்தவரிடமிருந்து தீமையை அகற்ற முடியாது. நலனைக்கொண்டு தான் ஓரளவு தீமையை அகற்றுவது சாத்தி யம். பிக்ஷு ஒருவனுடைய தர்மம் மிகக் கடின மானது. தனது மனதைக் கட்டியாளும் திறமை அவனுக்கு இருப்பது முற்றிலும் அவசியம். ஆமைக்கு ஆபத்து வந்தால் ஐந்து கருவிகளை யும் அது தன் ஓட்டின் உள்ளே சுருக்கிக் கொள்ளும். போகுமிடமெல்லாம் அதைத் தூக் கிச் செல்லும் வல்லமை அதற்கு இருக்கிறது. அதே விதத்தில் பிக்ஷு ஒருவன் தன் மனம் என்னும் கோட்டையைத் தனக்குரியதாக வைத்திருத்தல் வேண்டும். எதிரிகளைக் கோட் டைக்குள் நுழைய அனுமதிக்கலாகாது. அதே பாங்கில் பொருந்தாத வசை மொழிகளை ஏற் பது இகழ்ச்சி, வசைமொழிகளைக் கேட்டு

வருந்துகிறவன் தான்படுகின்ற துன்பத்திற்குத் தானே பொறுப்பாளியாகின்ருன்.

பாண்டவர்களும் கௌரவர்களும் தாயாதிகள். ஆனல் பாங்கிலோ அவர்கள் முற்றிலும் வேறுபட்டவர்கள். கௌரவர்களின் தலைவனுகிய துரியோதனன் தீமையே வடிவெடுத்திருந்தான். பாண்டவர்களின் மூத்தவனுகிய யுதிஷ்டிரனே நலன் அனைத்துக்கும் இருப்பிடம். அவன் யாருக்கும் எந்தவிதமான கேட்டையும் வழங்கியவனல்லன். அவன் அஜாதசத்ரு. யாரையும் தன் வாழ்நாளில் அவன் பகைத்தது கிடையாது.

பாண்டவர்கள் சுயப்பிரயத்தனத்தால் சம்பாதித்த இந்திரப் பிரஸ்தம் என்னும் ராஜ்யத்தைத் துரியோதனன் சூதாடி அபகரித்துக்கொண்டான். அப்படி அபகரித்தது போதவில்லையென்று தன்னுடைய தாயாதிகளாகிய பாண்டவர்களின் சுதந்தரத்தையும் சூதாட்டத்தில் அபகரித்தான். அது போதவில்லையென்று அவர்கள் அணிந்திருந்த ராஜரீதியான உடைகளைப் பிடுங்கி எடுத்துக்கொண்டான். ஐவரும் இடுப்பில் ஒரு துணியைக் கட்டிக்கொண்டு கை கட்டி நிற்கும்படி செய்தான். அப்படிச் செய்தது தனக்கு மட்டில்லா மகிழ்ச்சியை உண்டு பண்ணியது என்று சூதாட்டத்தில் தனக்கு உதவிபண்ணிய தன் மாமாவாகிய சகுனியிடம் தெரிவித்தான். இப்படிச் செய்தது அடாத செயல். இக்கொடுமையைப் பார்த்த அனைவரும் அஞ்சினர்கள். ஆனல் யுதிஷ்டிரன் மட்டும் தன் பொறுமையை இழந்துவிடவில்லை. குழந்தை யொன்று தன் அப்பாவிடம் இப்படி நடந்துகொண்டால் அப்பா அதைக் குறித்து வருந்துவதில்லை. குழந்தையின் விளையாட்டு என்று அப்பா அதற்கு உடந்தையாயிருக்கிருர். தர்மராஜாவாகிய யுதிஷ்டிரனுடைய மனப்பான்மையும் அத்தகைய பாங்கில் இருந்தது. பிரபஞ்ச வாழ்வு என்னும் விளையாட்டில் உள்ள கேடுகளை யுதிஷ்டிரன் கேடாகக் கருதக்கிடையாது.

சுற்றமும் கிளையும் சூழ அரண்மனையில் வாழ்ந்த போதும், தன் சகோதரர்களுடன் தனியே ஆரண்ய வாசம் செய்தபோதும் தருமனின் மனநிலை ஒரேபான்மையுடையதாக இருந்தது. ‘குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை’ என்னும் முதுமொழிக்கு ஏற்பத் தன் தாயாதிகள் செய்த பெரும் பிழைகளை யெல்லாம் அறக்கடவுளின் புதல்வனை தருமன் பொறுத்துக்கொண்டான். அவன் நெறிபிசகாமல் கடைப்பிடித்த தரும நியதியே முடிவில் அவன் குடும்பத்தைப் பேரழிவினின்றும் காத்தது.

நிபந்தனைப்படி வனவாசம் பண்ணிக்கொண்டிருந்த பாண்டவர்களை ஏளனம் பண்ணுதற்பொருட்டு பொருமையே வடிவெடுத்திருந்த துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் ராஜரீதியாக உடையணிந்துகொண்டு வனபோஜனம் பண்ண அங்கு வந்து சேர்ந்தார்கள். அப்படி வந்தவர்கள் துரதிர்ஷ்டவசத்தால் கந்தர்வர்களால் கைது செய்யப்பட்டார்கள். பாண்டவர்களைப் பகடி பண்ண வந்தவர்கள் தாங்களே கந்தர்வர்களுக்குஅடிமையானர்கள். ஆடு மாடுகளைக் கட்டியோட்டுவது போன்று அவர்களைக் கைது செய்து கந்தர்வர்கள் அவர்களை ஓட்டிச் சென்ருர்கள். இதைப் பார்த்த யுதிஷ்டிரனுக்கு உடனே மனம் இரங்கியது. கஷ்டதசையிலிருந்த தன்னுடைய தாயாதிகளைக் காப்பாற்றுவது தன் கடமை என்று அவன் உணர்ந்தான். அவர்களைக் காப்பாற்றுதல் பொருட்டுப் பீமனையும் அர்ஜுனனையும் அனுப்பிவைத்தான். அர்ஜுனனும் தனக்குத் தேவலோகத்தில் ஆசிரியனுயிருந்த சித்திரசேனனேடு சமாதானம் செய்துகொண்டு பாண்டவர்களுக்கு ஜன்ம சத்ருவாயிருந்த துரியோதனனையும் அவனைச் சார்ந்திருந்த கூட்டத்தார் அனைவரையும் மீட்டான். ஓயாது கௌரவர்கள் தங்களுக்குப்புரிந்துவந்த கேட்டைப் பாண்டவர்கள் கேடாக ஏற்றுக்கொள்ளவில்லை. கேட்டைக் கேடாக ஏற்பது இகழ்ச்சி. கேட்டைத் தங்களைச் சோதிக்க வந்திருக்கும் நலனுக ஏற்றுக்கொள்ளுதல் பாராட்டுதற்குரிய பரந்த மனப்பான்மையாம். அதற்கெல்லாம் மேலாகத் தங்கள் எதிரிகளைப் பகைவர்களாகக் கருதாது அவர்களுக்கு நலனே செய்து வந்தது ‘ஐயம் இட்டு உண்’ என்னும் கோட்பாட்டுக்குத் தலைசிறந்த விளக்கமாகிறது.

இங்ஙனம் தருமத்தையே சார்ந்து நின்றவர்களுக்குக் கண்ணன் துணை நின்று முடிவில் அவர்கள் வெற்றிபெறச் செய்தான்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (442) முற்பிறவியில் நாம் எப்படி இருந்தோம் என்பதனை அறிய முடியுமா?

முற்பிறவியில் நாம் எப்படி இருந்தோம் என்பதனை அறிந்துகொள்ளுவது சாத்தியம். அதற்கேற்ற முயற்சி எடுத்துக்கொள்வது முற்றிலும் அவசியமாகிறது. முன்னாள் காலையிலிருந்து படுக்கப் போகும் வரையில் நாம் செய்த செயல்கள் முற்றும் இன்றைக்கு ஞாபகத்தில் இருப்பதில்லை. ஆனால் எண்ணிப்பார்த்து அவை யாவற்றையும் ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம். முற்பிறவியை அறிந்து கொள்ளும் பொருட்டு ஒருவன் செய்யவேண்டிய சாதனங்களை யோக சாஸ்திரம் விளக்குகிறது. அதே யோக சாஸ்திரம் மற்றொரு எச்சரிக்கையையும் சாதகனுக்கு ஞாபகமூட்டுகிறது. இந்தச் சரீரத்தில் நேற்றுச் செய்தது முழுதும் இன்றைக்கு ஞாபகத்தில் இல்லை. இது இப்படியிருக்க, வேறொரு சரீரத்தில் பல காலத்துக்கு முன்பு வாழ்ந்த வாழ்வை ஞாபகத்துக்குக் கொண்டு வருவதற்கு நீ முயலுவதால் உனக்கு வருகிற இலாபம் யாது? முறையாக முயன்றால் அதை ஞாபகத்துக்குக் கொண்டு வரலாம். மற்று, அம்முயற்சியில் நீ வீண்காலம் போக்காதே. பிறப்பு இல்லாப் பெருநிலையை எய்துவதே மானிடப் பிறவியின் நோக்கமாகும். சென்ற பிறப்பில் செய்த வினைகளுக்கு ஏற்ற பிரகாரம் பாப, புண்ணியங்களைத் துல்லியமாக இப்பிறப்பில் அனுபவிக்கின்றோம். மற்று, அது எத்தகைய பிறப்பு, அதில் என்னென்ன செயல்கள் செய்தோம் என்று ஆராய்வதால் புதிதாகத் தெரிந்து கொள்ளப்போவது ஒன்றும் இல்லை. அதனால் வீண் மனக்குழப்பமே மிஞ்சும். ஜீவர்களின் மீது உள்ள கருணையினாலேயே இவற்றை இறைவன் மறைத்து வைத்துள்ளான். இந்த ஜன்மத்தில் நீ செய்து முடிப்பதற்கேற்ற அரிய பெரிய செயல்கள் பல உள. ஆக, சென்ற விஷயத்தில் சிந்தையைச் செலுத்துவதற்கு மாறாக நீ இப்பொழுது செய்து முடிப்பதில் கருத்தைமிகச் செலுத்துவாயாக.

கேள்வி: (443) பார்வதிக்கு இரு பிள்ளைகள் இருக்க முருகனுக்கு மட்டும் ஏன் வேல் கொடுத்தார்?

பார்வதியும் அவளுடைய பிள்ளைகளாகிய கணபதியும் முருகனும் அவளுடைய சொரூபத்தில் இரண்டு பகுதிகளாகிறார்கள். எனவே புராணத்தில் அமைந்துள்ள மூர்த்திகள் தத்துவத்திற்கு விளக்கமாக அமைந்திருக்கிறார்கள். பார்வதி என்பவள் இயற்கைத்தாய். மக்களாகிய நாம் இயற்கையோடு நல்லிணக்கம் கொள்வது மிக அவசியம். அப்படிச் செய்வதற்கேற்ப நம்முடைய வாழ்வைப் பெருவாழ்வாக மேலோங்குவிப்பது சாத்தியம். கணபதி அறிவின் சொரூபம். முருகன் ஆற்றலின் சொரூபம். தாயாகிய பார்வதி அன்பின் வடிவினள். மானுடன் ஒருவன் அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய மூன்று பண்புகளையும் பெறுவானாகில் அவன் மேலோனாகத் திகழ்வது திண்ணம். சீரிய இந்தக் கோட்பாடு பார்வதி என்னும் இயற்கைத் தாயின் வாயிலாகவும் வெளியாகிறது.

அக்ஞானத்தை அறிவு வெல்கிறது. கையில் மோதகம் வைத்துள்ள விநாயகர் பூரண அறிவுக்கு விளக்கமாகிறார். ஆற்றலின் வடிவமான வேலைக்கொண்டு ஆங்காரத்தின் உருவமான சூரனை வென்றான் வேலவன். பரம்பொருள் ஒன்றேயாயினும் ஒவ்வொரு டேரியல்பையும் ஒருமுகப்படுத்தி ஒரு தனிக் கடவுளாகப் பாவித்தல் இந்துக்களின் மரபு. இதில் ஒன்றுக்கொன்று நிறைகுறைகளோ, வேறுவகைப் பேதங்களோ ஏதும் இல்லை.

ஆயுதம் இல்லாதவன் அரைமனிதன். முருகன் வேலாயுதத்தைக் கையில் வைத்துக் கொண்டு செயற்கரிய செயல்களைச் செய்து சாதிக்கிறான். இதுவே அவன் படைத்துள்ள வேலாயுதத்தின் உட்கருத்தாம்.

கேள்வி : (444) பால்ய விவாகம் ஏன் செய்தனர்?

பால்ய விவாகம் இன்றைக்குச் சட்டபூர்வமாகத் தடுக்கப்படுகிறது. மற்றும் இந்தப் பழக்கம் நடைமுறையில் இருந்த காலத்தில் இதன் விளைவாக நன்மைகள் பல உண்டாயின.

இக்காலத்திய சமுதாயத்தில் காமத்தைப் பற்றிய உணர்ச்சி ஒருவாறு அதிகரித்திருக்

கிறது. அத்தகைய உணர்ச்சியுடன் பாலிய விவாஹம் செய்தால் கேடு மிக உண்டாகும். ஆகையினுல் அந்தப் பழக்கம் இக்காலத்திற்கு உதவாது. பண்டொரு காலத்தில் சமுதாயத்தில் காமத்தைப்பற்றிய உணர்ச்சி வயது வந்த பிறகுதான் தற்செயலாக மக்களுக்கிடையில் உருவெடுத்தது. அந்த எண்ணம் உருவெடுப்பதற்கு முன்பே சிறுவனும் சிறுமியும் எதிர்காலத்தில் கணவனும் மனைவியுமாக வாழ்ந்திருப்பார்கள் என்னும் சம்ஸ்காரம் சின்னஞ்சிறு வயதிலேயே ஊட்டப் பெறுவார்களாகில் அதன் மூலம் அவர்களுக்கிடையில் உள்ள இணக்கம் காமத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகாது. சின்னஞ்சிறு வயதில் இருந்தே உடன் பிறந்த ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் காம உணர்ச்சி வடிவெடுப்பதில்லை. கிட்டத்தட்ட அதே பாங்கில் சின்னஞ்சிறு வயதில் மணந்துகொண்ட சிறுவனுக்கும் சிறுமிக்குமிடையில் உண்டாகிற தூய இணக்கம் காமத்தின் வேகத்தை மட்டுப்படுத்தியது. அதன் விளைவாக அவர்களுக்கு வாய்த்த மகப்பேறும் தூயதாக இருந்தது.

சிவனர் காமதகனம் செய்த பிறகே சிவனும் பார்வதியும் மணந்துகொண்டார்கள். அதன் விளைவாகக் கணபதியும் கார்த்திகேயனும் அவர்களுக்குத் தூய மகப்பேருக வாய்த்தார்கள். காமத்தின் விளைவாக வருகிற மகப்பேற்றுக்கும், தவத்தின் விளைவாக வருகிற மகப்பேற்றுக்கும் இடையில் வேற்றுமை மிக உண்டு. தவத்தின் விளைவாக வருகிற மகப்பேறு மேன்மைகள் பல வாய்க்கப்பெற்றதாக இருக்கிறது.

மேன் மக்களை உருவாக்குவது சமுதாயத்தின் பெரிய பொறுப்பாகிறது. இப்பொறுப்பை பழங்காலத்துப் பாலிய விவாஹம் நிறைவேற்றியது போன்று இக்காலத்திய வாழ்க்கை முறை நிறைவேற்றுவதில்லை. ஆயினும் இக்காலத்திய சூழ்நிலைக்குப் பாலிய விவாஹம் ஒரு பொழுதும் ஒத்துவராது. விவாஹம் செய்துகொள்ளும் முன்பும், அதற்குப் பிறகும் ஒவ்வொரு யுவனும், யுவதியும் தூய சீலம் நிறைந்த வாழ்க்கையில் ஈடுபடவேண்டும். இங்ஙனம் தம்பதிகள் இருவர்க்கிடையில் வாழ்வு தூயதாகத் திருந்தியமைதற்கேற்றவாறு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் மேன்மையுற்றுத் திகழ்வது திண்ணம்.

கேள்வி: (445) ஆலயங்களில் ஏன் சமய போதனை முறையாகச் செய்யக்கூடாது?

ஆலயங்களில் வழிபடச் செல்பவர்களுக்கிடையில்வாழ்க்கைமுறை சரியாகக் கையாளப்படுகிறது. அதாவது சமய அனுஷ்டானம் தானுக நிகழ்கிறது. 'Practice is better than precept.' சமயத்தைப் போதிப்பதை விடப் பழகுவது சாலச்சிறந்தது என்பது கோட்பாடு. The best way to preach Vedanta is to live Vedanta. சமயக் கோட்பாடுகளை மக்களுக்கிடையில் புகட்டுதற்குச் சிறந்த உபாயமாக அமைந்திருப்பது சமயத்தின் அனுஷ்டானமாம் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்திருக்கின்ருர். இக்கோட்பாட்டின்படி ஆலய வழிபாட்டுக்குச் செல்லுகிற பக்தன் ஒருவன் ஆங்கு முறையாக நடந்துகொள்வானுகில் தன் செயல் மூலம் மற்றவர்களுக்கு அவன் பாடம் புகட்டுகிருன். உடல், உள்ளம் ஆகிய இரண்டும் தூயவைகளாயிருப்பதற்கேற்ப ஆலயத்தினுள் பக்தனுடைய நடத்தையும் தூயதாயிருத்தல் வேண்டும். ஆலயத்தினுள் சென்ற பிறகு சிந்தையினுள் உலக எண்ணங்களை நுழையவிடலாகாது. மௌனமுற்றிருத்தல் அல்லது அடங்கிய குரலில் இறைவனுடைய நாமத்தை ஓதுதல் வழிபடுபவனுக்கு இன்றியமையாத செயல்களாம். கோயிலுக்குள் செல்லும் பக்தனொருவன் மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் இடைஞ்சல் செய்யலாகாது. சுயநலத்தைப் பின்னணியில் தள்ளிப் பிறர் நலத்தில் கண்ணும் கருத்துமாயிருத்தல் நல்ல வழிபாடாகிறது. மூர்த்திதரிசனம் செய்தானபிறகு ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து தியானம் பண்ண வேண்டும். தியானம் பண்ண முடியாதவர்கள் மேலான எண்ணத்தில்ஈடுபட்டுஉட்கார்ந்திருக்கலாம். இம்முறையில் நடந்துகொள்ளுபவர்கள் தங்கள் செயல்களின் மூலம் நல்ல பிரசாரம் செய்கிருர்கள். An ounce of practice is better than tonnes of tall talks — ஓர் இம்மியளவாவது அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது வண்டி வண்டியாக வாய்ப் பேச்சுப் பேசுவதை விட மேலானது என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார்.

அகத்தெளிவும் ஆன்ம தரிசனமும்

(ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் 2—12—84 அன்று கன்னியாகுமரி அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

மனிதனாகப் பிறந்தவன் தன் வாழ்வில் உயர் நிலை அடைய முயன்றே தீரவேண்டும். இதுவே சுவாமி விவேகானந்தர் வலியுறுத்திய இலட்சியம் ஆகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய மூவரும் நரயக்ஞம் என்ற சொல்லுக்குப் புதிய பொருளையும், புதிய ஜீவனையும் கொடுத்தவர்களாவார்கள். தெய்வத்திற்கும், மனிதனுக்கும், உயிர்வகைகளுக்கும் நாம் எவ்வாறு தொண்டு செய்ய வேண்டும் என்பதை அவர்கள்தங்கள் வாழ்க்கை நெறியால் விளக்கிக்காட்டினார்கள். நரயக்ஞத்தின் மூலம் மக்களுக்குச் செய்கின்ற தொண்டுதான் மகேசுவரனுக்குச் செய்யும் உண்மைத் தொண்டு என்று உலகத்தினர் உணரும்படி செய்தார்கள். பஞ்ச மகா யக்ஞங்களையும் செய்து முடித்துக் கர்ம வினைகளைத் தீர்க்கும் பொழுது மனிதன் தனக்குத் தானே முக்தியைத்தேடிக் கொள்பவன் ஆகின்றான். அவ்விதம் உலக வாழ்க்கையில் தன்னுடைய கடமைகளைப் பூர்த்தி பண்ணுபவன் பண்பும், ஒழுக்கமும், சீலமும் பூரணமாக வாய்க்கப் பெற்றவனாகிறான். நர யக்ஞத்தின் உண்மைப் பயன் இதுவேயாகும்.

பண்பிலும், ஒழுக்கத்திலும் பற்று உள்ளவனே நரயக்ஞம் செய்யும் தகுதியைப் பெற்றவனாவான். பிறருக்கு உதவும் பொழுது, தன்னுடைய கருணையினால் அவ்விதம் செய்வதாக மனிதன் எண்ணுதல் கூடாது. நாம் உதவி செய்யா விட்டாலும் உலகம் தன் போக்கில் தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு முன்னேற்றப் பாதையில் செல்லும். எனவே பிறருக்காகத் தொண்டு செய்வது அவர்கள் நலனை முன்னிட்டு அல்ல; நமது நன்மையை முன்னிட்டே என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். தொண்டு செய்பவனுக்குப் பண்புகள் பெருகும். அப்பண்புகள் ஆத்ம தரிசனம் செய்ய உதவும். ஆத்ம தரிசனம் செய்வதே நாம் பிறவி எடுத்ததன் பயன் ஆகும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் தெய்வீகப் பண்புகள் இயல்பாகவே அமைந்திருந்தன. தேவியின் காட்சி பெறும் பொருட்டு அவர் தமது செயல்களை அம்பிகைக்கு அர்ப்பணம் பண்ணினார்.

சர்வபரித்தியாகம் செய்த அந்த நிலையிலும் அவர் அர்ப்பணிக்கத் தயங்கிய ஒன்று அவரிடம் இருந்தது. அதுதான் சத்தியம். சத்தியத்தை அவரால் விட்டுக் கொடுக்க இயலவில்லை. ஏனெனில் சத்தியத்தின் துணை இல்லாமல் வாழ்க்கையின் குறிக்கோளை ஒருவராலும் அடைய இயலாது. எதை ஒருமுறை இழந்தால் மீண்டும் பெற இயலாதோ அந்தச் சத்தியத்தைப் பின்பற்றும் பொருட்டு ஹரிச்சந்திரன் தன் வீடு, நாடு, அரசாட்சி, மனைவி, மைந்தன் அனைத்தையும் துறந்தான். முடிவில் முனிவர்களும், மூன்று தெய்வங்களும் அவன் முன் தோன்றி அவன் இழந்ததை யெல்லாம் திரும்பவும் கொடுத்து ஆசீர்வதித்தனர். சத்தியம் இவ்வாறு தன் வலிமையை நிரூபித்தது.

நசிகேதஸ் என்ற சிறுவன் தன்னுடைய தந்தை கிழப்பசுக்களை யாகத்தில் தானமாகக் கொடுப்பதை அறிந்து வருந்தினான். "என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கப் போகிறீர்கள்?" என்று மீண்டும் மீண்டும் தந்தையைக் கேட்டு நச்சரித்தான். கோப வசப்பட்ட தந்தை "உன்னை யமனுக்குக் கொடுப்பேன்" என்றார். தந்தை சொன்ன வார்த்தை அசத்தியமாகப் போகலாகாது என்று துணிந்து நசிகேதன் தானே யமனுலகு சென்று சேர்ந்தான். யம தர்மராஜனின் வருகைக்காக அவன் வாசலில் மூன்று நாட்கள் காத்துக் கிடந்தான். தன்னைத் தேடிவந்த அதிதியை மூன்று நாட்கள் காக்க வைத்ததற்காகக் காலதேவன் நசிகேதனை மூன்று வரங்கள் கேட்கச் சொன்னான். தனது பெற்றோர்களுக்காகவும், உலக க்ஷேமத்திற்காகவும், ஆத்மஞானம் பெறும் பொருட்டும் அவன் கோரிய மூன்று வரங்களும் மூன்று படித்தரங்களில் அமைந்தன. யமன் கொடுப்பதாகச் சொன்ன உலக இன்பங்களை மறுதலித்துத் தன் தகப்பன் சாந்த மனத்தினன் ஆதல் வேண்டும் என்றும், உலக மக்கள் சுவர்க்கத்தை அடைவதற்கு ஏதுவான யக்ஞத்தைப் புகட்டவேண்டும் என்றும், பிரம்ம ஞானம் தனக்கு லபிக்க வேண்டும் என்றும்

மூன்று வரங்களை அவன் கோரினன். இங்ஙனம் சத்திய வழியில் சென்றதால் தானும் உய்ந்து உலக மாந்தரையும் உய்விக்கும் வல்லமையை அவன் பெற்றான்.

இனி, இக்கருத்தை விளக்குகின்ற உபநிஷத் மந்த்ரம் வருமாறு:

सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा
सम्यज्ज्ञानेन ब्रह्मचर्येण नित्यन् ।

ஸத்யேன லப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா
ஸம்யஜ்ஞாநேந ப்ரஹ்மசர்யேண நித்யன்

சத்தியத்தை நாம் காப்பாற்றினல் சத்தியம் நம்மைக் காப்பாற்றும். தந்தையின் வாக்கை நிறைவேற்றும் பொருட்டு ஸ்ரீ ராமன் வனவாசம் சென்றான். அவன் சென்ற இடமெல்லாம் சத்தியம் அவனுக்குத் துணை நின்றது. சத்தியத்தைக் காக்கும் பொருட்டு அவன் தம்பி பரதன் தான் முடிசூடாமல் தன் அண்ணனின் பாதுகைகளை அரியணையில் இருத்தி தான் தர்ம ராஜ்யம் நடத்தினன். அங்கே சத்தியமே கொலு வீற்றிருந்தது. துரியோதனன் சூதாடி தருமனிடம் வஞ்சகமாக நாட்டைக் களவாடினன். வனவாசத்தின்போது பீமன் "அண்ணா, சூது செய்து நாட்டைப் பறித்த பாதகர்களுடன் போர்தொடுத்து அவர்களை அழிக்க வேண்டும்" என்று வேண்டினன். தருமன் "தம்பி, சத்தியத்திலிருந்து ஒரு நாளும் பிசகக் கூடாது. உலகத்தைப் பாதுகாப்பது சத்தியமே யன்றி நாமோ, நமது ஆற்றலோ அல்ல. சத்தியத்தை ஒருவராலும் வெல்லவோ, ஒழிக்கவோ ஒரு நாளும் இயலாது. பன்னிரண்டு வருடங்கள் வனவாசமும், ஒரு வருடம் அஞ்ஞாத வாசமும் செய்வதாகப் பெரியப்பாவுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன். உயிரே போயினும் அதை மீறலாகாது" என்றார். பாரதப் போரின்போது பீஷ்மரும் துரியோதனனிடம் "அரசனே, என்னுடைய போர்த்திறமை, வீர பராக்கிரமம், வாள் வலிமை அனைத்தையும் முழு வேகத்துடன் செலுத்தி உனக்காகப் போர் புரிவேன். என் மீது வஞ்சகம் இல்லை. இருந்த போதிலும் நீ இறுதியில் தோல்வியையே தழுவுவாய். நீ அதர்மத்தையே துணை கொண்டாய். தருமன் சத்தியத்தையும், சத்தியத்தின் வடிவமேயான கண்ணபிரானையும் துணைகொண்டான். நல்லவர்களுக்குத் தோல்வியைக்கொடுப்பது போலப் பல சோதனைகள் செய்து முடிவில் வெற்றி ஒன்றையே உறுதியாக அளிப்பது தான் சத்தியம்" என்று எச்சரித்தார்.

சத்தியம் என்றைக்கும் நிலையானது; என்றும் ஒரே தன்மைத்தானது. இன்று ஒன்று, நாளை வேறு ஒன்று என்று சத்தியம் மாறுவதில்லை. அதை அறிந்துகொள்வதும் மிகவும் சுலபம். பிரயாசை உடைய எவரும் சத்தியம் கைவரப் பெறலாம். தவம் என்றால் பிரயாசை அல்லது முயற்சி என்றும், புதுப்பிப்பது என்றும் பொருள் கொள்ளலாம். தன்னையும் தன் ஆத்மாவையும் பிறவிப் பிணியினல் ஏற்படும் அவலங்களிலிருந்து மீட்டெடுத்து ஆண்டவனிடம் சேர்ப்பிக்கும் முயற்சியே தவம் எனப்படும். சத்தியத்தின் வழி இதுவாகும். ஸ்ரீராமன் பதினன்கு ஆண்டுகள் வனவாசம் செய்த போது தவமும் இயற்றினன். மரவுரி தரித்துக் கையில் கோதண்டம் அணிசெய்ய அவன் வனத்தில் திரிந்து சாதுக்களை ரட்சித்தும், துஷ்டர்களை சிட்சித்தும் தன் தவத்தை நிறைவேற்றினன். களையெடுத்தல், பயிர் வளர்த்தல் ஆகிய இரண்டு கடமைகளையும் அரசகுமாரனை ரகுராமன் செவ்வனே செய்து முடித்தான். இவ்விதம் ஆக்கமும், நீக்கமும் ஒரே வடிவத்தில் உறைவதை முதலில் வாலி புரிந்துகொள்ளவில்லை. "ராமா, தவக்கோலத்தில் நீ வில்லைத் தரித்தது ஏன்? எங்கள் குடும்ப விவகாரத்தில் நீ எப்படித் தலையிடலாம்? உயர்ந்த குலத்தில் உதித்த நீ எவ்வாறு அறம் பிசகி நடக்கலாம்?" என்றெல்லாம் கேள்விகள் கேட்டான். ஆனல் முடிவில் சத்தியமே தன் உருக்கொண்ட தசரதராமன் அவன் ஐயங்களைப் போக்கி அவனை ஆட்கொண்டபோது அவன் அழிவற்ற ஆனந்தப் பேற்றையே பெற்றான்.

நமது அன்றாட வாழ்வில் நாமும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய மூன்று தொழில்களையும் செய்து வருகின்றோம். கழனியில் முதலில் நாம் விதை விதைத்துச் சிருஷ்டியில் ஈடுபடுகிறோம். பிறகு நீர் பாய்ச்சி, பயிர்காத்துக் களையெடுத்து ஸ்திதி என்பதைச் செய்கிறோம். பயிர் முற்றிக் கதிர் சாய்ந்தவுடன் கதிர் அறுத்துச் சம்ஹாரத்தை நிகழ்த்துகிறோம். இது

உலக இயல்பு. தவயோக நிலையில் முனிவர்களும் இந்த முத்தொழிலில் ஈடுபட்டார்கள். காமம், குரோதம் முதலிய ஆறு பகைவர்களையும் அவர்கள் சம்ஹாரம் செய்தார்கள். ஆத்ம ஞானத்தை அகத்தில் சிருஷ்டித்தார்கள். உலக க்ஷேமத்தின் பொருட்டு அதை ஸ்திதி செய்து யாவருக்கும் வாரி வழங்கினர்கள். இங்ஙனம் மானுடன் ஒருவன் தனக்கும், உலகுக்கும் செய்துகொள்ளும் நலம் அல்லது உதவி 'ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத்ஹிதாயச' எனப்படும்.

வாழ்க்கையில் இங்ஙனம் ஒரு காரியத்தில் ஈடுபடும்பொழுது அதற்கு எதிரானது தானே மடிந்து போகிறது. துஷ்டத்தனமான செயல்களில் ஈடுபடும்பொழுது உள்ளத்தில் கேடுகள் வடிவெடுத்து வரும். ஆனல் தூய்மையான சிந்தனை வளர்ந்தால் துயரமும் துக்கமும் விலகிப் போய்விடும். சத்திய நெறியில் நிற்பவனுக்கு அந்தச் சத்தியமே தக்க துணையாக அமையும். தெளிந்த உள்ளமும், தூய்மையான சிந்தனையும் கொண்டிருந்த சீதா தேவி சிறையிருந்த காலத்தில் கற்பு என்னும் பொற்பிணையே போற்றினள். ஆகவே பஞ்ச பூதங்களும் அவளை அடிபணிந்து ஏத்தின. தன்னை எரிக்குமாறு அவள் பணித்தபோதும், அக்னி அவள் முன் தோன்றி அவளுடைய கற்பெனும் மாண்பினல் தானே தகிக்கப்பட்டதாகக் கூறி இறைஞ்சி நின்றது. அயோத்தி ராமன் அவள் உணர்வில் உறைந்து ஆத்ம ராமன் ஆனன். பட்டாபிஷேகம் ஆனபிறகு அவளைக் காட்டுக்கு அனுப்பியபோது அவள் கடைப் பிடித்த சத்தியம் ஒன்றே அவளுக்குத் துணை நின்றது. அதன் பயனக அவளுக்கு லவனும், குசனும் பிறந்து ஸ்ரீ ராமனையும் விஞ்சும் உரனும், உறுதியும் பெற்றவர்களாக வளர்ந்தார்கள். சிறுவர்களாக இருந்தபோதே பற்றற்ற நிலையை அவர்கள் பெற்றிருந்தார்கள். இவ்விதம் அரசாங்கமும், சமூகமும் செய்யமுடியாததைத் தூய்மையான சூழ்நிலை செய்து சாதித்தது. லவனும், குசனும் ராஜாராமன் கொடுத்த சன்மானத்தைத் தூசுக்குச் சமமாக உதறி விட்டார்கள். "உலக ஆசை உடையவர்களுக்கே இது மதிப்பு மிக்கது. எங்களுக்கு இது வெறும் தூசுக்கு நிகர்" என்று கூறி விட்டார்கள். எனவே தூய்மையான உள்ளமும், சத்தியமும் தான் ஒருவனுக்கு உண்மையான உறுதுணை என்பதை நாம் அறிகிருேம்.

விவேகானந்தர் பரிவ்ராஜகராக அனைத்தையும் துறந்து காட்டிலும், மேட்டிலும் சுற்றியலைந்த பொழுது ஒரு நாள் பசித்த புலி ஒன்று அவர் வழியில் குறுக்கிட்டது. அதைக் கண்டு விவேகானந்தர் மகிழ்ச்சியுற்ருர். "இவ்வளவு நாள் அரும்பாடுபட்டுப் பாதுகாத்த உடல் இன்று பசியின் கொடுமையினல் மண்ணில் விழுந்து வீணகப் போகிறதே என்று வருந்தினேன். அப்படியின்றி அது பசித்த ஒரு புலிக்கு உணவாகப் பயன்படுவதை எண்ணி மகிழ்ச்சி அடையலாம்" என்று கருதினர். புலியோ ஒன்றும் செய்யாமல் வேறு திசையில் சென்று விட்டது. எனவே தெளிந்த மனமே ஒருவனுக்குச் சிறந்த பாதுகாப்பு என்பதை நாம் உணர்கிருேம்.

துயரத்தின் உச்சநிலை அடையும் ஒருவன் தற்கொலை செய்து கொள்ள முயலுகின்ருன். அது மகா பாவமும், கோழைத்தனமும் ஆகும். சமையல் பாதியில் நின்றது போன்று, அத்தகையவர்கள் இந்த மண்ணுலகுக்கு வந்த காரியத்தை நிறைவேற்ருமல் போகும் குற்றத்தைச் செய்தவர்களாவார்கள். மனத்தெளிவு இல்லாதவர்களுக்கே இத்தகைய விபரீத யோசனைகள் உருவாகும். ஞானிகளுக்கோ குழப்பம் வந்த காலத்திலும் உள்ளத்தில் தெளிவு உடனே உதயமாகும். அற்ப ஆயுளையும், அற்புதமான அறிவையும் வரமாகக் கொண்டு பிறந்து வளர்ந்த மார்க்கண்டேயன் பதினறு வயதை எட்டியபோது அவன் பெற்ருேர் ஒன்றும் செய்யத் தோன்ருமல் கதறி அழுதார்கள். "என்னைக் கண்டு ஏன் கண் கலங்குகிறீர்கள்? நான் செய்த குற்றம் என்ன?" என்று மார்க்கண்டேயன் பெற்ருேர்களைப் பார்த்துக் கேட்டான். "அப்பா, எங்களுக்குப் பின் தோன்றிய நீ, எங்களுக்கு முன்னே மறைவாய்" என்று கூறிக் கண்ணீர் விட்ட பெற்ருேர்களைப் பார்த்து மார்க்கண்டேயன் சிரித்தான். "அன்னை, தந்தையரே, உமக்கு வரம் கொடுத்தவர் யார்? சிவனல்லவா? அந்தச் சிவன் உள்ளளவும் என்னில் சீவனும் இருக்கும். சிவன் செத்தால்தான் எனக்கும் சாவு" என்று

கூறி அவர்களைத் தேற்றினன். இதுவே உண்மையான உள்ளத்தெளிவாகும். நமது காலத்திலும் காந்தியடிகள் தமக்குக் குழப்பம் நேரிட்ட போதெல்லாம் அந்தர்முகப்படுவது வழக்கம். மனதை உள்நோக்கித் திருப்பிச் சத்தியத்தின் தூய ஒளியை அவர் தரிசித்தார். இவ்வாறு சத்திய நெறியில் செல்பவர்களுக்கு மனத் தூய்மையே உற்றதுணையாக, சிறந்த பாதுகாப்பாக வந்து அமைகிறது.

உள்ளத்தில் அழுக்கு நீங்கப்பெற்றவர்கள் சுயஞ்சோதியை உள்ளே தரிசிக்கிறார்கள். கண்ணோடு மனம் பொருந்தும் போது, புறக் காட்சி தோற்றத்துக்கு வருகிறது. நாம் கவனக்குறைவாக இருந்தால் வெளித்தோற்றம் உள் மனதில் பதிவதில்லை. அது போன்று தூய்மையும், சத்தியமும் இணைந்தால் தான் அகக் காட்சியும் தோன்றும். புற உலகை அறிய மனமும், கண் என்னும் பொறியும் உதவுவது போல, அகவுலகை உணரத் தூய்மை, சத்தியம் ஆகிய இரண்டும் அவசியம் தேவை. உள்ளத்தில் மாசு இல்லாதவர்களுக்கு ஆன்ம சொரூபம் காட்சிக்கு வருகிறது. இளமைப் பருவத்திலேயே விவேகானந்தருக்குக் கடவுளைக் கண்டே தீரவேண்டும் என்ற முமுக்ஷுத்வம் வந்தது. "குழந்தாய்! கடவுளைக் கண்டிருக்கிறேன். உனக்கும் காட்டுவேன்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருக்கு உறுதியளித்தார். சித்தம் சுத்தியடைந்த பின், பளிங்குக் கண்ணாடி போல அது ஆன்மாவைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதன் காரணமாகவே "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்று வள்ளுவரும் அறுதியிட்டு உரைத்தார்.

சிவபெருமானைத் துறவி வேந்தன் என்றும் திரிலோக குடும்பி என்றும் இரு வேறுபட்ட நிலைகளில் பக்தர்கள் வழிபடுவார்கள். ஆலகால விஷத்தை அருந்தி தியாகராஜனாக விளங்கும் சிவபெருமான் உலக நன்மையை முன்னிட்டுக் கடுந்தவம் இயற்றினார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவ்விதமே மாலையிட்டு மணந்த மனைவியுடன் வாழ்ந்த போதிலும், கடுமையான தவ விரதங்களில் சிந்தை செலுத்திக் கவிராஜன், புவிராஜன் இவர்களுக்கும் மேலான தவராஜன் என்னும் மாண்பினைப் பெற்றார். கவிராஜன் சொற்களை ஆள்கிறான். பக்தராஜன் தெய்வத்தின் மீதே ஆதிக்கம் செலுத்துகிறான். பக்திக்குக் கட்டுப்பட்டுக் கண்ணன் பாண்டவர்களுக்காகத் தூது சென்றான், தேரோட்டினன். "ஆயுதம் எடுக்க மாட்டேன்" என்று சபதம் செய்தவன் தன் பக்தரான பீஷ்மரின் வாக்கை நிறைவேற்றும் பொருட்டுச் சக்ராயுதத்தைக் கையில் ஏந்தினன். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்று இந்த நிலையையே மணிவாசகப்பெருமானும் விவரிக்கின்றார். "கண்ணா, எதிரிகளை அழிக்க நீ சங்கல்பித்தாலே போதுமானது. நீ ஆயுதம் வேறு எடுக்கவேண்டுமா" என்று எண்ணிப் பீஷ்மர் சிரித்தார். துரியோதனன் தனது திறமையையும், நாணயத்தையும் சந்தேகித்தபோது பீஷ்மர் "என்னுடைய சௌரியத்தைக்கண்டு வியந்து, இனி அர்ஜுனனை நம்பிப் பயனில்லை என்று கண்ணனே ஆயுதம் எடுப்பான்" என்று சபதமிட்டிருந்தார் பீஷ்மர். அந்தச் சபதம் நிறைவேறியதா என்று குறிப்பால் உணர்த்திப் புன்னகை பூத்தான் கண்ணன். இவ்விதமே தன் பக்தரான மாணிக்கவாசகரின் பொருட்டு ஆலவாய் அண்ணலும் நரியைப் பரியாக்கி, பரியை மீண்டும் நரியாக்கிக் கரையில் மண்சுமந்து பிரம்படி பட்டார்.

எனவே சத்திய நெறியைப் பின்பற்றுபவனுக்குக் கடவுளும் கட்டுப்படுகின்றார். அவன் சித்தத்தை அடக்கி மனதைத் தன்வசம் வைத்திருப்பவன். அத்தகைய யதிகளுக்கு நாடு, இறைவன், பிரபஞ்சம் அனைத்துமே சொந்தமாகும். ஆனால் அவர்களோ எதையும் சொந்தம் கொண்டாடுவதில்லை. "ஆசை அறுமின், ஆசை அறுமின், ஈசனோடாயினும் ஆசை அறுமின்" என்றும் "நிராசையின்றேல் தெய்வமுண்டோ" என்றும் அவர்கள் மனத்தெளிவுடனே விளங்குகின்றார்கள். அழுக்கடைந்த மனத்தின் ஊடே பிரபஞ்சத்தைப் பார்க்கும் போதுகேடுவிளைகின்றது. நிர்மலமான உள்ளத்துடன் பார்க்கும்போது அது நன்மையே செய்யும். "தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு சிந்தையில் நோக்கிடுவாய்; அன்னை பராசக்தி அவ்வுரு ஆயினள் அவளைக் கும்பிடுவாய் நன்னெஞ்சே" என்று இந்தத் தத்துவத்தை அழகாக விளக்குகின்றார் பாரதி. (தொடரும்)

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு V. S. நரசிம்மன்)

'சமயங்களின் எதிர்காலம்' என்ற தலைப்பில் சுவாமிஜி அவர்களின் உரையைக் கேட்ட பின், கேள்வி—பதில் நிகழ்ச்சி தொடங்கியது:

கேள்வி: 1. வார்தாவில் ஆசாரிய வினோபா அவர்களுடன் நாங்கள் உரையாடினோம். ''தற்காலத்தில் மதம் பொய்த்துவிட்டது; ஆன்மீகமே மனிதனைக் காப்பாற்றும்'' என்று அவர் குறிப்பிட்டார். ஆனால் நீங்கள் மனிதனுக்கு மதம் தவிர்க்க முடியாதது என்று கூறுகின்றீர்கள். இரண்டும் மாறுபடுகின்ற கருத்துகளாக உள்ளனவே!

பதில்: மதம் என்ற சொல்லில் அவர் எதைக் குறிப்பிட்டார் என்று எனக்குப் புலப்படவில்லை. ஒரு வேளை பொருளற்ற சடங்குகளை அவர் குறிப்பிட்டிருக்கலாம். மதம் என்பது தனிப்பட்ட மனிதனின் பண்பாடு என்று நான் கருதுகிறேன். உணவு எவ்வளவு தேவையோ, அவ்வளவு தேவை மதமும்; அது மனிதனுக்கு அடிப்படையானது. ''மதம் என்பது மனிதனின் அகத்தே உள்ள தெய்வீகத்தை விகசிக்கச் செய்வது'' என்று சுவாமி விவேகானந்தர் கூறினர். மதம் என்பதற்கு அவர் தரும் இந்த வரையறை மிகவும் முற்போக்கானது என்பதில் ஐயமில்லை.

கேள்வி: 2. ஆன்மீகம், மதம் இரண்டும் வேறுபட்டவையா?

பதில்: மதத்தை இழிவுபடுத்துவது பூசாரித்தனமே, priestcraft. ஆத்ம ஞானி என்றும் எவரையும் சுரண்டுவது இல்லை. சாதாரண மனிதன் ஏமாற்றப்படுத்தப்படும் போது பூசாரித்தனம் நிலவுகின்றது. பலவித மூட நம்பிக்கைகளும் இதில் அடங்கும். எங்கு ஏமாற்றுத் தன்மையும், சுரண்டலும் உள்ளனவோ, அங்கு உண்மையான மதம் கிடையாது; எனவே இத்தகைய கீழான மனப்பான்மையை 'மதம்' என்று கருதிச் சிலர் சாடியிருக்கலாம். உண்மையில் மதமும், ஆன்மீகமும் வேறுபட்டவை அல்ல. நல்ல நெறியில் மதவாதியாக வாழ்ந்து, யோகப்பயிற்சி செய்வதே ஆன்மீகம்.

கேள்வி: 3. பூசாரிகள் இல்லாது மதத்தை எப்படிக் கைக்கொள்வது?

பதில்: பூசாரிகள் அவசியம். அவர்களைத் தேவை இல்லை என்று ஒதுக்க முடியாது. நல்ல ஞானியின் உபதேசத்தை, மதத்தின் கோட்பாட்டைத் தனது சுயநலத்திற்காகப் பயன்படுத்தி, கள்ளமில்லா மக்களை ஏமாற்றும் தீய நெறியே பூசாரித்தனம் எனப்படும். அதுவே கண்டிக்கப்படவேண்டியது.

வேதாந்தத்தில் மேலான தத்துவங்கள் 'ஞான காண்டம்' ஆகும்; ஆயின் கர்மகாண்டம் போக வாழ்க்கையில் மனிதனை ஈடுபடுத்தும் போது, அது கண்டிக்கப்படுகின்றது. ''நான் தான் நல்வழி'' என்பது இயேசு கிறிஸ்துவின் மொழி. அங்கு 'நான்' என்பது தர்ம நெறியைக் குறிக்கின்றது. ஆனால் பாதிரிகள் என்ன சொல்கின்றனர். ''சர்ச் ஒன்று தான் இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட உரிமை உள்ள ஏஜண்ட். அதன் மூலம் தான் ஒருவன் நற்கதி அடைய முடியும். ஏசுவை அடைய, மோக்ஷம் அடையச் சர்ச் இன்றியமையாதது'' இது தான் பூசாரித்தனம், priestcraft. இத்தகைய மனப்பாங்குள்ள மதவாதிகள் எல்லா மதங்களிலும் உள்ளனர்; அவர்கள் அனைவரும் மக்களை ஏமாற்றுகின்றனர். உண்மையான சமயப் பற்றுள்ள நாம் அதை அனுமதிக்கக் கூடாது. 'ஆன்மீக ஒளியை உண்டாக்கு; அநியாயமாக ஏமாற்றாதே' — இதுவே சமயப்பற்றுள்ளவனுக்கு விதிக்கப்பட்ட நற்பணி.

கேள்வி : 4. மதம் தவறாகக் கையாளப்படுவது போல், ஆன்மீகமும் (spirituality) தவறாகப் பயன்படுத்தப்படுகின்றதா?

பதில் : ஆன்மீகத்தில் பல சித்திகள், அற்புதச் செயல்கள் இடம் பெறுகின்றன; இறந்து போனவர்களுடன் தொடர்பு கொள்ளும் 'மீடியம்' என்று பலர் உள்ளனர். இவை சாதகனின் முன்னேற்றத்துக்குப் பெரும் இடையூறுகளை விளைவிக்கின்றன. இத்தகைய செயல்களை நல்ல மதவாதிகளாகிய நாம் புறக்கணிக்க வேண்டும்; சிறிதளவு கூட ஊக்குவிக்கக் கூடாது. மாசற்ற யோகப்பயிற்சி, தன்னடக்கம் அதன் மூலம் பண்பாட்டில் மேலோங்குதல் இவையே ஆன்மீகம்.

சித்திகளும், 'மீடியம்' பற்றிய பயிற்சிகளும் களங்கமற்ற சாதாரண மக்களை மயக்கத்தில் ஆழ்த்துகின்றன. இவற்றைப் பின்பற்றுபவர்கள் நல்ல ஆன்மீகவாதிகள் அல்லர். ஞானி என்றும் அனைவரையும் நன்னெறிப் படுத்துபவர். மக்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்பவர் ஞானி ஆகமாட்டார்.

கேள்வி: 5. அவரைப் 'புரட்டு ஞானி' என்று கூறலாமா?

பதில்: அல்ல. ஒருவர் ஞானியாக இருப்பார்; அல்லது இருக்கமாட்டார். 'நல்ல ஞானி' 'போலி ஞானி' என்ற வேறுபாடு காண இரண்டு பிரிவினர் கிடையாது!

கேள்வி: 6. பூசாரித் தன்மையால் பூசாரிகள் ஒழிந்து போவார்களா?

பதில்: பூசாரித் தனத்தால் (priestcraft) பூசாரிகள் அழிவதில்லை; மாறாகச் சமுதாயத்தின் பலனை உறிஞ்சும் அட்டைகள் போன்ற மனிதர்களை அது உருவாக்குகின்றது. பூசாரி காக்கலாம்; அழிக்கலாம். நன்மை செய்யலாம் அல்லது ஏமாற்றிச் சுரண்டலாம். மதத்தில் என்றைக்கும் சடங்குகள் தவிர்க்கமுடியாதவை. எனவே பூசாரிகள் தேவை. சடங்குகளை முறைப்படி செய்யவேண்டும். சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பூசாரிகள் மிகவும் அவசியம். அவர்களில் ஒரு சிலர், மூடநம்பிக்கையை வளர்த்து அதன் மூலம் மக்களை ஏமாற்றுகின்றனர். இது முன்னேற்றத்தைத் தடுக்கின்றது; இது மக்களுக்குச் செய்யும் தொண்டு அன்று. எனவே இத்தகைய பிற்போக்கு நடவடிக்கைகளை ஞானிகள் கண்டிக்க வேண்டும். மதத்தின் நல்ல அம்சங்களுக்கு என்றும் சமுதாயத்தில் வரவேற்பு உண்டு. சாதாரண சடங்குகளைக்காட்டிலும், ஞானத்தை மக்களிடையே பரப்பி, சடங்குகள் எந்த அளவு தேவையோ, அதை மட்டும் வலியுறுத்தும் மதவாதிகளும், பூசாரிகளும் சிறந்த சேவை செய்கின்றனர். செய்ய வேண்டியது இதுதான்.

கேள்வி: 7. ஆலய வழிபாட்டில் சுரண்டலைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

பதில்: ஆலய வழிபாடு பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மனதில் சாந்தியை உண்டாக்குகின்றது. அதை, அடிப்படையாகக் கொண்டு, யார் ஏமாற்றினாலும், சுரண்டினாலும் அச்செயலை அனுமதிக்கக் கூடாது. மதத்தின் பெயரைச் சொல்லி கள்ளம் கபடு அற்ற மனிதர்களை, யார், எந்த முறையில் ஏமாற்றினாலும் எதிர்த்து நில்லுங்கள்.

கேள்வி: 8. ஒரு குறிப்பிட்ட குழுவினர் தங்களது மதமே சிறந்தது என்று மிகவும் தீவிரமாகக் கருதுகின்றனர். அதனால் மற்ற சமயத்தினரைக் கீழ்த்தரமாக எண்ணி நகையாடுகின்றனர். 'அவர்களுக்கு மதத்தைப் பற்றிய சரியான கண்ணோட்டம் இல்லை' என்று தானே கொள்ளவேண்டும்.

பதில்: மதத்தின் பணி ஞானத்தை அளிப்பது தான். மனிதன் இருக்கின்ற நிலையில் இருந்து ஒருபடி முன்னேற மதம் உதவ வேண்டும். மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதாக எண்ணுகின்றவனுக்கும் இது தேவையான உதவி. அவனுக்கு எது தேவையோ, அது அளிக்கப்பட வேண்டும். இதுவே மதவாதிகளாகிய நம்முடைய லட்சியம்.

கேள்வி: 9. அவருடைய கேள்வியின் உட்பொருள் இப்படி இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு மதவாதியும் தன்னுடைய மதமே சரியான, சத்தியமான நெறி என்று கருதுகின்றான். உண்மையை உணர அவனது மார்க்கமே சாலச் சிறந்தது என்பது அவனுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே அஞ்ஞானிகள் என்று தன்னால் கருதப் படும் புற மதத்தினருக்கு மெய்யான ஞானத்தைப் புகட்ட வேண்டியது தன்னுடைய புனிதமான கடமை என்று அவன் கருதுகிறான். எனவே மத மாற்றத்தில் தீவிரமாக ஈடுபடுகின்றான். அவனுடைய போக்குச் சரியானதா?

பதில்: விளைவுகளை ஆராய்வதன்மூலம் மூல காரணத்தை நாம் மதிப்பிடலாம். என்றும் தீமை புனிதத்தை உருவாக்க முடியாது. ஒரு நெறியை முழுமனதுடன், நேர்மையுடன், கவனத்துடன் பின்பற்றி அதன் மூலம் ஒருவன் பக்குவம் அடைகின்றான் என்றால், அந்நெறி செந்நெறி என்பதில் ஐயமில்லை. அவன் சரியான பாதையில் செல்கின்றான் என்றுதானே கருத வேண்டும்.

இரண்டு விதமான உணவு வகைகள் இருவருக்குத் தரப்படுகின்றன. சத்துள்ள உணவை

உண்பவன் நல்ல ஊட்டம் பெறுகின்றான்; அது போன்றதே ஆன்மீகமும். ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவது அந்த மார்க்கத்தின் சத்தியத்தை நிரூபிக்கின்றது. தர்மம் என்பது யாது? "சரீரம், மனம், ஆன்மீகம்—ஆகிய மூன்று நிலைகளில் எது உன்னைத் திடமாக உறுதிப்படுத்துகின்றதோ, அதுவேதர்மம். இம் மூன்றிலும் எது உன்னைப் பலவீனப்படுத்துகின்றதோ அது அதர்மம். விஷத்தை ஒதுக்குவது போல் அதைப் புறக்கணித்து விடு"—இது சுவாமி விவேகானந்தரின் உபதேசம். உணவின் தரத்தை உடல் ஊட்டத்தைக்கொண்டு மதிப்பிடுவது போன்றது இத்தகைய தேர்வும்! ஒரு மத சம்பிரதாயத்தைப் பின்பற்றி அதன் மூலம் பண்பில் மேம்பட்டுத் தியாக மனப்பான்மை மேலிட்டு, நல்லொழுக்கத்துடனும், சேவை செய்யும் நாட்டத்துடனும் ஒருவர் மாறி அமைந்தால், அது சரியான சமயநெறி ஆகின்றது; அவனது நடத்தை கீழ்த்தரமானதாக மாறினால், அது சரியானது அன்று; எவரும் அவனையும், அவன் நெறியையும் மதிக்கமாட்டார்கள். அது சமயத்திற்குப் புறம்பானது; எனவே விளைவை ஆராய்ந்து பார்த்தால் உண்மையான மதம் எது என்பது நன்கு புலப்படும்.

கேள்வி 10. சில சமயம் விளைவு என்ன என்று அறிய பல ஆண்டுகள் ஆகலாம். 'இந்த நெறி நல்லது' என்று எதை நம்பி ஈடுபடுவது?

பதில்: விளைவைப்பற்றி யார் தீர்மானிப்பது? காலம் அதிகம் ஆகும் எனின், நாம் பொறுமையாக இருக்க வேண்டும்; காலத்தில் இயல்பாகவே கனியவேண்டும். காலதாமதம் தவிர்க்க முடியாதது; நம் முன்னே கரையற்ற, கால அளவு நித்திய சொரூபமாக நிற்கின்றது! நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியது தான்.

கேள்வி: 11. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கூற விரும்புகின்றேன். டாக்டர் ஐன்ஸ்டீன் விஞ்ஞான மேதை மட்டுமல்லாது, சிறந்த தத்துவ மேதையாகவும் திகழ்ந்தார்.

பதில்: ஸ்ரீ ராமகிருஷ்ணர் அர்ச்சகர் மட்டுமல்லர், சிறந்த ஆன்மீகவாதியும் ஆவார். அர்ச்சகர்களுக்கு அவர் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார். கைத்தொழில், அரசியல், அர்ச்சகத் தொழில் ஆகிய மூன்று நிலைகளில் இருந்தும் மூன்று பெரிய ஆன்மீகவாதிகள் தோன்றினர். அவர்கள் முறையே ஏசுகிறிஸ்து, ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆகியோராவர். எனவே ஞானிகள் எல்லா நிலைகளிலும் தோன்றி உலகத்தைப் புனிதப்படுத்துகின்றனர். எது மேம்படுத்துகின்றதோ அது சரியானது; எது கீழ்மைப்படுத்துகின்றதோ அது தவறானது. அதை நாம் அறிந்து, சரியானதைத் தேட வேண்டும்.

கேள்வி: 12. உலகில் அநேக மதங்கள் உள்ளன. ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்களை வலியுறுத்தும் இம்மதங்களின் 'சத்திய நிலையை' எப்படி நிலை நிறுத்துவது?

பதில்: மதங்கள் தம்மிடையே சண்டையில்லாது இருப்பதே பெரிய காரியம்! ஒரு பெரிய காட்டில் பல் வேறு மரங்கள், தம்மிடையே சச்சரவே இல்லாது, தம்போக்கில் நெடிது ஓங்கி வளர்ச்சி அடைகின்றன. நம்முடைய நிலையும் அப்படி இருக்கவேண்டும். மற்ற மதத்தினருடன் சுமுகமான, ஆரோக்கியமான இணக்கம் கொள்ள வேண்டும்; இன்றேல் தொடர்பே இல்லாது ஒதுங்கி இருக்க வேண்டும். தவறான இணக்கம் பலவிதத்திலும் பெரும் தீங்கையே தோற்றுவிக்கும். அதைத் தவிர்ப்பது முக்கியம்.

கேள்வி: 13. கிறிஸ்து மதம் ஹிந்து மதத்துடன் பல விதத்திலும் ஒத்து வருகின்றது. அதைப் போன்ற வேறு மதம் யாது உள்ளது என்று சுவாமிஜி கருதுகின்றார்?

பதில்: இன்று இரவு இந்தத் தலைப்பில் விவரமாக ஆராயலாம். நம்மைப் பொறுத்தவரையில் வேதாந்தத்தில் ஏற்ற வகையில் உள்ள கிறிஸ்துவக் கருத்துக்களையே ஒப்புக்கொள்கின்றோம். உண்மையைக் கூறப் போனால், அநேக கிறிஸ்தவர்களைக் காட்டிலும், ஒருசில ஹிந்துக்கள் அந்த மதத்தை நன்கு அறிந்துள்ளனர். பல ஆண்டுகளுக்கு முன் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் ஒரு கட்டுரைப் போட்டி நடைபெற்றது. 'கிறிஸ்துவின் வாழ்வும் உபதேசமும்' என்பது தலைப்பு. முதல் பரிசு பெற்றவன் ஒரு ஹிந்து மாணவன்! ஹிந்துவாக இருந்தும் மிகவும் சிறந்த முறையில் ஏசு கிறிஸ்துவைப் பற்றி எப்படி எழுதி

ளுய்?' என்று அவனைக் கேட்டார்கள். 'நான் ஹிந்துவாக இருப்பதால்!' என்று பதில் கொடுத்தான். அனைத்துக் கருத்துக்களையும் அரவணைக்கும் பண்பு ஹிந்துவிற்கு அலாதியானது. அனைவரும் ஏற்கும் தத்துவத்தின் அடிப்படையில் அது அமைந்திருப்பதே இதற்குக் காரணம். நம்பிக்கைகள் மட்டுமே அதன் ஆதாரமாக இல்லை. இங்கு முக்கியத்துவம் தனிப்பட்ட நபர்களுக்குக் கிடையாது; அவர்கள் உரைத்த, வாழ்ந்து காட்டிய தத்துவமே முக்கியம். எனவே ஒரு மனிதனின் சிறப்பு மிக்க வாழ்வை வைத்து அவரைக் கணித்தால் அது பாராட்டுதற்குரியது. அவதார புருஷர்களை, ஞானிகளை ஹிந்து இம்முறையில் தான் எடை போடுகின்றான். அது தான் சரியான நேர்வு. ஆகவே சமயக் குழுக்களின் சச்சரவோ, பிரச்சினையோ ஹிந்துவிற்கு எழுவது இல்லை.

கேள்வி: 14. உலகில் தீமை அதிகம் காணப்படுகின்றது. இரண்டு உலகப் போர்கள் நிகழ்ந்து விட்டன; பயங்கர அணு ஆயுதப் போர் நம்மை எதிர் நோக்குகின்றது. தெய்விகமோ, நல்லதை நாடுகின்ற மனப்பாங்கோ மனிதரிடம் இல்லை; தீமையே அவர்களைச் சூழ்ந்துள்ளது. இத்தகைய மக்களுடன் எப்படித் தொடர்பு கொள்வது?

பதில்: மக்களிடம் பல தரப்பட்ட சூழ்நிலைகளில் நாம் தொடர்புகொண்டு குறிப்பிட்ட முடிவை செய்கிறோம். "மற்றவர்களை நீ எடை போடாதே-உன்னை அவர்களும் எடை போடாதிருக்க வேண்டும் என்றால் —Judge not lest thou be judged" என்பது நமக்குப் போதனை. எவரேனும் ஒருவர் தீயவர் என்று ஐயம் திரிபு அற நிச்சயிக்கப்படுவதற்கு முன், அவரை நல்லவர் என்றே நாம் கொள்ள வேண்டும். அதுவே சமுதாய நீதி. ஆன்மீகத்தில் எல்லா வழிகளிலும் தெய்வீகத்தை உணரும்படி நமக்குப் போதிக்கப்படுகின்றது. இதை எப்படிப் பின் பற்றுவது? ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசிக்கின்றார்:

"உலகம் முழுவதும் நாராயண சொரூபம். ஆனால் புலி நாராயணனுக்கு எட்ட இருந்து நமஸ்காரம் செய்". உன்னுடைய மனப்பாங்கிற்கு ஏற்ப உலகம் காட்சிதரும். ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் தென்னாட்டிற்கு யாத்திரை வரும் போது, கோதாவரி நதிக் கரையோரம் நடந்து சென்றார். பக்தியில் அவர் மனம் எப்பொழுதும் திளைத்து இருக்கும். 'ஹரே கிருஷ்ண முராரே, மது கைடப ஹாரே' என்று பாடிக்கொண்டு சென்றார். அவருடன் வந்த சீடர்களும் பாடிக்கொண்டு, தாளம் போட்டு, ஆடிக்கொண்டு வந்தனர். அப்போது அவர்கள் கூட்டத்தில் எங்கிருந்தோ ஒரு புலியும் சேர்ந்துகொண்டது! தனது விலங்குத் தன்மையை முற்றிலும் இழந்து, அதுவும் துள்ளிக் குதித்து ஆடியது! கிருஷ்ண சைதன்யரின் அருகே ஆடிக்கொண்டு வந்த மிருகத்தைக் கண்ட சீடர்கள் மனதில் கலவரமும், நாவில் மட்டுமே கிருஷ்ண நாமமும் இருந்தன! ஆயின் சைதன்ய மகாப் பிரபுவின் பார்வையில் அனைத்தும் ஸ்ரீ கிருஷ்ணனின் வடிவமே! அவர் உள்ளத்தில் என்ன இருந்ததோ, அதையே புற உலகிலும் அவர் கண்டார். அகத்தில் இருப்பதற்கு ஏற்ப புறத்திலும் எதிரொலிக்கும், பிரதிபலிக்கும்.

ஒரு ஞானியைப் பாவி சந்திக்கின்றான்; தன்னுடைய தெய்வீகத் தன்மையால் ஞானி அவனைத் திருத்துகின்றார். சமுதாயத்திற்கு அவர் புரியும் சீரிய தொண்டு இது. ஒருவன் தவறு புரியலாம்; ஆனால் பலமுறையும் அதைப் பற்றியே பேசுவது நன்மை தராது. தவற்றைப் பற்றிய எண்ணத்திலே ஆழ்ந்து கிடப்பது தவறு. தவறான எண்ணத்தையும் மனப்பாங்கையும் ஒதுக்கி வைத்து விட்டு அவன் முன்னேற அறிவுறுத்த வேண்டும். அதுதான் சரியான முறையில் வழிகாட்டுவது ஆகின்றது.

கேள்வி: 15. இரண்டாம் உலக யுத்தத்தில் பல கொடுரங்களைக் கண்டோம். இந்த அடிப்படையில் நம் அகத்தில் இருக்கும் தீய குணத்தினால்தான் வெளியேயும் தீமைகளையே காண்கிறோம் என்று கருதலாகுமா?

பதில்: ஒரு குழந்தையின் முன்னால் ஒரு கொலைக் குற்றம் நிகழ்கிறது; குழந்தை அதை அவ்வாறு நினைப்பதில்லை. ஆன்ம ஞானம் பெற்ற நிறை ஞானிக்குத் தீமை தீமையாகக் காட்சிதராது. நமக்கோ அது குற்றமாகத் தான்படும்.

ஆத்ம தரிசனம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1982-ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

மனதிலுள்ள மாசு நீங்கப் பெற்றவர்கள் சான்றோர்கள் ஆவார்கள். மாசு நீங்கப் பெற்ற மனம் படைத்தவர்கள் ஆத்ம சொரூபத்தைத் தரிசிக்கின்றார்கள். அவர்களுக்கு ஆத்ம தரிசனம் பெறுவதுதான் குறிக்கோள். ஆத்ம தரிசனம் செய்யாதவிடத்தும் நாம் ஆத்மாவுக்கு அன்னியமானவர்கள் அல்லர். சொரூபத்தை உள்ளபடி அறிகின்றபொழுது நாம் சொரூபமயம் ஆகிவிடுகின்றோம். இயற்கையின் கண் உள்ள அனைத்தும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிப் போக முயல்கின்றன. கடலினின்று நீர் ஆவியாக மேலே கிளம்பிப் போகின்றது. வானில் அது வெவ்வேறு நிறங்களை எடுக்கின்றது. அது மழையாகப் பெய்கின்றது. மலைப்பிரதேசங்களில் பல சிற்றோடைகளாக அது பிரிகின்றது. சிற்றோடைகள் சிற்றாறாக மாறிப் பின் பெரிய ஆறாகப் பரிணமித்து இறுதியில் புறப்பட்ட இடமாகிய கடலுக்கு வந்து சேருகின்றன. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் பரமனிடமிருந்து வந்தவைகள். பரமனிடத்தே யாவும் திரும்பிப்போக முயல்கின்றன. ஜீவர்களாகிய நாம் பரமனிடத்துத் திரும்பிப் போகும் செயலைத்தான் செய்து வருகிறோம்.

உயிர்வகைகள் அனைத்தும் புறப்பட்ட இடத்துக்குப் போக முயல்கின்றன. ஆத்ம சாதகர்கள் இவ்வுண்மையை அறிந்து செயல்படுகின்றார்கள். மற்றவர்கள் அறியாது இச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உடல் எடுத்துள்ள உயிர்கள் அனைத்தும் உணவை நாடித் திரிகின்றன. உணவு இல்லாவிட்டால் உயிர்கள் மாண்டு போகும். மாண்டு போக எந்த உயிரும் விரும்புவதில்லை. வாழ்ந்திருக்கவே உயிர்கள் ஆசைப்படுகின்றன. சத் சொரூபத்தை அடைவதற்குப் பறவைகள், விலங்குகள் மக்கள் ஆகிய அனைவரும் முயல்கின்றனர். அறிவைப் பேரறிவாக ஆக்குவதில் விருப்பம் கொண்டு உயிர்கள் அலைந்து திரிகின்றன. இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். மனிதன் மட்டும் அல்லாது மற்ற உயிர்களும் அறிவை வளர்ப்பதில் நாட்டம் கொண்டிருக்கின்றன. மரணத்தைக் கடந்து மரணமிலாப்பெருநிலையை அடைவதற்கு அனைத்து உயிர்களும் முயல்கின்றன. சத் சித் ஆனந்தத்தை அடைவதுதான் உயிர்களின் குறிக்கோள். அப்பெரு நிலையை அடைவதற்கும் வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதற்கும் பிரபஞ்சம் பயிற்சி சாலையாக அமைந்திருக்கின்றது.

பிரபஞ்சத்துக்கு வந்துள்ள உயிர்கள் அவைகளின் திறமைக்கு ஏற்ப, அறிவுக்கு ஏற்பச் சொரூபத்தை உணர முயல்கின்றன. அறிந்தோ அறியாமலோ எல்லா உயிர்களும் ஒரே நாட்டம் கொண்டிருக்கின்றன. இவ்வுண்மையை அறிகின்றவன் அதிவிரைவில் மேல் நிலைக்கு வருகின்றான். மற்றவர் நிதானமாக மேல் நிலைக்கு வருகின்றனர்.

எல்லார் உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றார். மாசு நீங்கப்பெற்ற உள்ளம் படைத்தவர்கள் இவ்வுண்மையை அறிகின்றார்கள். சாதனத்தின் மூலமாக மனதைத் தெளிவு படுத்தவேண்டும். மனம் தெளிவு அடைய அடைய விரைவில் மேல்நிலைக்கு வருகின்றோம். தூய்மை அடைந்துவரும் செயல் இயற்கையில் ஓயாது நிகழ்ந்துவருகின்றது. சரீரவளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருக்கும் பொருள்கள் சரீர வளர்ச்சிக்குப் பயன்பட்டு விட்டுத் திரும்பவும் தூய நிலைக்குப் போய்விடுகின்றன. மனிதன் தான் பயன்படுத்தும் பொருள்களைக் கெடுத்து விடுகின்றான். சுத்தக் காற்றைச் சுவாசித்து நச்சுக் காற்றாக வெளியே விடுகின்றான். சுத்த நீரை உட்கொண்டு உப்பு நீராக வெளியேற்றுகின்றான். அமிர்த மயமான உணவை உட்கொண்டு மலமாக வெளியேற்றுகின்றான். நல்லதைப் பயன்படுத்திக் கொண்டு கேட்டை வெளியேற்றுகின்ற சிறுமை மனிதனிடத்திருக்கின்றது. இயற்கைத்தாய் மனிதன் வெளியே தள்ளும் ஒவ்வொரு கேட்டையும் தூய்மைப் படுத்திக் கொண்டிருக்கின்றாள். இயற்கை நச்சுக் காற்றை நல்ல காற்றாக மாற்றி அமைக்

கின்றது. கெட்ட நீர் சுத்தமான மழை நீராகத் திருந்தி அமையும் செயல் இயற்கையில் நிகழ்ந்து வருகின்றது. பூமி தன்மீது போடும் அழுக்கை எல்லாம் அமிர்தமாக மாற்றி நமக்கு வழங்குகின்றது. மனிதன் இதை அறிந்து இயற்கை செய்யும் செயலுக்குக் கைமாருகத் தன் மனதை நல்ல மனதாகத் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். இச்செயல் மனிதனிடம் எதிர்பார்க்கப்படுகிறது. சரீரத்தை நல்ல கருவியாகப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும். சரீரம் வாழ்ந்திருக்க வேண்டும் என்று எல்லா உயிர்களும் உழைத்து வருகின்றன. சரீர வாழ்க்கையின் மூலமாக உயிர் வகைகள் விஷத்தைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றன. உயிர் வகைகள் கிளப்பிய நஞ்சைச் சிவபெருமான் எடுத்து உண்டு கண்டத்தில் நிறுத்தியதால் அவருக்கு நீலகண்டன் என்று பெயர் வந்தது. இயற்கையின் வடிவத்தில் இருந்துகொண்டு இறைவன் கைம்மாறு கருதாது நஞ்சை எல்லாம் அமிர்தமயமாக மாற்றி அமைத்து வழங்கிக் கொண்டிருக்கிருர். இது இறைவனுடைய மகிமை; உயிர்களை உய்விப்பதன் பொருட்டு இச்செயலைச் செய்து வருகிருர். சத்தியத்தின் வாயிலாகவும், தர்மத்தின் வாயிலாகவும் மனிதன் மேன்மை அடைந்து வருகின்ருன். சத்தியத்தினின்றும், தர்மத்தினின்றும் பிசகியவன் கீழ்மை அடைகின்ருன். கீழே போனவன் மறுபடியும் மேலே வந்தாக வேண்டும். உயிர்கள் அனைத்தும் விரைவிலோ, காலாந்தரத்திலோ மேல்நிலைக்கு வந்தேயாக வேண்டும்.

'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான், மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்' என்கிருர் மணிவாசகர். இது உயிர்களினுடைய குறிக்கோள். பல பிறவிகளுக்குப் பின் மனிதன் இவ்வுண்மையை அறிந்துகொள்கின்ருன். இவ்வுண்மையை அறிந்தான பிறகு தீவிரமாகச் சாதனத்தில் ஈடுபடுகின்ருன். சாதனத்தில் எவ்வளவு விரைவில் முன்னேற்றம் அடைகின்ருனே அவ்வளவு விரைவில் கடவுளை அடைவது சாத்தியம். இரண்டு முனிவர்கள் தவத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். நாரதர் கைலாயத்துக்குப் போகும்பொழுது அவ்விருவரையும் சந்தித்தார். அவ்விருவரும் நாரதரிடம் தங்களுக்கு முக்தி எப்பொழுது கிடைக்கும் என்று கைலாயபதியிடம் தெரிந்து வருமாறு வேண்டிக்கொண்டார்கள். நாரதரும் சம்மதம் தெரிவித்துப் போய் கைலாயத்திலிருந்து திரும்பும்பொழுது அவர்களுள் ஒருவரிடம் கூறியதாவது: "தவசீலரே, உங்களுக்கு இன்னும் நான்கு ஜன்மங்கள் பாக்கி இருக்கின்றன. நான்கு ஜன்மங்களுக்குப் பிறகுதான் உங்களுக்கு முக்தி கிடைக்கும் என்று கைலாசபதிகூறியுள்ளார்." இவ்வளவு தவத்துக்குப் பின்பும் நான்கு ஜன்மங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது என்று எண்ணித் தளர்ச்சி அடைந்தார் அம்முனிவர். நாரதர் அடுத்த தபசியிடம் கூறியதாவது: "நீங்கள் எந்தமரத்தின் கீழ் அமர்ந்திருக்கின்றீர்களோ அந்த மரத்திலுள்ள இலைகள் அளவு உங்களுக்கு இன்னும் பிறப்புக்கள் இருக்கின்றன. அத்தனை பிறப்புகளுக்குப் பிறகுதான் உங்களுக்குமுக்திஎன்று கைலாசபதி கூறியுள்ளார்.'' இதைக் கேட்டதும் மகிழ்ச்சியால் அந்தத் தபசி ஆனந்தக் கூத்தாடினர். அப்பொழுது அசரீரியாக வந்த செய்தியாவது: "இப்பிறப்பிலேயேஉம்முடைய சிரத்தையால் முக்தியைப் பெற்றுவிடுவீர்." பொறுமையும் சிரத்தையும் உள்ளவர்கள் குறியை அடைகின்ருர்கள். தளர்ச்சியும் அவசரமும் படுகின்றவர்கள் குறியை அடையத் தவறிவிடுகிருர்கள். இவ்வுண்மை இவர்கள் மூலம்விளக்கப்படுகின்றது.

பந்த பாசத்தை நமக்கு நாமே அமைத்துக்கொண்டிருக்கின்ருேம். எவ்வளவு விரைவில் அதை ஒதுக்கித் தள்ளுகின்ருேமோ அவ்வளவு விரைவில் நாம் மேல் நிலைக்கு வருகின்ருேம். பந்த பாசத்தை விடாது முக்தியை நாடுவது கண்ணை மூடிக்கொண்டு சூரியனைப் பார்ப்பதற்கு நிகராகும். மனத்தகத்துள்ள மாசை நீக்குவதே அறம் என்று சொல்லப்படுகிறது.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்பது குறள். மனத்தைப் பிடித்துள்ள மாசு என்ன என்று பார்ப்போம். நாம் மெய்ப்பொருளைத் திரிவுபடுத்திக் கண்டு வருகின்ருேம். அதற்கு மனதிலுள்ள மாசே காரணம். அகங்காரத்தையும், மமகாரத்தையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு உயிர்கள் அனைத்தையும் நேசித்துப் பழகுவோமானல் மனத் தெளிவு

உண்டாகின்றது.

நல்ல பசி இருக்கும்பொழுது உணவு உண்டால் உணவு உள்ளே செல்லச் செல்ல பசி குறைந்து வருவதை உணர்கின்றோம். மனிதன் முக்தியை நோக்கிப்போய்க்கொண்டிருக்கிறான் என்பதற்கு அடையாளம் என்ன? அவன் தன்னைப் பந்தப்படுத்தி வருகின்ற பொருளிலிருந்து தான் விடுபடுவதைத் தானே உணர்கின்றான். சரீரத்தில் இருக்கின்ற பொழுதே சரீர உணர்ச்சியைத் தாண்டியவனாகின்றான். பிறவிப் பெருங்கடலில் உழன்று கொண்டிருப்பதற்கிடையில் அது அவனுக்குத் துன்பமாகத் தென்படுவதில்லை. உலக வாழ்க்கையை அவன் தொல்லை என்று கருதுவதில்லை. உலக வாழ்க்கையை அவன் விளையாட்டாக எடுத்துக் கொள்கின்றான்.

முக்தி என்பதும், பந்தபாசம் என்பதும் அவரவர் மனநிலையைப் பொறுத்தது. சரியான மனப்பான்மை படைத்திருக்கிறவன் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் அப்பிறவிகளில் நல்வாழ்வு வாழ்ந்து வருகிறான். அப்படி நல்வாழ்வு வாழ்ந்து வருவது முக்திக்கு நிகராகும். அக்ஞானத்தினால் மனிதன் துன்பத்தைத் தேடிக் கொள்கின்றான். விவேகத்தினால் அத்துன்பத்தை விரைவில் நீக்குவது சாத்தியமாகின்றது. தனக்குத் தானே சுற்றத்தையும், தனக்குத்தானே பகைமையையும் உண்டுபண்ணிக் கொள்கின்றான்.

நாள்தோறும் நாம் கனவு காண்கின்றோம். கனவு கண்டுகொண்டிருக்கும் வரையில் கனவு உண்மை. விழித்துக்கொண்ட பிறகு கனவைப் பொய்யென்று ஒதுக்கித் தள்ளுகின்றோம். நனவு வாழ்க்கையும் ஒரு கனவுதான் என்பதைக் கனவு நமக்கு ஞாபகமூட்டுகின்றது. ஒரு மில்லில் இரண்டு தொழிலாளிகள் வேலை செய்து வந்தார்கள். பகல் ஒரு மணி நேர ஓய்வில் ஒருவன் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். மற்றொருவன் விழித்துக் கொண்டிருந்தான். மணி இரண்டுக்கு இருவரும் வேலைக்குப் போயாக வேண்டும். எனவே இரண்டு மணிக்கு ஐந்து நிமிடம் முன்னதாகவே விழித்திருந்தவன் தூங்கினவனை எழுப்பினான். "இன்னும் ஐந்து நிமிடம் இருப்பதற்குள் எதற்காக எழுப்பினாய்?" என்று கேட்டான். "ஐந்து நிமிடத்திற்குள் என்ன தூங்கி விடப் போகின்றாய்? எழுந்து உட்கார்" என்றான். "நான் தூங்கிக்கொண்டிருந்த பொழுது ராஜாவாக இருந்தேன். நீ எழுப்பாமல் இருந்திருந்தால் நான் இன்னும் ஐந்து நிமிஷம் ராஜாவாக இருந்திருப்பேன்" என்று கூறினான். கனவில் நம்முடைய ஆசைகள் சில நிறைவேறுகின்றன. ஆனால் எழுந்த பிறகு அவை வெறும் கனவாகப் போய் விடுகின்றன. ஆழ்ந்த உறக்கத்தில் ஆசைகள் அனைத்தும் ஒடுங்கிப்போய் விடுகின்றன. அப்பொழுது நாம் யதார்த்த நிலையில் இருக்கின்றோம். ஆசை துன்பத்தை உண்டு பண்ணுகின்றது. ஆசையற்ற நிலை நம்மை யதார்த்த நிலைக்குக் கொண்டு செல்கின்றது.

நனவு, கனவு, கனவற்ற உறக்கநிலை ஆகிய மூன்று நிலைகளுள் கனவற்ற உறக்க நிலையில் நம்முடைய யதார்த்த நிலையாகிய பரத்தில் ஒன்றுபட்டிருக்கின்றோம். அப்படி நாம் ஒன்றுபட்டிருப்பது நமக்குத் தெரிவதில்லை. அயர்ந்த உறக்கம் சமாதிக்கு நிகராகிறது. சமாதி நிலை அடையப்பெற்றவன் மீண்டும் பிறவி எடுப்பதில்லை. அயர்ந்த உறக்கத்தில் இருப்பவன் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடுகின்றான். கனவில் பல விதங்கள் உண்டு. ஒரு மனிதன் தான் நரியாக மாறிவிட்டதாகக் கனவு கண்டான். வனத்தில் இங்குமங்கும் ஓடித் திரிந்தான். வேட்டையாடுபவர்கள் வேட்டை நாய்களோடு அங்கு வந்தார்கள். வேட்டை நாய்கள் இந்த நரியை வளைத்துக் கொண்டு விட்டன. நரி தப்பித்துக்கொண்டு கனவேகமாக ஓடியது. அப்படி ஓடும் பொழுது வேட்டை நாய் ஒன்று நரியின் பின்னங்காலைக் கவ்வியது. தான் நரியாக ஆய்விட்டதாகக் கனவு கண்டு கொண்டிருப்பவன் காலை நாயிடமிருந்து விடுவிப்பதற்குப் படீர் என்று கீழே உதைத்தான். கால் தரையில் பட்டதும் எழுந்து உட்கார்ந்து கொண்டு அடிபட்ட காலைத் தடவிக் கொடுத்தான். பக்கத்திலிருந்தவன் "ஏன் காலால் உதைத்தாய்?" என்று கேட்டான். "நாய் பிடிக்க வந்தது. உதைத்தேன்" என்றான். நாய் எங்கே?" என்று அவன் கேட்டான். "கனவில் நரியாக இருந்தேன். நாய் என் காலைப் பிடித்தது. அதினின்று தப்பித்துக்கொள்ளக் காலைத்

தரையில் அடித்தேன்'' என்றான். இங்ஙனம் பல கனவுகள் ஏற்படுகின்றன.

'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று
வீடுற்றேன்'

என்று மணிவாசகர் பாடியுள்ளார். எடுத்த கணக்கற்ற பிறப்புக்கள் கனவு போல மறைந்து போயின. பிறவாத பொருளாகிய நாம் பல பிறப்புக்கள் எடுத்ததாகக் கனவு கண்டு வருகின்றோம். ஞானத்தைப் பெற்றான பிறகு கணப்பொழுதும் கல்பகாலமும் ஒன்றே. கனவு நமக்கு நாள்தோறும் மாறி மாறி அமைகின்றது. நனவு நம் வாழ்க்கைக்குப் பயன்படுகிறது. சிறு குழந்தையாக நனவில் இருந்தோம். நாள்தோறும் வளர்ந்து வருகின்றோம். மனம் பரிபாகம் அடைந்து வருகின்றது. குழந்தைக்கு கனவு, நனவைப் பற்றிய வித்தியாசம் தெரியாது. நனவில் அனுபவித்து வருவதெல்லாம் உறங்கப் போகும்பொழுது இல்லாது போய்விடுகின்றன. நனவில் ஒருவன் ராஜாவாக இருப்பானானால் உறங்கப் போகும்பொழுது ராஜா அல்லாதவனாய் ஆகிவிடுகிறான். நனவில் பணக்காரனாக இருப்பவன் உறக்கத்தில் பணக்காரன் அல்லன். நனவில் பண்டிதனாக இருக்கின்றவன் உறக்கத்தில் பண்டிதன் அல்லன். அங்ஙனமே நனவில் பாமரனாக இருப்பவன் உறக்கத்தில் பாமரனல்லன். நாள்தோறும் நாம் ஜாக்ரதாவஸ்தையில் பெறுவதைச் சுஷுப்தியில் இழக்கின்றோம். அதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. எடுத்த பிறவிகளிலெல்லாம் கனவையும் கனவற்ற உறக்கத்தையும் பெற்றிருக்கின்றோம். நம்முடைய நிஜநிலை கனவில் காண்பதும் அன்று; நனவில் காண்பதும் அன்று. உலகப்பொருள்களில் உள்ள பற்றுதல் நீங்கி வைராக்கியம் ஏற்படும்பொழுது ஞானத்துக்குத் தகுதியுடையவர்களாகின்றோம். நித்திய அநித்திய விசாரம் செய்து பார்த்து அநித்தியமானவைகளை ஒதுக்கித் தள்ளவேண்டும். நாம் எடுத்த பிறவிகளிலெல்லாம் நாம் அனுபவித்த பொருள்களும் நம்முடைய அனுபவங்களும் அநித்தியமானவை. நம்முடைய அனுபவங்களுக்கும் அனுபவித்த பொருள்களுக்கும் ஆதாரமாக இருக்கும் ஆத்ம சொரூபம்தான் நித்தியப் பொருள். இத்தகைய விவேகம் நமக்கு வருகின்றபொழுது நமக்குப் பாரமார்த்திக வாழ்வு ஆரம்பிக்கிறது.

பாரமார்த்திக வாழ்வு ஆரம்பித்ததும் கனவு நனவு ஆகிய இரண்டையும் ஒரே பாங்கில் பொருள்படுத்துகின்றோம். நாள்தோறும் கனவில் காண்பது நனவில் இல்லாது போகின்றது. நனவில் இருப்பது கனவில் இல்லாது போகின்றது. வாழ்வு என்பது ஒரு கனவு. விழித்துக் கொண்டிருக்குமளவு நாம் வாழ்ந்து வருகின்றோம். விழிப்படைவது என்பது நம் நிஜ சொரூபத்தை அறிந்துகொள்ளுதலாம். நிஜ சொரூபத்தை அறிந்து கொள்வதன் பொருட்டு நாம் விதவிதமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றோம். நாம் ஒரு மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கின்றோம். நம்மை மயக்கத்தில் ஆழ்த்தி வைத்திருப்பது ஈசனுடைய மாயா சக்தியாகும்.

நாரதர் கிருஷ்ணபரமாத்மாவிடம் ஒரு தடவை கேட்டதாவது: "பகவானே, உம்முடைய மோகனசக்தி மிக வல்லமை உடையது. அதை எனக்குக் காட்டித்தர வேண்டும்.'' கிருஷ்ணபரமாத்மா புன்சிரிப்புச் சிரித்துவிட்டு மௌனமாக இருந்துவிட்டார். சில நாட்களுக்குப் பிறகு கிருஷ்ணபரமாத்மா நாரதருடன் உலாவச் சென்றார். அப்பொழுது கிருஷ்ணன் நாரதரிடம் விண்ணப்பித்ததாவது: "நாரதரே, எனக்குத் தாகமாக இருக்கின்றது. பருகுவதற்குச் சிறிது நீர் தேடிக்கொண்டு வாரும்.'' வெகு தூரத்தில் ஒரு கிராமம் தென்பட்டது. நாரதர் நீருக்காக அக்கிராமத்துக்கு ஓடினார். கிராமத்து மக்கள் யாவரும் குடிசைகளைப் பூட்டிவிட்டு வயல்களுக்கு வேலைக்குச் சென்றுவிட்டார்கள். ஒரு குடிசைமட்டும் உள்ளே தாழிடப்பட்டிருந்தது. நாரதர் அக்குடிசையின் கதவைத் தட்டினார். அக்குடிசைக்குள்ளிருந்து அழகிய கன்னி ஒருத்தி வெளியே வந்தாள். நாரதர் அப்பெண்ணிடம் "அம்மா, சுத்தமான பாத்திரம் ஒன்றில் கண்ணனுக்குக் குடிக்க நீர் கொடுங்கள்" என்றார். அப்பெண் சுத்தமான பாத்திரம் ஒன்றில் நீர் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாள். நாரதர் நீரை வாங்கிக்கொண்டு அப்பெண்ணிடம் பேச்சை வளர்த்துக்கொண்டே

இருந்தார். முடிவில்லாது அவ்விருவருக்கு மிடையில் பேச்சு நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது தோட்டத்துக்குச் சென்றிருந்த அப்பெண்ணின் தாய் தந்தையர்கள் வீட்டுக் குத் திரும்பி வந்தார்கள். நாரதர் சிறிதும் தயங்காது அப்பெண்ணின் பெற்ரோரிடம் இக் கன்னிகையை எனக்கு மணம் முடித்துத் தாருங்கள்" என்று கேட்டார். பெண்ணின் பெற்ருேர்கள் கூறியதாவது: "எங்கள் மக ளுக்கு உரிய கணவனைத் தேடிக்கொண்டிருந் தோம். நீங்கள் நல்லவராகத் தென்படுகிறீர் கள். உங்களுக்கு எங்கள் மகளை மணம் முடிக் கச் சம்மதிக்கின்ருேம்" என்று கூறிக் கல்யா ணத்தை முடித்து வைத்தார்கள். நாரதர் அப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு அக் கிராமத்தின் குடிசை ஒன்றில் தனிக் குடித் தனம் செய்து வந்தார். ஆண்டுகள் பன்னி ரண்டு கடந்தன. மூன்று குழந்தைகளுக்குத் தந்தையானுர். இந்நிலையில் அவ்வூருக்குப் பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த நதியில் பிரவா கம் பெருக்கெடுத்துக்கொண்டு வந்தது. ஊரைக் காலி பண்ணவேண்டிய நிலை ஏற்பட்டது. ஊர் மக்கள் தங்களால் எடுத்துச் செல்லக் கூடிய பொருள்களை எல்லாம் மூட்டையாகக் கட்டித் தூக்கிக்கொண்டு பாதுகாப்பான இடத்துக்குச் சென்ருர்கள். நாரதரும் தூக்கிச் செல்ல முடிகின்ற அளவு சாமான்களை மூட்டை யாகக் கட்டித் தலை மேலே வைத்துக்கொண்டு இடுப்பில் ஒரு குழந்தையையும், கையில் மற்ற குழந்தைகளையும் மனைவியையும் பற்றிக் கொண்டு நதியில் நடந்தார். நதியின் ஆழமான பகுதியில் மனைவியும் குழந்தைகளும் மூழ்கி ஞர்கள். அவர்களைப் பிடிக்க நாரதர் முயன்ற பொழுது இடுப்பிலிருந்த குழந்தையும் தலையில் இருந்தமூட்டையும் நதியில் வீழ்ந்தன. மனைவி, குழந்தை, பொருள்கள் யாவற்றையும் நதி அடித்துக்கொண்டுபோக நாரதர் மட்டும் நீந்திக் கரைசேர்ந்தார். நதியின்கரையில் உட்கார்ந்து கொண்டு மூட்டையும் முடிச்சும் மனைவியும் குழந்தையும் போனதைக் குறித்து வருந்தி அழுது புலம்பினர். அப்பொழுது அவர் முதுகை யாரோ தட்டுவதாக உணர்ந்தார். திரும்பிப் பார்த்த பொழுது கிருஷ்ண பர மாத்மா அங்கு நின்று கொண்டிருந்தார். அவர் "நாரதரே! தண்ணீருக்காக அரைமணி நேரம் காத்திருக்கிறேன்" என்ருர். அரைமணி நேரத்தில் நாரதர் பெரிய சம்சார வாழ்க் கையே வாழ்ந்து விட்டார். "பிரபு, உமக்கு ஒரு நமஸ்காரம். உம் மோகனசக்திக்கு ஒரு நமஸ் காரம். அது எம்மைத் தாக்காதவாறு நீங்கள் அருள்புரியவேண்டும்"என்று நாரதர் கிருஷ்ண பரமாத்மாவை வேண்டிக் கொண்டார்.

காலம் என்பது மனதின் கற்பனை. யாண் டும் பராபக்தியில் ஈடுபட்டிருந்து மனதை அதீ தத்தில் வைத்திருந்த நாரதர் மோகனசக்திக்கு வசப்பட்டு இருந்த நிலை மோகன சக்தி என்ன என்பதை விளக்குகின்றது. நம்முடைய யதார்த்த நிலையை மறந்துவிட்டுப் பிரபஞ்ச வாழ்க்கையில் கட்டுண்டு கிடப்பதே மோகன சக்தி எனப்படும்.

சிறுவர்கள் விளையாடுவதற்கு வானத்தில் காற்றுடியைப் பறக்கவிடுகிருர்கள். அப்படிப் பறக்கவிடுகின்ற காற்ருடிகளுள் சில, கயிற்றை அறுத்துக்கொண்டு தப்பித்துப்போய்விடுகின் றன. மற்றவை கட்டுண்டு கிடக்கின்றன. ஜீவாத்மாக்கள் காற்ருடிகளுக்கு நிகராகின்ருர் கள். பரமாத்மா ஜீவாத்மாக்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்ருர். ஜீவாத்மாக் கள் சிலர் அவருடைய பிடியிலிருந்து தப்பித் துக்கொண்டு முக்தி அடைகின்ருர்கள். அருள் தாகம் ஓங்குகின்றபொழுது முமுட்சுத்துவநிலை உண்டாகின்றது. அப்பொழுது பிரபஞ்ச வாழ்வு வேண்டாம் என்ற மனநிலை ஏற்படு கிறது. பிரபஞ்ச வாழ்வில் பற்று இருக்கின்ற அளவு வாழ்வைப் பெருக்கிக்கொண்டே போகின்ருேம். ஆசையை நிறைவேற்றுவதற்கு இப்பிரபஞ்சத்தில்பிறப்பு எடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

பிறப்பையும், இறப்பையும் சமமாகக் கருத வேண்டும். பிறப்பும் வேண்டாம், இறப்பும் வேண்டாம். இவ்விரண்டு நிலையையும் கடந்து அப்பால் இருக்கின்ற பெருநிலையை அடைய வேண்டும். பகவான் கிருஷ்ணன் பகர்வதா வது: "என்னுடைய மாயா சக்தி முக்குணமய மானது. அது மிக வல்லமை வாய்ந்தது. சான் ருேர்களையே அது திகைக்கச் செய்துவருகின் றது. என்னுடைய துணையின்றி யாரும் அதைக் கடக்க முடியாது." (தொடரும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

நாம் வசிக்கும் இவ்வுலகமும் இதர கிரஹங்களும் கருநிலையில் ஜலத்தில் ஆயிரம் ஆண்டுகள் இருந்தன. சித்பொருளாகிய பரமாத்மா காலதேச வர்த்தமானமாக, இயற்கையாக, ரிதமாக (மாருத ஒழுங்குப்பாடு, சீரமைப்பு, பக்ஷபாதமற்ற நீதி, விதி, ஒழுங்கான நடைமுறையாக)வடிவெடுத்துள்ளார். அப்பரமாத்மாவானவர் கருநிலையிலுள்ள அக்கோளங்களுக்கு உயிர் ஊட்டினர். முட்டைவடிவிலிருந்தஅந்தஅண்டத்தைப் பிளந்துகொண்டு விராட்புருஷன் வெளிப்பட்டார். அவருக்கு ஆயிரம் முகங்கள், ஆயிரம் கால்கள், ஆயிரம் கைகள் இருந்தன. (ஆயிரம் என்பது கணக்கற்ற என்கிற பொருளில்) அன்பான அரசனே, சான்றோர்கள் இந்த விராட் புருஷனிலிருந்து இவ்வுலகங்கள் எல்லாம் தோன்றின எனக் கருதுகிறார்கள். மேலும் அவர்களுடைய விளக்கம் வருமாறு:—அப்பரம புருஷனின் இடுப்புக்குக் கீழ்ப்பாகங்களிலிருந்து கீழ் உலகங்கள் ஏழும் தோன்றின. இந்த ஏழு உலகங்களும் அப்பரமபுருஷனின் இடுப்புக்குக் கீழ்ப்பாகம் ஆகின்றன. விராட் புருஷனின் மேல் ஏழுபாகங்களிலிருந்து மேல் உலகம் ஏழும் தோன்றின. இவைகள் அப்பரம புருஷனின் மேல் பகுதியாகின்றன. பிராம்மணர்கள் அப்பரமபுருஷனின் வாயிலிருந்து தோன்றினர்கள். அவரது புஜங்களிலிருந்து க்ஷத்திரியர்கள் தோன்றினர்கள். அவரது தொடைகளினின்று வைசியர்கள் தோன்றினர்கள். அவரது பாதத்திலிருந்து சூத்திரர்கள் தோன்றினர்கள். அவரது பாதகமலங்களாக இருப்பது நமது பூமி. அவரது தொப்புளாக இருப்பது புவர்லோகம். அவரது ஹிருதயமாக சுவர்லோகமும், மார்பகமாக மகரலோகமும், கழுத்தாக ஞானலோகமும், உதடுகளாக தபோலோகமும், அவரது வாயாக பிரம்மலோகமும் இருக்கின்றன. அவரது இடுப்பு அதலலோகமாகவும், அவரது தொடைகள் விதலலோகமாகவும், முழங்கால்கள் சுதலலோகமாகவும், அவரது கால்கள் தலாதலலோகமாகவும், குதிகால்கள் மஹாதளலோகமாகவும், பாதங்களுக்கு முன்பக்கம் ரஸாதளலோகமாகவும், பாதங்களுக்குக் கீழே பாதாளலோகமாகவும் இருக்கின்றன. இங்ஙனம் விராட் புருஷன் தோற்றத்துக்கு வந்தார். 'ஓம் பூர் புவஹ சுவஹ ஸ்வாஹா' என்று அப்பரம புருஷன் வழுத்தப்படுகிறார். ஆண்டவனே எல்லா உலகும் ஆனாய் நீயே.

யாதுமாகி நின்றாய் கண்ணா எங்கும் நீ [நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் உன்தன் தெய்வ [லீலையன்றோ
பூத மைந்துமானாய் கண்ணா பொறிகள் [ஐந்துமானாய்
போதமாகி நின்றாய் கண்ணா பொறியை [விஞ்சி நின்றாய்

என்று பக்தன் உருகிப் பாடுகிறான்.

ஸ்கந்தம் 2, அத்தியாயம் 6.

பிரம்மதேவர் சொன்னார்: குழந்தாய் நாரதா! இனி அப்பரம புருஷனின், ஸ்ரீ ஹரியின் அளவற்ற விபூதிகளைக் குணசம்பத்துக்களை, மகிமைகளை உனக்கு எங்ஙனம் சொல்லி விளக்கட்டும்! அவன் அருளால் நமது இந்திரியங்கள் செயல்படுகின்றன. அவன் வாயிலிருந்து பேச்சு, மொழி, ஒலி வெளிப்பட்டது. அவனைப் போன்று ஜீவனும் பேசினான், பேச இயன்றது. குழந்தைகள் பெற்றோரைப் பார்த்துத் தாய்மொழியை அறிவது போன்றது இது. வாயின் அதிதேவதை அக்னி. அப்பெரிய பொருளின் சப்த தாதுக்களிலிருந்து வேதங்கள் தோன்றின. அவரது நாவினின்று சுவையும் சத்தும் நிறைந்ததும் தேவர், பித்ருக்கள், மானுடர் ஆகிய எல்லாருக்கும் தேவையானதும் ஆன உணவுப் பொருள்களும், அமிர்தமும் தோன்றின. அவரது நாசித்துவாரத்தினின்று நம் பிராணனும் வாயுவும் (உணர்வு, போதம், பிரக்ஞை) தோன்றின. இரண்டுஅசுவினிதேவர்கள் அவரது மூக்கினின்று தோன்றினர்கள். அவரது கண்களினின்று ரூபமும், தேஜஸும், (ஒளி) எல்லாவடிவங்களும் தோன்றின. சொர்க்கமும் சூரியனும் அவ்விராட் புருஷனுடைய கண்ணின் விழிகள் ஆகின்றன. திசைகளும், புண்ணிய க்ஷேத்திரங்களும் அவரது காதுகளி

லிருந்து தோன்றின. அவரது கேட்கும் சக்தி ஆகாசத்தையும் சப்தத்தையும் குறிக்கிறது. அவரது சரீரத்தினின்றே இப்பிரபஞ்சம் யாவும் வந்துள்ளன. இப்பிரபஞ்சம் அவரது சரீரம் ஆகிறது. எல்லா நலன்களும் சௌபாக்கியங்களும் அவரிடத்திருந்து வந்தவைகளே ஆகும். அப்புருஷனுடைய துவக் அல்லது சருமத்தினின்று ஸ்பரிச உணர்ச்சி உண்டாயிற்று. காற்றும், வேள்விகளும் அவரது சருமத்தினின்று தோன்றின. அவரது உடலிலுள்ள ரோமம் ஸ்தாவரவர்க்கம் ஆகும். ஸ்தாவரவர்க்கங்களோ மௌனமாக வேள்வி செய்கின்றன. அவைகள் தங்கள் சரீரம் முழுவதாலும் உலகுக்குப் பயன்படுகின்றன. வேள்விக்கு அவைகளே நல்ல உதாரணம் ஆகும். மேலும் அவரது ரோமமே மேகக் கூட்டம் ஆகும். மின்னல் அவரது தாடி ஆகும். கல்லும் உலோகங்களும் அவரது நகங்கள் ஆகும். அவரது கரங்களே திக் பாலர்கள் அல்லது லோக பாலர்கள் எனப்படும் காவல் தெய்வங்கள் ஆகும். பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களும் அவரது பாதங்களில் நிலைபெற்றிருப்பன ஆகும். அவரது பாத கமலங்கள் இவ்வுலகுக்கு எல்லா நலமும் தரும், செல்வம் தரும், மற்றும் ஆயின எல்லாம் தந்திடும், அபயம் தந்திடும், வரம் அளிக்கும். பக்தர்களுக்கு அவர் திருவடிகளே சரணம், கதி, அடைக்கலம், புகலிடம் ஆகும்.

குழந்தாய் நாரதா, காற்றும் மழையும், சரீரத்தினுள்ளே ரத்தமும் சுக்கிலமும், இந்திரிய அனுபவமும் அதில் ஏற்படும் திருப்தியும், சந்தானம் தோன்றுதலும், யமனும் பிரஜாபதிகளும், ஜீவர்களின் செயலும் அதன் பாப புண்ணியங்களும், பொறுமை, தௌர்பாக்கியம், மரணம், நரகம் ஆகிய எல்லாமும் என் ஆண்டவனிடத்திலிருந்தே தோன்றி வந்தவைகள். வெற்றி தோல்வி, நன்மை தீமை, அறியாமை, மாயை, இவைகளும், மலைகளும் ஆறுகளும், அறுசுவை உண்டிகளும், சமுத்திரமும், மனம் என்கிற அந்தக்கரணமும், தர்மம், சீலம், ருத்திரன், சனகாதி முனிவர்களும், நீயும், கலைஞானங்களும், முக்குணங்களும் ஆகிய யாவும் என் ஆண்டவனிடத்திருந்தே வந்தவைகள்.

சரீரத்தில், பண்பில், அறிவில், பல்வேறு வகைப்பட்ட உயிர்வகைகள், மனித இனத்துக்கு மேற்பட்ட உயிர்வகைகள் ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகிய சிற்றுயிர்கள் எல்லாம் அவ்விராட் புருஷனிலிருந்து வந்தவைகளே. அவை அவரது மாறுபட்ட தோற்றங்களே, வடிவங்களே ஆகும். கடந்த, நிகழ்கின்ற, எதிர்காலம் ஆகிய முக்காலமும் அவரே. அவர் பத்து விரற்கடை (தசாங்குலி) அளவுள்ளவர் என்று அவருக்குக் கனபரிமாணம் சொல்லப்படுகிறது. ஆயினும் அவர் பெருமாள், பெரிய பொருள், இப்பிரபஞ்சத்தின் உயிர், எங்கும் நீக்கமற நிறைந்தவர். அவர் பெரியதில் எல்லாம் பெரியதாகவும், சிறியதில் எல்லாம் சிறியதாகவும் உள்ளார். சூரியன் தன்னையும் விளக்கிக் கொண்டு உலகையும் விளக்குவது போன்று என் பிரபு இவ்வுலகைச் சோபிக்கச் செய்கிறான், விளக்குகின்றான். ஆனால் அவன் யாவற்றிலும் மறைய நின்றுள்ளான்.

என் ஆண்டவன் நித்திய வஸ்து, அவரிடமிருந்து அமிர்தமும் (சாகாப் பெருநிலை) அபயமும் தோன்றி வந்துகொண்டிருக்கின்றன. அவர் கர்மாதீதமானவர், அதனால் பந்தத்துக்கு அப்பாற்பட்டவர். அதனால் ஜனன மரணங்களுக்கு அப்பாற்பட்டவர். ஆகவே என் பிரபு ஒருவரே ஜீவர்களுக்கு முக்தி அருளுபவர். அவன் முக்தி நாதன். அவனது மகிமையை, விபூதியை, பெருமையை, லீலையை யார் விளக்கவல்லார், உணரவல்லார். பூர்லோகமும் மற்ற உலகங்களும் அவ்விராட் புருஷனுடைய அங்கங்களாக, பாகங்களாக விளங்கி வருகின்றன. ஆகவே எல்லா உயிர்களும் என்றும் அவன் சன்னதியில் வாழ்கின்றன. என் பிரபு ஜகந்நாதன், கோவிந்தன், கோபாலன், பசுபதிநாதன். மகரலோகத்திற்கும் மேலே உள்ள மூன்று லோகங்களில் என் ஆண்டவன் அமிர்தம் (சாகாத் தன்மை) க்ஷேத்திரம் (பெற்றதைப் பாதுகாக்கும் பெட்டகம்) அபயம் ஆகிய மூன்றையும் வைத்துக் காக்கிறார். பிரம்மசரியம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் ஆகிய மூன்று ஆச்ரமங்களில் மிகவும் நெறியாக வாழ்கிறவர்கள் பந்த பாசங்களை, ஜனன மரணங்களைக் கடக்கின்றனர். ஆகவே இம்மூன்று ஆச்ரமங்களும் ஆண்டவனுடைய திருவடிகள் எனப்படுகின்

றன. ஆனல் இல்லற தர்மமோ (கிரஹஸ்த ஆச்ரமம்) பிரம்மசரியம் காக்கப்படாததால் பந்தபாசங்களின் வசப்பட்டு விடுகின்றது. இது பிரேயஸ் எனப்படுகிறது. மற்ற மூன்று ஆச்ரமங்களும் சிரேயஸ் எனப்படும். இந்த ஆச்ரமங்களின் பாகுபாடுகளை அறிந்தவர்கள் லீலா விநோதனை என் ஆண்டவனை அறிந்தவர்கள் சிரேயஸ் மார்க்கத்தில் செல்கிருர்கள். கிரஹஸ்தனே பிரேயஸ் மார்க்கத்தில் செல்கிருன். இரண்டுமே என் ஆண்டவனின் வழிகளே, அவன் ஏற்படுத்தியவைகளே. மறைப்பவனும் அவனே, அருளுபவனும் அவனே. வித்தியா அவித்தியா இரண்டும் அவனே, அவனிடத்தே அவைகள் நிலை பெற்றிருக்கின்றன. அவனன்றி ஒன்றுமில்லை.

ஜீவனுக, பல்வேறு உலகப் பொருள்களாக ஜடமாக, சேதனமாக, கிரியைகளாக, மாறுபாடு அடைவதாகத் தோன்றிக் கொண்டிருப்பவன் அவனே. சூரியனும் நெருப்பும் தம் உஷ்ணத்தால் மற்ற பொருள்களை எரிக்கின்றன, சுடுகின்றன. ஆனல் அந்த உஷ்ணத்தால் அவை பாதிக்கப்படுவதில்லை. அதுபோன்று என்பிரபு தோன்றவும் இல்லை, மறையவும் இல்லை, ஒரு மாறுபாடும் அடையவுமில்லை. அவன் தன்னில் தானுய் என்றும் மாறுபாடு அடையாதவனுய் ஏகனுய், எல்லாவற்றுக்கும் அதீதனுய், எல்லாவற்றுக்கும் ரஹிதனுய் இருக்கிருன். உள்ளே இருப்பவனும்அவனே,வெளியே இருப்பவனும் அவனே. யாவற்றையும் கடந்தும், யாவற்றின் உள்ளும், அவற்றின் மயமாயும் அவன் இருக்கிருன். என் பிரபுவின் தன்மையோ அளப்பரியது, அதை விளக்குதல் எளிதோ.

என் பிரபுவின் தொப்புளிலிருந்து தோன்றிய தாமரையில் நான் தோன்றினேன். வேள்வி, யாகம், யக்ஞம், ஹோமம் பற்றி ஒன்றும் எனக்கு முதலில் தெரியாது. பிராகிருத மனிதன் அல்லது குழந்தை போன்று என் வாழ்வு இருந்தது. விருக்ஷங்கள், தர்ப்பைப்புல், விலங்குகள், ஓமகுண்டம், பருவ காலம், நெய், இதர எண்ணெய் வகைகள், தேன், இனிய கனி ரசங்கள், தங்கம் போன்ற உலோகங்கள், ரிக், யஜுர், சாமம்,கிரியா விசேஷங்கள், ஜயாதிஹோமம் முதலிய ஹோமங்கள், சுவாஹா மற்றும் பல மந்திரங்கள், தக்ஷிணை, விரத அனுஷ்டானம், கடவுளை ஆவாஹனம் பண்ணுதல், கல்பம் (வேத வாசகங்கள்) சங்கல்பம் (இன்ன ஹோமம் இன்ன லக்ஷியத்துக்காக செய்கிறதாகத் தீர்மானித்தல்) முத்திரைகள், மன சுத்தி, ஹிருதய சுத்தி முதலிய சுத்திகள், சுவஸ்தி வசனம், தியானம், அங்க நியாசம், க்ஷமா, அர்ப்பணம் ஆகியவைகள் பூஜாவிதிகள் அல்லது யாக விதிமுறைகள் எனப்படுகின்றன. இவைகள் எல்லாம் என் பிரபுவினிடத்திருந்தே தோன்றின. இவைகளின் சிறப்பு, மகிமை, உபயோகம் எதுவும் எனக்குத் தெரியாது. அவைகள் எல்லாம் வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை, தேவை இல்லாதவை என்று கருதி வந்தேன். ஆனல் அவன் அருளால் அவன் தாளை வணங்கக் கற்றுக்கொண்டேன். அவன் தந்த ஜீவிதத்தை, அவன் தந்த பொருள்களை எப்படி மேலான காரியத்துக்குப் பயன்படுத்துவது என்பதை படிப்படியாக அறிந்து கொண்டேன். இவைகளை எல்லாம் பயன்படுத்தி யக்ஞம் செய்தேன். என் ஜீவிதத்தை அதில் ஆஹுதியாகப் படைத்திருந்தேன். என் ஆண்டவனே, வாழ்வு அல்லது ஜீவிதம், தியாகத்தில் முற்றுப் பெறுகிறது, முழுமை பெறுகிறது என்பதைக் கண்டுகொண்டேன். அதன் விளைவாக என் பிரபுவை என்றும் அடைந்தவனுக மறவாதவனுக இருக்கிறேன். என் ஆண்டவன் யக்ஞப் பிரியன், யக்ஞமூர்த்தி, யக்ஞ ராமன்.

அதிலிருந்து, அன்புள்ள குழந்தாய், உன் சகோதரர்களான ஒன்பது பிரஜாபதிகள், மனுக்கள், ரிஷிகள், தேவர்கள், தைத்தியர்கள், மனிதர்கள், பித்ருக்கள் ஆகியோர் அவரவர் அடைந்துள்ள பண்பாட்டிற்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஏற்ப என் பிரபுவை வழிபடத் துவங்கினர்கள். எல்லாத் தேவ தேவிகளின் ரூபமாக இருந்து இந்த எல்லா வழிபாட்டையும் என் பிரபுவே ஏற்றுக்கொள்கிருன். குழந்தாய், இப்பிரபஞ்சம் என்பிரபு ஸ்ரீமந் நாராயணன் பேரில் நிலைபெற்று இருக்கிறது, செயல்படுகிறது, விளங்கி வருகிறது. அவன் குணம் குறி அற்றவன். ஆனல் அவன் மாயாரஹிதனுக இருந்து கொண்டு சிருஷ்டி முதலான முத்தொழில்களைச் செய்கிருன். அவன் உத்தரவுப்படியே நான் சிருஷ்டிக்கிறேன். அவன் விருப்பப்

படியே மஹாதேவனும் சம்ஹாரம் செய்கிறார். அவரே விஷ்ணுவாக இருந்து சம்ரக்ஷிக்கிறார். ஸ்திதி (காத்தல்) செய்கிறார். ஆகவே குழந்தாய், முத்தொழிலும் அப்பெரிய பொருளின் செயலே. தானே கதை எழுதி, தானே கதா பாத்திரங்களைச் சிருஷ்டித்து, தானே பாட்டும், வசனமும் அமைத்து, தானே அரங்கம் அமைத்து, அவனே நாடகம் நடித்து, அவனே பார்த்து மகிழ்கிறான். ஆ, ஆண்டவனே! பிரபோ, உன் லீலா விசித்திரம் விளக்கத் தரமோ! எல்லாம் அவனே, எல்லாம் அவன் செயலே, அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

குழந்தாய் நாரதா! என் பிரபுவிடத்தில் என் முழுமனதையும் அர்ப்பணித்துச் சதா அவரது தியானமாகவே இருக்கிறேன். வேறு எப்படித் தான் இருக்க முடியும்! அதனால் தான் என் வாக்கும் எண்ணங்களும் என்றும் பிழை போவதில்லை, பொய்யாய் விடுவதில்லை. என் மனமும் இந்திரியங்களும் வேறு ஒன்றையும் என்றும் நாடமாட்டா. நான் என்றும் யோகத்தில் நிலைபெற்றவனாக, ஆழ்ந்த தியானத்தில், என் பிரபுவின் நினைவில் மூழ்கியிருக்கிறேன். பகவான், பக்தன், பாகவதம் மூன்றும் ஒன்றே என்பார்கள். அம்முறையில் என்னையும் வேத நாயகன் என்றும் பிதாமகர் என்றும் பிரஜாபதிகள் வழிபாடு செய்கிறார்கள். ஆயினும் குழந்தாய்! யாரிடத்திலிருந்து நான் தோன்றி வந்தேனோ அப்பரம புருஷனை என் பிரபுவை இன்னும் நான் உள்ளபடி முழுவதும் அறியாதவனாக இருக்கிறேன். பரந்த ஆகாயம் எங்ஙனம் தன் எல்லையற்ற தன்மையை, அகண்டாகார விருத்தியைத் தானே அறியாதோ அங்ஙனம் என் ஆண்டவன் தனது அளவற்ற வல்லமையை, அகண்டாகார சொரூபத்தைத் தானே அறியாதவனாக இருக்கிறான், மற்ற தேவ தேவிகளும் அறியமாட்டார்கள். ஆகவே என் பிரபுவின் திருவடிகளில் சரணடைகிறேன். எனது வியக்தியை இழந்து ஜீவபோதத்தைத் துடைத்து என் ஆண்டவனின் போதத்தில் கரைந்துவிட, ஒன்றிவிட அவன் அருளைப் பிரார்த்திக்கிறேன். அவன் திருவடிகள் புனிதமானவை, எல்லா மங்களங்களும் நலன்களும் அருளுபவை. என் ஆண்டவனே, நீயே கதி, நீயே எனக்கு வேண்டும் என்று அரங்கத்து அரவணைப் பெருமானை வேண்டுகின்றேன். தேவர்களும், மானுடரும் எங்ஙனம் அவனை அறிய வல்லார். நாம் அனைவரும் அவன் புகழ் பாடுகிறோம், தியானிக்கிறோம். ஆயினும் அவன் மஹா மாயாவியாதலால் அவனே தன்னைக்காட்டித்தந்தாலன்றி அவனை அறிய முடியாது. "எம் ஆண்டவனே, உன்னை முக்காலும் என்றென்றும் சரணடைகிறோம். நீயே எங்களுக்குக் கதி" என்று அவனை வணங்குவோம்.

'தான் தனது' என்னும் செருக்குகளை ஒழித்துவிட்டு உடல் சம்பந்தமான சிற்றின்பங்களையெல்லாம் எட்ட ஒதுக்கிவைத்துவிட்டுக் கடவுளுக்குரிய பாரமார்த்திகப் பெருவாழ்வைச் சமுதாயத்தில் இருந்து வாழ்ந்து வருவதையே சந்நியாசம் என்று பரமஹம்சர் கருதினார். அவர் செய்துவந்த செயலும் அதுவேயாம். அத்தகைய பெருவாழ்வு வாழுகின்ற நன்மக்களைத் திரட்டி எடுப்பதிலும் அவர் கண்ணும் கருத்துமாய் இருந்தார். உயிர் அனைத்தையும் கடவுளின் பெயரால் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் என்னும் உடன்பாட்டுச் செயலே பரமஹம்சர் காட்டியுள்ள துறவறமாகிறது.

துறவறத்துக்கு விவேகானந்த சுவாமிகள் மற்றொருவிதத்தில் விளக்கம் கொடுத்துள்ளார். உயிர் வாழ்க்கையில் பற்றுதல் வைத்திருப்பவன் குடும்பி. மரணத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுபவன் துறவி. தற்கொலை புரிந்துகொள்ளுதல் என்பதல்ல இதன் பொருள். உயிர் வாழ்ந்திருக்கும் பொழுதே உலகம் அளிக்கின்ற இன்பங்களினிடத்துச் செத்தவன் போன்று எவன் ஆய்விடுகின்றானோ அவன் துறவி.

உயிர்களை உய்விப்பதற்காகச் சிவனார் விஷத்தைத் தாமே எடுத்து உண்டார். துறவி ஒருவன் அப்படிச் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். — "பரமஹம்சரின் பெருமை"

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-12

1894ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் தேதியன்று சென்னையில் வசித்து வந்த கிருஹஸ்த சிஷ்யர் ஒருவருக்கு அமெரிக்காவினின்று சுவாமிகள் எழுதிய கடிதத்தில் அடங்கியிருக்கும் சில சீரிய கருத்துக்களாவன: அன்பார்ந்த ஞானச் செல்வா! நீ எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்று மிகவும் மகிழ்வுறுகிறேன். நீ கொண்டுள்ள தீர்மானங்கள் பாராட்டுதற்குரியனவாம். ஆயினும் எந்தச் செயலிலும் அவசரப்பட்டு நுழைந்து விடலாகாது. நுண்ணிய கருமம் எண்ணித் துணிக என்பது கோட்பாடு.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வரலாற்றை உள்ளபடி அறிந்து கொள்கிறவன் பாக்யவானுகிருன். வேதாந்தத்துக்கு விளக்கமாக வந்து அமைந்துள்ளது அவருடைய ஜீவிதம். வாழ்க்கையிலே மேலானதைச் சாதிக்க விரும்புகிறவன் முதலில் வாழ்க்கைத் தத்துவத்தை உள்ளபடி அறிந்து கொள்ளுவது அவசியமாகிறது. அப்படி அதை அறிதலும், பரமஹம்சரின் ஜீவிதத்தை அறிதலும் ஒன்றேயாம். அவரிடத்துப் பிரார்த்தனை பண்ணு; அவரைச் சார்ந்திரு. அவருடைய அருளால் அவரைச் சார்ந்திருப்பதற்கேற்ப எக்கர்மத்திலும் நீ பிழைபோக மாட்டாய்.

அடுத்தபடியாகத் தீவிர வைராக்கியம் வேண்டும். வைராக்கியம் என்பதை ஒரு சிலர் விடாப்பிடி என்று பொருள்படுத்துகின்றனர். மற்று, விடாப்பிடிக்கும் வைராக்கியத்திற்கும் வெகுதூரம். உலகம் அநித்தியமானது என்பதை அறிந்து அதில் பற்றுவைக்காத நிலையே வைராக்கியமாம். இந்நிலை அலாதியாகத் துறவியர்க்கே உரியதென்று கருதலாகாது. மக்கள் எல்லாரும் நல்லறிவு படைத்தவர்களாக இருத்தல்வேண்டும். அதற்கு ஏற்ப மனிதனுக்கு வைராக்கியம் வந்து வாய்க்கிறது.

உன் போக்குக்கு ஆதரவு தேடுகின்ற பாங்கில் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யர்கள் சிலரைக் குறித்துள்ளாய். எடுத்துக்காட்டாக அவர்கள் செயலைக் குறிப்பிடுவது எளிது. ஆனல் அவர்கள் படைத்திருக்கும் மனப்பான்மை எல்லார்க்கும் எளிதில் வந்து அமையாது. தீவிர வைராக்யம் வேறு, படிப்படியாக வைராக்யத்தை வளர்ப்பது வேறு. பிறந்தது முதல் பிரம்மச்சரிய ஆஸ்ரமத்தில் நிலைத்திருந்து பெறுகிற வைராக்யம் தீவிரமானது. அப்படி அதை அனுஷ்டிக்கின்றவர்கள் பெற்றோர் விருப்பத்தை மீறிப் போகலாம். பெற்றோர் ஆணையை மீறிக் கடவுள் நாட்டத்தில் தீவிரமாக ஈடுபடுபவர்கள் பாக்யவான்கள். அந்த வாய்ப்பு எல்லார்க்கும் எளிதில் அமையாது. கிருஹஸ்தாச்ரமத்தில் இருக்கிற நீ பெற்றோருக்கும் மனைவிக்கும் சிறப்பாகச் செய்யவேண்டிய கடமைகள் சில உள. அவர்கள் மனம் நோகும்படி நீ நடந்துகொண்டால் உன்னிடத்து அமைந்துள்ள வைராக்யத்துக்கும் சீரிய மனப்பான்மைக்கும் கேடு வந்துவிடும். எனவே நீ மிக எச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தொடங்கியுள்ள அருள் இயக்கம் சென்னை மாகாணத்தில் நன்றாக வேர் பிடித்து வருகிறது. அரிய பெரிய காரியங்கள் அங்கு நிகழப் போகின்றன என்னும் உறுதிப்பாடு எனக்கு உண்டு. Thou shall not take the name of the Lord in vain என்பது சிறந்த கோட்பாடு. இதன் உட்கருத்தை உள்ளபடி அறிந்து கொள்ளும் நுண்ணறிவு சென்னை சிஷ்யர்கள் சிலரிடம் அமைந்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். மூர்த்தி ஒருவர் உலகில் எதை நிலைநாட்ட வந்துள்ளாரோ அதைப் புறக்கணித்து விட்டு அல்லது மறந்துவிட்டுப் பொருளற்ற மூர்த்தி உபாசனையில் ஈடுபடுவது பொருந்தாது. மகாவீரனுகிய ஹனுமானுக்கு ஸ்ரீ ராமனைப் போற்றவோ அல்லது புகழ்ந்து பாடவோ அவகாசம் இல்லை. அல்லும் பகலும் ராமனுடைய காரியத்திலேயே அவன் கண்ணும் கருத்துமாயிருந்தான். அங்ஙனம் மூர்த்திக்கும் அவர் சாதிக்க வந்த செயலுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைத் தொண்டன் ஒருவன் அறிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிருன். இச்சீரிய கொள்கையின்படி சென்னை மாகாணம் பரமஹம்ச தேவருக்கு நல்ல பாங்கில் பணிவிடை பண்ணும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு.

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

பத்ரிநாத் தரிசனம் முடிந்தவுடன் எங்கள் பஸ் ரிஷிகேஷ் நோக்கிப் புறப்பட்டது. செல்லும் வழியெங்கும் இருமருங்கிலும் இயற்கை அன்னையின் தரிசனம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பதினைந்து தினங்கள் இமய மலையிலே வாழ்ந்த வாழ்வு, புதிய இடங்களிலும்,புதிய மனிதர்களிடமும் பெற்ற அனுபவம், துன்பம் நேர்ந்தபொழுதெல்லாம் அவளையே சார்ந்திருக்கின்ற நமக்கு அவள் காட்டும் அருள் முதலியவற்றைத் திரும்பத் திரும்ப மனதில் விமர்சனம் பண்ணிக்கொண்டு ரிஷிகேஷ் வந்து சேர்ந்தேன். பதினைந்து தினங்கள் என்னுடன் அன்பாகப் பழகி எப்போதும் ராம நாமமும், ஜப மாலையுமாக இருந்த மத்தியப்பிரதேச விவசாய மக்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு ஓர் ஆஸ்ரமம் வந்து சேர்ந்தேன். ஏற்கனவே அறிமுகம் ஆன துறவிகள் இன்முகத்துடன் வரவேற்றனர். பின் அமர்நாத் யாத்திரை செய்யக் காஷ்மீர் புறப்படத் திட்டம் வகுத்தேன். ஆனால் 'பஞ்சாபில் வன்முறைச் சம்பவங்கள் நடை பெற்றுக்கொண்டிருப்பதாலும் சில சமூக விரோத சக்திகள் இடையூறு செய்வதாலும் இப்போது காஷ்மீர் போகவேண்டாம்' என முதிய சாது ஒருவர் அறிவுறுத்தினர். அதனல் நேராகக் காஷ்மீர் போவதை விட்டு விட்டு ஒவ்வொரு மாநிலத்திலும் முக்கியமான கோயில்களையும், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்க்கத் தீர்மானித்தேன். முதலில் ரிஷிகேசத்தில் கங்கையின் இருபுறமும் உள்ள ஆஸ்ரமங்கள், கோயில்கள், குகைகள், கங்கைக்கு நடுவே உள்ள கயிற்றினல் ஆன தொங்கும் பாலம் முதலியவற்றைப் பார்த்துவிட்டுப் பிறகு ஹரித்வார் புறப்பட்டேன். அங்கே இரண்டு நாட்கள் சாதனசதன் என்ற பெரிய ஆஸ்ரமத்தில் தங்கிச் சுற்றிப் பார்க்க வேண்டியவைகளைச் சுற்றிப் பார்த்தேன். ஹரித்துவாரில் தக்ஷன் யாகம் செய்த இடத்திலும் பார்வதியாகிய தாக்ஷாயனி யோகாக்னியால் தன் சரீரத்தை எரித்து விட்ட இடத்திலும் கோயில்கள் உள்ளன. ஆங்கு ஏராளமாகப் பக்தர்கள் வந்து தரிசித்துச் செல்கின்றனர். வடநாட்டில் கோயில்களில் கூட்டம் அதிகம் இருந்தாலும் செருப்புகள் திருட்டுப்போவதுஇல்லை. தெய்வீக அலை வீசும் ஹரித்வாரில் எங்கு நோக்கினும் துறவிகளைக் காணலாம். ஆஸ்ரமங்களிலும் கோயில்களிலும் நாம ஜபம், பஜனை, ஹரிகதா உபந்நியாசம் முதலியன நடந்து கொண்டே இருப்பதையும், பக்தர்கள் மிக ஆர்வமாக இவைகளில் கலந்து கொள்வதையும் காணலாம். ஆனல் சில ஆஸ்ரமங்களில் வண்ணக் கண்ணடிகளை ஏராளமாகப் பதித்து அவைகளை வெறும் கண்காட்சி சாலை போன்று வைத்துள்ளனர். மலைமீது உள்ள அம்மனைத் தரிசிப்பதற்கு மின்சாரப் பெட்டியில் அமர்ந்து வெட்ட வெளியில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தவாறு போய்ப் பார்த்துத் திரும்பலாம். அங்கே பாரத மாதா மந்திர் உள்ளது. அதை முதலில் பார்க்கிற தமிழனுக்குச் சென்னை மவுண்ட்ரோடில் உள்ள L. I. C. பதினன்கு அடுக்குக் கட்டடம்தான் ஞாபகம் வரும். இங்கே லட்சக்கணக்காகப்பணத்தைக்கொட்டி ஆங்காங்குச் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட சான்ருேர்களின் சிலைகளை உருவாக்கி வெறும் காட்சிப் பொருள்களாக வைத்திருக்கின்றனர். இதை உருவாக்கியவர் ஒரு துறவி. வடநாட்டில் ஒரு சில ஆஸ்ரமங்களைப் பார்த்தால் அரண்மனைகள்போல் தோற்றம் தரும். ஆனல் ஓர் ஒற்றுமை. காலை, மாலை வழிபாட்டின் போது ஒரே பாசுரங்களைத் தான் எல்லாக் கோயில்களிலும் பாடுகிருர்கள். பொதுப்பட ஹிந்தியில் பிரபலமாக உள்ள பக்திப் பாடல்கள், கிராமிய பஜனைப் பாடல்கள் முதலியவற்றை எல்லா மாநிலத்திலும் எல்லா மக்களும் தெரிந்து வைத்துள்ளனர். கோஷ்டியாகவும் கொஞ்சமும் சங்கோசமில்லாமலும் பாடுகின்றனர். ஹரித்வார் தரிசனம் இங்ஙனம் இனிதே முடிந்தது.

இரண்டு நாட்கள் கழித்து ஸஹரன்பூர், பிப்ளி என்ற ஊர்கள் வழியாகக் குருக்ஷேத்ரம் என்ற ஊருக்குப் பஸ்ஸில் சென்று சேர்ந்தேன். குருக்ஷேத்ரம் மகாபாரத யுத்தம் நடந்த இடம்.

இப்போது ஹரியான மாநிலத்தில் இருக்கிறது. அங்கே கீதா மந்திர் என்ற ஆஸ்ரமத்தில் தங்கினேன். மஹாபாரத யுத்தம நடந்த இடத்தில் தொழில் அதிபர் பிர்லா மிகப் பெரிய அளவில் நீர்நிலை ஒன்றை உருவாக்கியுள்ளார். அவ்வூரில் ஸ்ரீமத் பகவத்கீதையின் சுலோகங்களைப் புகைவண்டி நிலையத்தில் சுவர்களில் எழுதியுள்ளார்கள். பஞ்சாப் செல்ல நாங்கள் தீர்மானித்துப் புகைவண்டி நிலையத்தில் அமர்ந்திருந்தபொழுது ஓர் இளம் வயது பிரம்மச்சாரி அருகே வந்து தமிழில் பேசினர். "கேரளாவில் திருச்சூரைச் சேர்ந்த ஓர் ஆஸ்ரமத்தில் இருக்கிறேன். அமர்நாத் தரிசனம்செய்வதற்குத் தனியாகவந்தேன். பஞ்சாபில் சிரமம் ஏதுமின்றிச் சுற்றிப் பார்த்துவிட்டுக் காஷ்மீர் சென்றேன். நான் ஹிந்துவாக இருப்பதால் ஆங்குள்ள முஸ்லீம்கள் எனக்கு இடையூறு செய்தனர். அமர்நாத் யாத்திரை போக விரும்புகிறவர்கள் அதற்குரிய சீசனில்தான் போகவேண்டுமேயொழிய இடையில் போனல் முஸ்லீம்களின் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டி உள்ளது" என்ருர். இதைக் கேட்டதும் டெல்லிக்கே திரும்பிவிடலாம் என்று எனக்குத் தோன்றியது. உடனே தெய்வாதீனமாக பஞ்சாபிலிருந்து வந்த ஒரு வண்டி டெல்லிக்குப் போக குருக்ஷேத்திரத்தில் நின்றது. உரிய டிக்கட் எடுத்து வண்டியில் ஏறினேம். இடம் இல்லாவிட்டாலும் சீக்கியர்கள் சிலர் துறவிகளாகிய எங்களைப் பார்த்தவுடன் எழுந்து, வசதியாக அமர எங்களுக்கு இடம் தந்து, எங்களுடன் அன்புடன் பேசலானர்கள். பேச்சுவாக்கில், எதிரே அமர்ந்திருந்த பயணி மதுரைக்காரர் என்று அறிந்தேன். அவர் தாம் இராணுவத்தில் பணிபுரிவதாகக் கூறினர். நாங்கள் எங்கள் காஷ்மீர் பிரயாணத்தை மாற்றியமைத்ததைக் கூறினேம். அவரும் "நீங்கள் அதிர்ஷ்ட வசமாகத் தப்பினீர்கள். இப்போது பல வண்டிகளை அம்பாலா என்ற ஸ்டேஷனில் நிறுத்தி வைத்துள்ளனர். நீங்கள் போயிருந்தால் உங்கள் பைகள் அனைத்தும் சோதனை செய்யப்பட்டு உங்கள் பணம் சில சமூக விரோதிகளால் கொள்ளையடிக்கப் பட்டிருக்கும்" என்று எச்சரித்து நாங்கள் டில்லிக்குத் திரும்பிப் போவதே நல்லது என்ருர்.

இரவு பதினேரு மணிக்கு டில்லி சேர்ந்தோம். அங்கே யமுனை நதிக்கரையில் ஓர் ஆஸ்ரமத்தில் தங்கினேம். நமது இராணுவம் பஞ்சாபில் புகுந்துள்ளது என்று அன்று அறிந்தோம். எல்லாம் நன்மைக்கே என்று அம்பாளை நினைத்துக்கொண்டு முதலில் கண்ணன் லீலை புரிந்த பிருந்தாவனத்திற்குப் பஸ்ஸில் சென்றேம். தெய்வீக மகிமை பொருந்திய அந்த ஊர் சுகாதாரத்தில் பின்னணியில் இருக்கிறது. கண்ணன் கோயிலில் ஏராளமான கூட்டம். வட நாட்டிலுள்ள சில கோயில்களில் அர்ச்சகர்கள் ராஜகுமாரர்கள் போன்று உடையணிந்திருக்கிருர்கள். கோயிலில் கிருஷ்ண லீலை நாடகம் நடந்துகொண்டிருந்தது. நாடகம் அற்புதமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் நடக்கின்றது. ஹரே கிருஷ்ண இயக்கத்தார்ஆங்கு ஒரு பெரிய ஆஸ்ரமம் கட்டியுள்ளனர். யாத்ரீகர்களுக்கு உண்ண உணவும் தங்கும் வசதியும் செய்து தருகின்றனர். இதை ஒரு புனித சேவையாகச் செய்கின்றனர். யமுனை நதியில் நன்கு நீராடிவிட்டு மீண்டும் சுவாமி தரிசனம் செய்தோம். பிருந்தாவனத்தைப் பார்த்தால் இந்த நாற்றமும், அசுத்தமும் நிறைந்த இடத்திலா கண்ணனின் விளையாட்டு நடந்தது என்று ஆச்சரியப்படுவோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் அந்த இடம் எப்படி இருந்திருக்கும்! "ராதே ஸ்யாம் ராதே ஸ்யாம் ராதே ஸ்யாம்" என்ற நாமம் வீடுதோறும் உருகி உருகிப் பாடப்படுகிறது. அங்கிருந்து கிருஷ்ணன் பிறந்த இடமான மதுராபுரிக்குச் சென்றேம். கண்ணன் பிறந்த இடம் காண்பவர் மனதை நெகிழச் செய்யும். கண்ணீர் வடிக்காமல் அந்த இடத்தை விட்டு வெளியேற முடியாது. ஏனென்றல் கண்ணன் பிறந்தது சிறையில். அந்த இடமே இப்போது முஸ்லீம்களால் சிறை வைக்கப்பட்டது போன்று அவர்களுடைய ஆதிக்கத்தில் உள்ளது. கண்ணன் பிறந்த இடத்தில் கட்டப்பட்ட கோயிலை இடித்து மசூதி கட்டப்பட்டுள்ளது. பொறுமையே வடிவெடுத்திருக்கும் ஹிந்துக்கள் திரும்பவும் இடிந்துபோன கோயிலைத் திருத்தியமைத்தார்களே தவிர மசூதி இன்றும் இருக்கிறது.

குறிப்புகள்

பழைய மாணவர் சங்கம்

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோ வனம் ஆன்மீகத்தாகம் கொண்டோருக்காக அருள்மழைபொழியத்தொடங்கியது 1940 இல் ஆகும். அதனுடைய கல்வித் தொண்டு இன்று பல்கிப் பெருகித் தமிழ் நாடெங்கும் பல் வேறு கல்வி ஸ்தாபனங்களாக வளர்ச்சி பெற் றுள்ளது. அந்தத் தபோவனத்தின் முதற் குழந்தையே ஸ்ரீ விவேகானந்த வித்தியாவனக் குருகுலம்.

இந்தக் குருகுலத்தின் இருபத்தேழாவது பழைய மாணவர் சங்கம் 1984 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 25 ஆம் தேதியன்று நிகழ்ந்தது. பழைய மாணவர்கள் தங்கள் தங்கள் குடும்பங் களில் நிகழும் விசேஷ வைபவமாகக் கருதி இதில் பெருமளவில் கலந்து கொண்டார்கள். தபோவனத்துச் சந்நியாசிகளுடனும், பள்ளி ஆசிரியர்களுடனும் நெருங்கிய உறவினர்கள் போல் கலகலப்பாகப் பேசி நெஞ்சில் நிறைந்து கிடந்த பல இனிய நினைவுகளையும் பரிமாறிக் கொண்டார்கள். நாள் முழுவதும் அவர்கள் பங்குபெற்றுக் களிக்கும் வண்ணம் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன.

காலை 10-30 மணிக்குப் பள்ளியின் உடற் பயிற்சிக் கூடத்தில் கூட்டம் துவங்கியது. தபோவனத்தின் ஸ்தாபகர் ஸ்வாமிஜி அவர் கள் பழைய மாணவர்களை வரவேற்று அருளாசி வழங்கினர்கள். அவர்களுடைய உரையில் வழக்கம் போன்று மிகத் தெளிவாக வும், சுருக்கமாகவும், அழுத்தம் திருத்தமாக வும் பல முக்கியமான கருத்துக்களை வழங்கி னர்கள். வாழ்நாள் முழுவதும் பின்பற்றத்தக்க அந்த அறவுரை கீழ்வருமாறு:

"அன்பார்ந்த பழைய மாணக்கர்களே! வித்யாவனத் தாய் உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்ருள். நீங்கள் வாழ்க்கையில் நல்ல முறையில் முன்னேறி வருவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்ருள். வித்யாவனத்தின் இலட்சியங்களான செயலாற்றும் வலிமை, சொல்லாட்சித் திறமை, உடலின் திண்மை, உள் ளத்தில் உறுதி, ஒழுக்கத்தில் ஈடுபாடு, ஆன் மீகத்தில் அடங்காத ஆர்வம் ஆகியனவற்றை நாளும் கடைப்பிடித்து நீங்கள் மேன்மேலும் உயர்வடைவீர்கள். உங்கள் குழந்தைகளையும் இத்தகைய பண்பட்ட நெறியில் செலுத்தி வீட்டையும், நாட்டையும் மேன்மையடையச் செய்யுங்கள். உங்களைப் போன்ற இலட்சிய வாதிகளைத் தமிழ் நாடெங்கும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தபோவன மும் அயராது பாடுபட்டு வருகிறது. அந்த நோக்கத்துடனே இந்த வருடம் மூன்று புதிய ஸ்தாபனங்கள் உருவாகியுள்ளன.

சிங்கப்பூரில் வழக்கறிஞராக உள்ள ஸ்ரீமதி அம்பாள் மாணிக்கம் என்ற பக்திமதி தன் பெற்றோர்களின் பிறந்த ஊரான மன்னர்குடி யில் நலிவுற்றோருக்கு உதவும் பொருட்டு ஓர் அறக்கொடையை அளித்துள்ளார். அதன்படி சேலம் ஸ்ரீ சாரதா ஸமிதியின் கிளை ஒன்று மன்னர்குடியில் ஆரம்பித்துள்ளது. இந்த வருடம் குழந்தைகளுக்கான களிக்கூடம் (nursery) ஒன்றும், பெண்களுக்கான தையல் வகுப்பும் துவக்கப்பட்டுள்ளன. மாதர்களுக் கான கீதை வகுப்பு, சமஸ்கிருத வகுப்பு, இல வச வாசகசாலை, அந்தர்யோகம் ஆகிய பணி களும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. ஊர்மக்கள் எல்லாக் காரியங்களிலும் பெரும் உற்சாகத்துடன் ஒத்துழைத்து வருகிருர்கள். நாளடைவில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி யும் இங்கு உருவாகும்.

மதுரையிலும் இத்தகைய பெண்கள் ஸ்தா பனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வைகைக் கரை அருகே லக்ஷ்மி நாராயணபுரம் அக்ரஹா ரம் என்ற இடத்தில் சேலம் ஸ்தாபனத்தைப் போன்றே சாரதா ஸமிதி இயங்கி வருகிறது. பிரார்த்தனை, ஸத்ஸம்பாஷணை போன்ற நிகழ்ச்சி களில் தாய்மார்கள் ஆர்வமாகக் கலந்து கொள் கிருர்கள். குழந்தைகளுக்காகச் சிறிய அள வில் ஒரு களிக்கூடம் துவங்கியுள்ளது. ஸ்ரீ ராம மூர்த்தி (திருவேடகம் கல்லூரித் தாளாளர்) வாரந்தோறும் இராமாயண விரிவுரைகள் நிகழ்த்துகிருர். திருவேடகம் கல்லூரியினர் கோகுலாஷ்டமி, ஸ்ரீ ராம நவமி, விவேகானந்த ஜயந்தி போன்ற விசேட நாட்களில் இங்குக் கருத்தரங்கு, பஜனை முதலிய நிகழ்ச்சிகளை

நடத்தி வருகிருர்கள்.

கடந்த சில ஆண்டுகளாகத் திருநெல்வேலியில் உள்ள கிறித்தவக் கல்லூரிகளில் ஹிந்து மாணவிகளை அனுமதிப்பதில்லை. நமதுமாணவிகளும் படித்து முன்னேறவேண்டும். நமதுகலாச்சாரம் ஸ்திரப்படுத்தப்படவேண்டும். இந்த நோக்கங்களுடன் தபோவனம் இந்த மாவட்டத்தில் ஒரு பெண்கள் கல்லூரியை நிறுவ முனைந்துள்ளது. இதன் பொருட்டுத் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிசெல்லும்நெடுஞ்சாலையில் எட்டு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு தருமஸ்தாபனத்தார் கொடுத்துள்ள 75 ஏக்கர் நிலத்தில் கட்டடப் பணிகள் துவங்கியுள்ளன. திருவருள் துணையுடன் வருகிற ஜூன் மாதம் களிக்கூடம், கல்லூரியில் முதல் இரண்டு வகுப்புக்கள் ஆகியனவற்றைத் தொடங்கலாம். நாளா வட்டத்தில் மற்ற துறைகளை விரிவுபடுத்திக்கொள்ளலாம்.

"இங்ஙனம் தபோவனம் ஆன்மீகம், அறவொழுக்கம், கல்விப்பணி போன்ற பல்வேறு தொண்டுகளில் ஈடுபட்டு வருகிறது. பழைய மாணவர்களாகிய நீங்களும் "உழைத்தோம், உண்டோம், உறங்கினோம்" என்று இல்லாமல் உங்களால் முடிந்த துறைகளில் எல்லாம் பாடுபடுவதற்கு முன் வரவேண்டும். சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு நீங்கள் உழைக்கும் அளவுக்கு நீங்கள் சமூகத்துக்கும், உங்களுக்கும், இறைவனுக்கும் உண்மையான சேவை செய்தவர் ஆவீர்கள். நீங்கள் யாவரும் ஒருங்கிணைந்து திட்டங்கள் தீட்டி ஓர் உன்னதமிக்க இயக்கமாகச் செயல்படவேண்டும். முக்கியமாக உங்கள் ஆன்ம பலத்தை நீங்கள் பெருக்கவேண்டும். அதுவே உங்களுக்கு என்றும் எங்கும் பெருந்துணையாக நிற்கும்.

"இன்று ஹிந்து மதத்துக்கு அகத்தேயும், புறத்தேயும் பல ஆபத்துக்கள் தோன்றியுள்ளன. இந்த வேதாந்த சமயத்தின் உயர்ந்த நோக்கங்களைப் புரிந்து கொள்ளாமல் பெரும்பான்மையான இந்துக்கள் அலட்சியமாகவும் ஆற்றலை இழந்தும் வாழ்நாளைக்கழித்து வருகிருர்கள். மற்றும் பலர் இந்துமதத்தின்உயர்ந்த தத்துவங்களைப் புறக்கணித்துவிட்டு நடைமுறைச் சடங்குகள் சிலவற்றையே இந்துமதம் என்று கருதிக்கொண்டு கேலிபேசி வருகிருர்கள். வெளி நாட்டினர் அரசியல் நோக்கத்துக்காகப்பெரும் பொருள் செலவுசெய்து அற்ப ஆசைகளை மூட்டிப் பலவீனமானவர்களை மதமாற்றம் செய்ய முயன்று வருகின்ருர்கள். அறுதிப் பெரும்பான்மையை நாளடைவில் வேற்றுமதத்தார்கள் பெருமளவில் பெறநேர்ந்தால் அது நமது மதத்திற்குப் பெருந் தீங்காக வந்து முடியும். இனம், மொழி முதலிய காரணங்களைக் காட்டி இன்று நாட்டில் குழப்பங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் நம்மில் ஒற்றுமை குலைந்தால் இந்து மதத்தினர் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து ஜாதி சச்சரவுகளில் உழன்று சிறுபான்மையினராகவும், அரசியலிலும், கலாச்சாரத்திலும் அடிமைகளாகவும் மாறிவிடக்கூடும். வருமுன் காத்தல் கூர்த்தமதியுடையார் செயல். பாரத நாட்டின் பண்பாட்டைப் பேணிக்காக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய பெருந் தொண்டில் ஈடுபட்டிருக்கும் R. S. S.; ஹிந்து முன்னணி, விஸ்வ ஹிந்து பரிஷத் ஆகிய ஸ்தாபனங்களுக்கு நாம் ஆதரவு நல்க வேண்டும்.

"நீங்கள் ஏற்றுக்கொள்ளும் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றி வாருங்கள். சமூகத்தில் ஒழுக்கக்கேடு, லஞ்சம் பெறுதல் போன்ற தீமைகள் மலிந்து வருகின்றன. நீங்கள் மனச்சாட்சிக்கு மதிப்பளித்து இத்தகைய தீமைகளிலிருந்து விலகியே இருக்கவேண்டும். செல்வச் செருக்கைவிட ஆன்மீகப் பலத்தை வளர்ப்பவனே இறுதியில் மேன்மையடைகின்ருன்.

"இறைவன் திருவருளால் நீங்கள் எல்லா நலன்களும் நிறையப்பெற்றுத் தேச பக்தியிலும், தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்குவீர்களாக."

இவ்விதம் சுவாமிஜி வழங்கிய ஆசியுரை கேட்போரை மகிழ்வித்து சிந்தனைக்கும் நிறைய வேலை கொடுத்தது. பின்னர் பழைய மாணவர்கள் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொண்டார்கள். பிறகு விருந்து உண்டு சிறிது ஓய்வு கொண்டார்கள். பிற்பகல் 3-00 மணிக்கு இறைவணக்கப் பாடலுடன் கூட்டம் மீண்டும் துவங்கியது. பள்ளியின் செயலர் சுவாமிகள் தமது உரையில் தேசத்தொண்டு, தெய்வத்தொண்டு, சமூகத் தொண்டு ஆகியவை ஒவ்வொரு வித்யாவன மாணவனுக்கும் இன்றியமையாத கடமைகள்

ஆகும் என்பதை வலியுறுத்தினர்கள். இந்து மக்களின் எழுச்சிக்காகப் பாடுபட்டுவரும் ஸ்தாபனங்களுக்கு நம்மால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்வதுடன், அவற்றின் பணி களிலும் நாம் கலந்துகொள்ள வேண்டும் என் ருர்கள். கடந்த பத்து ஆண்டுகளில் புதிதாகச் சேர்ந்த பழைய மாணவர்கள் சிலர் நிகழ்ச்சி களின்பொழுது இன்னும் அமைதி காத்து நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிருர்கள் என்பதை வலியுறுத்தினர்கள்.

தலைமை ஆசிரியர் அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே நமது தலைவர் சுவாமிஜி நீல கிரி மாவட்டத்தில் ஆற்றிய அரும்பெரும் ஆன் மீகப் பணிகளின் காரணமாய் இன்றும் இந்து மதம் அங்கு எவ்வாறு நிலைத்து வேரூன்றியுள் ளது என்பதை விளக்கமாக எடுத்துரைத் தார். ஊட்டியில் ஓர் அன்பருடைய வீட்டுக் குச் சென்றபோது அவர் தம் வீட்டுக் கதவை மிகவும் மெதுவாக மூடினர். கதவை மூடு வதிலும் இவ்வளவு பொறுமையா என்று வியந்து வினவியபோது அவர் கூறியதாவது: "ஐயா, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு முறை திருமடத்திற்கு வந்தபோது கதவை ஓங்கிச் சாத்தினேன். அதைக் கண்ட சுவாமிஜி என்னைத் தூக்கிக் கீழே போட் டார்கள். பிறகு "உனக்கு வலிக்கிறதா?" என்று கேட்டார்கள். "ஆம்" என்றேன். "வலிமை மிக்க உனக்கே அவ்விதமானல், ஒவ்வொருவரும் வலிந்து சாத்தினல் கத வின் கதி என்ன ஆகும்?" என்று புன்னகை யுடன் கேட்டார்கள் சுவாமிஜி. அன்று கற்ற பாடத்தை இன்றும் மறந்தேனில்லை." இவ் விதம் சொல் எதுவோ, அதுவே செயல் என்று வாழ்ந்து காட்டி வரும் ஆன்ருேர்க்ளிடம் பயின் றவர்களாகிய நாம் அவர்களிடமிருந்து கற்ற தைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக் கிருேம் என்பதைச் சுட்டிக்காட்டினர்.

அடுத்துப் பேசிய ஆசிரியப் பெருமக்களும் இக்கூற்றையே தமது உரைகளில் வலியுறுத்தி னர்கள். பழைய மாணவர்கள் நல்லமுறையில் தங்கள் குடும்பங்களை உருவாக்கி நாட்டுக்கும் நற்பணியாற்றி நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று அவர்கள் வாழ்த்தினர்கள். பின்னர் இந்த ஆண்டு ஓய்வு பெற இருக்கும் தமிழ் ஆசிரியருக்குப் பரிசுகொடுத்துப் பாராட்டிக் கெளரவித்தார்கள் பழைய மாணவர்கள். அடுத்து மாநில அளவில் நீந்தல்,கூடைப்பந்து, கைப்பந்து போன்று பல்வேறு விளையாட்டுக் களில் பெரும்பரிசுகள் (trophy, shield) பெற்ற இன்றைய மாணவர்கள் அறிமுகம் செய்விக்கப் பெற்றுர்கள். பழைய மாணவர்கள் கரவொலி எழுப்பித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

பழைய மாணவர் சங்கக் காரியதரிசி திரு. ராமமூர்த்தி அவர்கள் தபோவனம் திருநெல்வேலியிலும், மதுரையிலும் தொடங்க விருக்கும் கல்வி ஸ்தாபனங்களைப்பற்றி விளக் கினர். இவ்வமயம் பழைய மாணவர்கள் தபோ வனத்தில் டிபாசிட் செய்வது தபோவனம் மேற்கொண்டுள்ள கல்வி ஸ்தாபனங்களை உரு வாக்குவதற்குப் பயன்படும். இவ்விதம் டிபா சிட்மூலம் உதவிசெய்யப் பழைய மாணவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தபோவனத்திலிருந்து வெளிவரும் தர்மசக்கரம் மாதப் பத்திரிகைக்கு சந்தா சேர்த்துத்தரும் பணியிலும் பழைய மாணவர்கள் ஈடுபடவேண் டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாலை ஆறு மணிக்கு ஐக்கிய வணக்கத்தில் யாவரும் கலந்துகொண்டனர். அன்று கிறிஸ்து ஜயந்தியாதலால் கிறிஸ்து நாதரைத் துதிக்கும் பாடல்களையும் பாடினர். கிறிஸ்து ஓர் அரு ளாளரே. ஆனல் அவரது கொள்கைகளைப் பின்பற்றி ஆன்மீகத்தில் முன்னேருமல் பலர் மதம் மாற்றும் செயலையே இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிருர்கள். எனவே அவர்களுடைய செயலை நாம் கண்டிக்கவேண்டி யுள்ளது. ஆயினும் எண்ணிக்கைப்பலத்துக் காக எதையும் செய்ய வேண்டிய இழிநிலை இந்துமதத்திற்கு என்றுமே இல்லை. ஒவ்வொரு மனிதனையும் தூய ஆன்மாவாகவே அது கருதுகிறது. எனவே பிற மதத்துப் புண்ணிய புருஷர்களை மதிப்பதில் இந்துக்கள் தயக்கம் காட்டலாகாது. இரவு 9-00 மணியளவில் இன் றைய மாணவர்கள் நாடகங்கள் நடத்திக்காட் டிப் பழைய மாணவர்களை மகிழ்வித்தார்கள். ஆசிரியர்களும், தபோவனத்து அன்பர்களும் கலந்துகொண்டு கண்ணுரக்கண்டு களித்த விழா அந்த நிகழ்ச்சியோடு நிறைவு எய்தியது.

புண்ணியப் பொங்கல் வாழி!

(புலவர் க. தில்லைக் கோவிந்தன்)

பயிர்முதல் உயிர்கள் எல்லாம் பரத்தினைச் சாரு மேனும்
துயர்தரும் பிணிமூப் பெய்தித் தொல்லைவல் வினையால் வாடும்;
உயர்வற உயர்ந்த முன்னோன் ஒண்கழல் பற்றி நாளும்
அயர்வற நினைமின் என்னும் ஆன்மிகப் பொங்கல் வாழி!

"கைப்பொருள் உளவாம்; யாவும் கைவரும்" என்பா ரேனும்
பொய்ப்பொருள் அவைகள் நில்லா; போகமும் அளந்த வாறும்;
மெய்ப்பொருள் நாட்டங் கொண்டு மேல்வரும் பிறவி நீக்கும்
எய்ப்பினில் வைப்பைக் காட்டும் இறைநலப் பொங்கல் வாழி!

"அவர்க்கிவர் உழைத்தார்" என்பர் அவர்க்கிவர் உண்ணல் உண்டோ?
எவர்க்கெவர் விதிதான் மாறும்? எழுதிய எழுத்துப் பொய்யா;
சுவர்க்கநம் உள்ளத் துள்ளே; சூழ்தரு உலக பாசம்
உவர்க்கமெய்ஞ் ஞானம் ஊட்டும் ஒருபெரும் பொங்கல் வாழி!

ஊனுடல் வாழ்வு நச்சி உள்ளநாள் உலத்தல் காணார்;
மானுட யாக்கை எம்மான் மகிழ்ந்துறை கோயில் என்றே
கூனுடை நிலவு சூடும் கூத்தனைந் தொழிலை நோக்கி
வானுயர் வாழ்வு சேர்க்கும் மங்கலப் பொங்கல் வாழி!

ஆசைமூன் றகல நெஞ்சில் ஆற்றலன் பறிவு தோய
ஓசைஓங் கார நாத உட்பொருள் உணர்த்து மேலோர்
காசையே தொடாத தேவன் கனிமொழி அன்னை மைந்தன்
பூசையே தொண்டாய்க் கொள்ளும் புண்ணியப் பொங்கல் வாழி!

செய்திகள்

நிகழ்பவை:

23—1—85 புதன்கிழமையன்று பொங்கல் விடுமுறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யா வனக் குருகுலப் பள்ளி திறக்கப்படும்.

19—1—85 சனிக்கிழமை இரவு 7-00 மணிக்குக் கம்பம் வள்ளல் சன்மார்க்க சங்கத்தில் சுவாமி துருவானந்தர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

26—1—85 சனிக்கிழமை குடியரசு தினத்தன்று ராசிபுரம் ராமகிருஷ்ண மடத்தில் விவேகானந்த ஜயந்திவிழா நடைபெறும். அன்று மாலை சுவாமி துருவானந்தர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, —	21-00
மஹாபாரதம்	,, —	8-00
இராமாயணம்	,, —	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, —	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, —	6-50
தினசரி தியானம்	,, —	4-50
ஞானயோக விளக்கம்	—	15-00
ராஜயோக விளக்கம்	—	12-00
கர்மயோக விளக்கம்	—	10-00
பக்தியோக விளக்கம்	—	9-00
விவேகானந்த உபநிஷதம்	—	7-00
பரமஹம்சரின் பெருமை	—	6-00
கடவுளின் வடிவங்கள்	—	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	—	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	—	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	—	5-50
மாணவருக்கு ஒரு சொல்	—	4-50
சகோதரி நிவேதிதை	—	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	—	3-50
சுவாமி விவேகானந்தர்	—	3-50
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	—	3-00
அனுஷ்டான வேதாந்தம்	—	3-00
எதிர்கால இந்தியா	—	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	—	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	—	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	—	3-50
பரிபூரணானந்தம் ,,	—	3-00
சின்மயானந்த குரு ,,	—	3-00
ஆனந்தமானபரம் ,,	—	3-00
சுகவாரி ,,	—	3-00
மௌனகுரு வணக்கம் ,,	—	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ,,	—	2-50
மலைவளர் காதலி ,,	—	1-50
பரசிவ வணக்கம் ,,	—	1-00
கண்ணன் என்னும் கடவுள்	—	2-50
அறம் வளர்த்த நம்பி	—	2-50
சந்நியாசி	—	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	—	2-50
ஹரிச்சந்திரன் ,,	—	2-00
தவப்புதல்வர்கள் ,,	—	2-00
பாதுகா பட்டாபிஷேகம் ,,	—	1-75
விபீஷணன் சரணாகதி ,,	—	1-50
பரமஹம்சர் பாமாலை	—	1-50
காயத்ரீ	—	1-50
நன்மக்களைப் பெறுதல்	—	1-50
மாணிக்கன்	—	1-25
செத்தவர்கள் நம்மோடுபேசுகிறார்களா?	—	1-25
சைவன் யார்?	—	1-25
*ஆலய வழிபாடு	—	1-25

*ஆத்ம சக்தி	—	1-25
*மனிதனது நிஜசொரூபம்	—	1-25
*சிவதத்துவம்	—	1-25
இறைவணக்கம்	—	1-00
குழந்தைகளின் கவிக்கூடம்	—	1-00
இராவண தத்துவம்	—	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	—	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி(நாடகம்)	—	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	—	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	—	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	—	1-00
தபோபலன் (நாடகம்)	—	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	—	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	—	1-00
நோய்க்கு இடம் கொடேல்	—	1-00
*சக்தி தத்துவம்	—	0-90
*சூரியநாராயணன்	—	0-70
தெய்வீக மகிமைகள்	—	0-75
*முருகக்கடவுள்	—	0-75
வர்ணாச்ரம தர்மம்	—	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	—	0-60
*கணபதி	—	0-60
விஷ்ணு தத்துவம்	—	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	—	10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	—	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	—	0-30
கந்தர் அநுபூதி	—	0-25
The Bhagavd Gita (12th Imp.)	—	30-00
Sri Lalithambiha Sahasranama Stotram		15-00
The Indian National Education	—	10-00
Tirukkural (with plastic cover)	—	9-00
Ramakrishna lives Vedanda	—	8-00
Sri Bhagavad Gita (Small Size)	—	6-00
Man Making Message	—	7-00
Ramayana (with plastic cover)	—	7-00
Mahabharata ,,	—	6-00
Daily Divine Digest (DELUXE)	—	6-00
Daily Divine Digest (Ordinary)	—	4-00
Sri Krishna–The Manifest Divinity	—	6-00
Facets of Brahman or The Hindu Gods	—	5-00
Sri Vishnu Sahasranama Stotram	—	3-50
Thus Speaks Tayumana Swamigal	—	3-50
*Introducing The Gita	—	2-00
Holy Bible—In the Light of Vedanda	—	1-50
Reminiscences of Master Mahashaya	—	1-50
The Nursery School	—	1-50
The Garland of Paraaparam	—	1-50
*Key to Higher Life	—	1-25
*The Student	—	1-25
The Teacher	—	1-00

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சிராப்பள்ளி Dt.

அன்புடையீர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா 1985 பிப்ரவரி மீ 24ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிமுதல் 8-30 மணிவரை இங்குக் கொண்டாடப்பெறும். நீங்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்,
சித்பவானந்த

நிகழ்ச்சி முறை

24—2—85 ஞாயிறு மாலை

5-30 மணி முதல் 7-00 மணிவரை

குருகுல மாணக்கர் ஆடல், பாடல், பேச்சு முதலியன

7-00 மணிமுதல் 8-30 மணிவரை குருகுல மாணக்கர்களால்

தவப்புதல்வர்கள் என்னும் நாடகம்

தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. சிற்றுண்டிச்சாலை உண்டு.

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் அந்தர்யோகம்

1985 ஞு பிப்ரவரி மாதம் 26, 27, 28 தேதிகளாகிய மூன்று தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 9-00 வீதம் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின் பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்		4-30
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-00	5-30
காவேரி ஸ்நானம் முதலியன	5-30	6-30
காலை தியானம்	6-30	7-00
சிற்றுண்டி	7-00	
காலை உபந்யாசம்	8-30	9-30
மௌனம்	9-30	10-30
பஜனை	10-30	11-30
அர்ச்சனை, பூஜை	11-30	12-00

	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-00	2-30
மாலை உபந்யாசம்	2-30	3-30
தனியாக வாசித்தல்	3-30	4-30
பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-00
நாம ஜபம்	6-00	6-15
ஆரத்ரிகம், தியானம்	6-15	7-00
இரவு போஜனம்	7-00	
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30
நித்திரை	10-00	

உபந்யாசங்கள் :— யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத் ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.